விலை : 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

சங்கு 16 வள்ளுவர் ஆண்டு 2046 வைகாசி 32 திங்கட்கிழமை (15.06.2015) தொலைபேசி 222 3378, தொலைநகல் 222 7829 ஒலி 178

குருவாரம்
25வது ஆண்டு பீடாரோகணம்
தவத்திரு கணேசானந்த
மகாதேவசுவாமிகள்



ஆச்சிரம மண்டபம்
21.06.2015
ஞாயிறு
கிளிநொச்சி
மகாதேவ ஆச்சிரமம்
(C-1279)

# பிரதமருக்கு எதிரான பிரேரணை விவாதம் தொடர்பில் முரண்பாடு

## பிளவுபடும் நிலையில் ஐ.ம.சு.மு

(கொழும்பு)

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிராக நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப் பட்ட நம்பிக்கையில்லாப் பிரேரணையை விவாதத்துக்கு எடுத்துக் கொள்வது தொடர்பில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக்குள் கருத்து முரண்பாடுகள் தீவிர மடைந்துள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளன. (24ஆம் பக்கம் பார்க்க)

## ஐக்கிய தேசியக் கட்சியுடன் இரகசிய ஒப்பந்தம் செய்யவில்லை

### ஜனாதிபதி தெரிவிப்பு

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியுடன் தான எந்தவொரு இரகசிய உடன்படிக்கை யையும் செய்யவில்லையெனவும், எதிர்வரும் நாடாளுமன்றத் தேர் தலில் எந்தவொரு பிரதேசத்திலி ருந்தும் பிரதமர் ஒருவர் வரலாம் எனவும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார். தம்ப தெனியவில் 24ஆம் பக்கம் பார்க்க....

## ஒக்ரோபர் மாதம் வரையும் மேடை ஏறமாட்டார் மகிந்த?

### சோதிடரின் உத்தரவாம் இது

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 21-ம் திகதி வரையில் எவ்வித பிரபல மேடைகளுக்கும் ஏறமாட்டார் என தகவல் வெளி யாகியுள்ளது, அது பிரபல சோதிட ரின் அறிவுரைக்கமைய என தெரி விக்கப்படுகின்றது.

பிரபல சோதிடரின் அறிவு ரைக்கமைய அந்நாட்களுக்குள் மகிந்த ராஜபக்ஷ மேடைகளில் ஏறினால் அவருக்கு பெரியள விலான விபத்தொன்று ஏற்பட வாய்ப்புகள் காணப்படுவதாகவும், மக்கள் மத்தியில் மேலும் சரிவு ஏற்படுவதற்கு காரணமாகி விடும் எனவும் கூறப்படுகின்றது.

பல மாத காலமாக விமல், வாசு, தினேஷ், கம்மன்பில போன்ற அரசியலில் அநாதைகளாக்கப் பட்ட ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் மகிந்த ஆதரவாளர்கள் ஏற்பாடு செய்கின்ற 24ஆம் பக்கம் பார்க்க....

## மனைவி மீதான குற்றச்சாட்டை மறுத்தார் மகிந்த ராஜபக்ஷ



(கொழும்பு)

முன்னாள் முதல் பெண்மணி ஷிராந்தி ராஜபக்ஷவுக்கு எதிராக சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்களை முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மறுத்துள்ளார்.

சிரிலிய சவிய நிதியத்தில் இருந்து ஷிராந்தி நிதிக்கொள்ளை யில் ஈடுபட்டதாகவும் வீடு ஒன்றை கொள் 24ஆம் பக்கம் பார்க்க....

## 48 மணிநேர காலத்துக்குள் ரணிலை வீட்டுக்கு அனுப்புவோம்

### தினேஷ் எம்.பி தெரிவிப்பு

(கொழும்பு)

பிரதமர் ரணில் விக்கிரமசிங் கவை 48 மணிநேரத்தில் வீட்டுக்கு அனுப்ப முடியும் என மக்கள் ஐக் கிய முன்னணியின் தலைவரான நாடாளுமன்ற உறுப்பினர் தினேஷ் குணவர்தன தெரிவித்துள்ளார்.

அம்பாறை புதிய நகர மண்ட பத்தில் நேற்று நடைபெற்ற மக்கள் ஐக்கிய முன்னணியின் கூட்டத்தில் பேசும் போதே அவர் இதனைக் கூறி யுள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சி அரசாங் கத்தால், நிலைக்க முடியாது. அது சிறுபான்மை அரசாங்கம்.

முற்போக்கான சக்திகளுடன் கூடிய 130 நாடாளுமன்ற உறுப் பினர்கள் 24ஆம் பக்கம் பார்க்க....

## மாணவி வித்தியா படுகொலை 2ஆம் அமர்வு விசாரணை இன்று!

(கொழும்பு)

புங்குடுதீவு மகா வித்தியாலய மாணவி சி.வித்தியா கொலை வழக்கு விசாரணையின் இரண் டாவது அமர்வு ஊர்காவற்றுறை நீதிமன்றில் இன்று நடைபெறவுள் ளது.

இன்று நடைபெறும் அமர்வில் வித்தியாவின் தாய் மற்றும் சகோ தரன் ஆகியோர் நீதிமன்றில் சாட்சியம் அளிப்பார்கள் என எதிர்பார்க்கப்படும் அதேவேளை, மரண விசாரணையும் நடைபெற வுள்ளதாக தெரியவருகின்றது.

இதேநேரம் இன்று நடைபெற வுள்ள மரண விசாரணையில் பல் வேறு திடுக்கிடும் தகவல்கள் வெளியா கலாமென எதிர்பார்க்கப்படுகிறது.

பாலியல் வன்புணர்வுக்குப் பின் படுகொலை செய்யப்பட்ட மாணவி சி.வித்தியாவின் கொலை தொடர்பில் இலங்கை முழுவதும் பல்வேறு கண்டனங்கள் வெளி யிடப்பட்டுவந்த நிலையில், விசா ரணைகளில் பொலிஸ் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றனர்.

அந்தவகையில் இன்று பொலி ஸார் தமது 24ஆம் பக்கம் பார்க்க....

## 100 நாட்களுக்குப்பின் ரணில் பிரதமர் அல்ல !

### விஜித ஹேரத் தெரிவிப்பு

(கொழும்பு)

100 நாட்களுக்கு பின்னர் பிரத மராக செயற்பட ரணில் விக்கிரம சிங்கவுக்கு எந்த வகையான தார்மீக உரிமைகளும் கிடையா தென மக்கள் விடுதலை முன்னணி யின் பிரசார செயலாளர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.

அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ள தாக சிங்கள ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது,

ரணில் விக்ரமசிங்க, அமைச் சரவை அமைச்சர்கள் மற்றும் எதிர்க்கட்சி தலைவருக்கும் தங்கள் பதவிகளில் தொடர்ந்து செயற்படு வதற்கு எந்த வகையிலான தார்மீக உரிமைகளும் கிடையாதென அவர குறிப்பிட்டுள்ளார்.

ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி உறுப் பினர்கள் 24ஆம் பக்கம் பார்க்க....

## கஞ்சாவிற்ற இருவர் கைது

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் திருநகர் திட்டி பகுதியில் ஒரு கட்டு கஞ்சா பொதி யுடன் 2 சந்தேக நபர்களை யாழ் தலைமை பொலிஸ் நிலைய சட்ட விரோத செயல்கள் தடுப்பு பிரி வினர் நேற்று கைது செய்துள்ள னர்.

அதே இடத்தை சேர்ந்த 24 மற் றும் 35 வயதுடைய இருவரையே பொலிஸார் கைது செய்துள்ள னர்.

இவர்கள் பாடசாலை மாண வர்களுக்கு 24ஆம் பக்கம் பார்க்க....

நடுவுநிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 1 இலட்சம் சிறுவர் தொழிலாளிகள் இலங்கையில் உள்ளனர்

(கொழும்பு)

இலங்கையில் சுமார் 107,000 சிறுவர் தொழிலாளிகள் இருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

2008ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட ஆய்வின் போது இந்த தகவல் வெளியானதாக தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் தலைவர் நட்டாஸா பாலேந்திரா தெரிவித்துள்ளார்.

இந்த நிலையில் சிறுவர் தொழிலாளிகள் தொடர்பில் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

சிறுவர்களுக்கு உரிய கல்வி வழங்கப்பட வேண்டியது அவர்களின் உரிமையாகும்.

எனினும் பல சிறுவர்கள் இன்று தொழிலாளிகளாக மாற்றப்பட்டுள்ளனர் என்று நட்டாஸா தெரிவித்துள்ளார்.

இலங்கையின் கல்விக் கொள்கையை பொறுத்தவரையில், 18 வயது வரை அவர்கள் பாடசாலை கல்வியை பெறவேண்டும்

இதற்கு கீழ் உள்ள சிறுவர்கள் தொழிலில் ஈடுபடுத்தப்பட்டால் இது சிறுவர் தொழிலாளிகளாக கருதப்படுவர் என்று நட்டாஸா குறிப்பிட்டுள்ளார். (எ-1)

# மஹோற்சவ விஞ்ஞாபனம்

(யாழ்ப்பாணம்)

கோண்டாவில் வடக்கு அருள்மிகு மனோன்மணி அம்பிகா சமேத ஸ்ரீ சிவபூதவராய சுவாமி தேவஸ்தானத்தின் வருடாந்த மஹோற்சவம் இன்று திங்கட்கிழமை காலை 11 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து பத்து தினங்கள் நடைபெறவுள்ளன.

எதிர்வரும் 23ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 10 மணிக்கு தேர்த்திருவிழாவும் மறுநாள் 24ஆம் திகதி புதன்கிழமை காலை 10 மணிக்கு தீர்த்தோற்சவமும் இடம் பெறவுள்ளன. (எ-1)

# கிழக்கு மாகாண நிதி ஒதுக்கீட்டில் தமிழர் பகுதிகள் புறக்கணிப்பு!

## கண்டித்து துண்டுப்பிரசுரம்

(மட்டக்களப்பு)

கிழக்கு மாகாண சபையின் நிதியொதுக்கீடுகளில் தமிழ் பகுதிகள் புறக்கணிக்கப்பட்டதாக கோரி தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சி துண்டுப் பிரசுர போராட்டங்களை முன்னெடுத்துள்ளது.

கிழக்கு மாகாண சபையின் ஊழலை வெளிப்படுத்துவோம் என்ற தொனிப்பொருளில் இந்த துண்டுப்பிரசுர போராட்டம் நேற்று மட்டக்களப்பில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் பிரதிப்பொதுச் செயலாளர் ஜோர்ஜ்பிள்ளையின் தலைமையில் கட்சியின் ஆதரவாளர்களால் மட்டக்களப்பு நகரில் இந்த துண்டுப் பிரசுரங்கள் விநியோகிக்கப்பட்டன.

கிழக்கு மாகாண சபை நிதி ஒதுக்கீட்டில் எவ்வித வெளிப்படுத்தலுமே பேணப்படாமல் முதலமைச்சரும், மாகாண சுகாதார அமைசசரும் இணைந்து திட்டமிட்ட வகையில் நிதி ஒதுக்கீட்டினை அம்பாறை முஸ்லிம் பகுதிகளுக்கும், மட்டக்களப்பு முஸ்லிம் பகுதிகளுக்கும் கொண்டு செல்கின்றனர்.

இதனை மாகாண சபை வாரியத்தில் அங்கம் வகிக்கின்ற தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் இரு அமைச்சர்களும் வேடிக்கை பார்க்கின்றனர்.

இதனைவிட மாகாண சபையினால் வழங்கப்பட்டு வருகின்ற நியமனங்களில் தமிழ் இளைஞர், யுவதிகள் புறக்கணிக்கப்பட்டு முஸ்லிம்களுக்கு முன்னுரிமை வழங்கப்படுவதுடன் நியாயமாக நடக்கின்ற தமிழ் உயர் அதிகாரிகள் முதலமைச்சரின் பணிப்புரையினால் இடமாற்றம் செய்யப்பட்டு அவ்விடத்திற்கு தமது முஸ்லிம் சமூகத்தினரை நியமித்து மாகாணத்தின் நிதி நிருவாக மூல ஆதாரங்களையும் தம்வசப்படுத்தி வருகின்றனர் என அத் துண்டுப் பிரசுரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. (எ-1)


# ஆத்மசாந்திப் பிரார்த்தனை

**சிவஸ்ரீ இராசையா ஐயர் கந்தசாமி ஐயர்**

எமது ஆலயத்தில் நீண்ட காலமாக வருடம் தோறும் மஹோற்சவ காலத்தில் பெரும் தொண்டாற்றுபவரும் எமது குடும்பத்தின் மீது பேரன்பும் விசுவாசமும் கொண்ட சுட்டிவேரம் அம்மன் கோயில் அர்ச்சகராக கடமையாற்றும் உச்சிலம்மன் கோயிலடி கரணவாய், கரவெட்டியைச் சேர்ந்த **சிவஸ்ரீ ஐங்கரன் ஐயர்** அவர்களின் தந்தையார் **சிவஸ்ரீ இராசையா ஐயர் கந்தசாமி ஐயர்** அவர்களின் ஆன்மா பரந்த உலகை ஆட்சி செய்யும் பராசக்தியின் பாதங்களில் சென்று அமைதி பெற எல்லாம் வல்ல வீரகத்தி விநாயகரை பிரார்த்திக்கின்றோம்.

இங்ஙனம்

**சிவஸ்ரீ து.விவேகானந்தக் குருக்கள்**

யாழ்/வண் வட கிழக்கு கலட்டி ஸ்ரீ வீரகத்தி விநாயகர் தேவஸ்தான

ஆதீன கர்த்தாவும், பிரதமகுருவும்.

(753)


# பயணிகள் படகுகளுக்கு தரப் பரிசோதனை!

## நயினாதீவில் நேற்று ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

குறிகாட்டுவான் - நயினாதீவு பயணிகள் படகுச் சேவையில் ஈடுபடும் படகுகளின் தரத்தை உறுதிப்படுத்துவதற்கான தரப்பரிசோதனை நேற்று திடீரென மேற்கொள்ளப்பட்டுள்ளது.

கொழும்பிலிருந்து வருகைதந்த மேச்சண்ட் சிப்பிங் நிறுவனப் பணிப்பாளர் அஜித் செனவிரத்ன, பிரதான கடற்பொறியியலாளர் பந்துல காரியவம்சம், கப்டன் சுனில் ஜெயவீர, கப்டன் சி.ஏ.சி சில்வா, யாழ்.மாவட்ட செயலக அதிகாரிகள் மற்றும் பிரதேச செயலக அதிகாரிகள் இதில் கலந்து கொண்டனர்.

நேற்றுப் பிற்பகல் 2 மணியளவில் ஆரம்பிக்கப்பட்ட இந்த திடீர்ப் பரிசோதனை இன்றைய தினமும் தொடரவிருக்கிறது.

குறிகாட்டுவான் இறங்குதுறையில் சேவையில் ஈடுபடுகின்ற 54 படகுகள் இந்தப் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டிருக்கின்றன. தரப்பரிசோதனையின் பின்னர் தகுதியான படகுகளுக்கு தரச்சான்றிதழ் வழங்கப்படவிருக்கிறது.

இதேவேளை நெடுந்தீவு - நயினாதீவு இடையிலான பயணிகள் படகுச் சேவையில் ஈடுபடும் படகுகளும் தரப் பரிசோதனைக்கு உட்படுத்தப்படவிருக்கின்றன. (எ-3,9)

# மதுபானத்தின் சொர்க்கபுரி

யாழ்ப்பாணத்தில் மதுபானத்தின் பாவனை 2009 இன் பின்னர் பல மடங்குகள் அதிகரித்துள்ளன என புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன.

மதுவரித் திணைக்களத்தின் ஆதாரங்களின்படி 2009 இல் யாழ்ப்பாணத்தில் 7 இலட்சத்து 62 ஆயிரத்து 610 லீற்றர் பியர் நுகரப்பட்டது.

அதுவே 2013 இல் ஐந்து மடங்கால் அதிகரித்து 40 இலட்சத்து 56 ஆயிரத்து 999 லீற்றர் பியர் நுகரப்பட்டது. தற்போது இது இரண்டு அல்லது மூன்று மடங்கால் அதிகரித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதேபோன்று வெளிநாட்டு மதுபான வகைகளின் நுகர்வு 800 வீதத்தால் அதிகரித்துள்ளதாகத் தெரியவந்துள்ளது. 2009 இல் வெளிநாட்டு வகை 6 ஆயிரத்து 598 லீற்றர் மதுபான வகைகள் நுகரப்பட்டன. ஆனால் 2013 இல் 61 ஆயிரத்து 134 லீற்றர் வெளிநாட்டு மதுபான வகைகள் நுகரப்பட்டன எனத் தெரியவந்துள்ளது.

மேலும் 2009 இல் 5 இலட்சத்து 67 ஆயிரத்து 756 லீற்றர் மதுபானம் அருந்தப்பட்டது. இது 2013 இல் 20 இலட்சத்து 19 ஆயிரத்து 434 லீற்றராக அதிகரித்தது. கள்ளின் நுகர்வும் 2009 ஐ விட 2013 இல் இரு மடங்காக அதிகரித்துள்ளது.

2009 இல் இதன் நுகர்வு 30 இலட்சத்து 51 ஆயிரத்து 959 லீற்றர்களாகவும், 2013 இல் 56 இலட்சத்து 63 ஆயிரத்து 60 லீற்றர்களாக உயர்வடைந்தது.

2015 இன் புள்ளிவிவரங்கள் கிடைக்கப் பெறாத போதும் ஒட்டுமொத்தமாக மதுபானத்தின் நுகர்வு 2013 இலும் விட பன்மடங்கு அதிகரித்துள்ளது எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (எ-1)

# வேற்றுக் கிரகவாசிகளின் வருகையை உறுதிப்படுத்தியது அமெரிக்கா

(வாஷிங்டன்)

அமெரிக்காவின் உளவுப் பிரிவான எப்.பி.ஐ (FBI) வேற்றுக்கிரகவாசிகள் பூமிக்கு இறங்கியதான தகவல்களை உறுதி செய்துள்ளது.

இதற்கான ஆவணங்களை அமெரிக்க உளவுப் பிரிவு அதன் இணையத்தளத்தில் வெளியிட்டுள்ளது.

வேற்றுக்கிரகத்தில் உள்ளவர்கள் அடிக்கடி பூமிக்கு வந்து செல்வதாக நீண்டகாலமாக உறுதிப்படுத்தப்படாமல் இருந்ததுடன் அது பற்றி இடையிடையே செய்திகள் வெளிவருவதும் பரபரப்பாக பேசப்படுவதும் நடைபெற்ற வண்ணமிருக்கின்றது.

எனினும் அதுபற்றி உறுதிப்படுத்தப்பட்ட தகவல்கள் எவையும் உத்தியோகபூர்வமாக வெளியிடப்பட்டிருக்கவில்லை.

இந்நிலையில் விஞ்ஞானிகளும் எப்.பி.ஐ அதிகாரிகளும் மேற்கொண்ட ஆய்வுகளில் இதற்கான ஆதாரங்கள் உறுதி செய்யப்பட்டிருக்கிறது.

மேற்படி வேற்றுக்கிரகவாசிகள் தொடர்பாக விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காகவே இந்த உறுதிப்படுத்தப்பட்ட ஆவணங்கள் வெளியிடப்பட்டுள்ளன.

இதுதொடர்பான விபரங்களை www.vault.fbi.gov என்ற இணையத்தளத்தில் அறிந்து கொள்ளமுடியும்.

முக்கியமான 6 விடயங்களின் அடிப்படையில் இந்த தகவல்கள் உறுதி செய்யப்பட்டுள்ளன. பறக்கும்தட்டுக்கள் பொதுவாக பூமிக்கு வருகிறது. அவர்களின் குறிக்கோள் அமைதியானதாக இருப்பதாக தெரிவிக்கப்படுகின்றது.

வந்தவர்கள் விமானத்தை நிலைநிறுத்துவதில் ஆழ்ந்து சிந்திக்கின்றனர் என்பன உள்ளிட்ட முக்கிய விடயங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. (எ-3)

# மானிப்பாய் அந்தோனியார் தேவாலய திருவிழாவின்போது திருட்டு

## யுவதிகள் இருவர் கைது; சங்கிலிகள் மீட்பு

(யாழ்ப்பாணம்)

மானிப்பாய் அந்தோனியார் தேவாலய திருவிழாவின்போது சங்கிலித் திருட்டில் ஈடுபட்ட இரு இளம் பெண்கள் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர். நேற்றுக் காலை இடம்பெற்ற பெருநாளில் பெருந்தொகையான பக்தர்கள் வழிபாட்டில் ஈடுபட்டனர்.

இச் சந்தர்ப்பத்தினை பயன்படுத்தி குறித்த இரு யுவதிகளும் திருட்டில் ஈடுபட்டுள்ளனர்.

திருடப்பட்ட சங்கிலிகள் சேதமுறாத வகையில் மிகவும் நூதனமாக இத்திருட்டு இடம்பெற்றதாக பொலிஸார் தெரிவித்தனர்.

அத்துடன் ஆறு சங்கிலிகள் அறுக்கப்பட்டதாக பொலிஸாருக்கு முறைப்பாடு கிடைத்ததாகவும் எனினும் விசாரணைகளின்போது யுவதிகளின் உள்ளாடையில் மறைத்து வைத்திருந்த மூன்று சங்கிலிகளும் தாலிக்கொடி ஒன்றினையும் தாம் கைப்பற்றியதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை மானிப்பாய் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (எ-1,4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீன்பிடி வலைகள் வழங்கி வைப்பு



(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறையினை சேர்ந்த தெரிவு செய்யப்பட்ட கடற்றொழிலாளர்களுக்கு அவர்களின்வாழ்வாதாரத்தைஊக்குவிக்கும்வகையில் கடற்றொழில் அமைச்சினால் மீன்பிடி வலைகள் வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

இவ்வலைகளை சிறுவர் மற்றும் மகளிர் விவகார பிரதியமைச்சர் திருமதி விஜயகலா மகேஸ்வரன் வழங்கி வைத்துள்ளார்.

பருத்தித்துறை பிரதேச செயலகத்தில் நேற்று முன்தினம் நடை பெற்ற இவ்வுதவி வழங்கும் நிகழ் வில் 53 கடற்றொழிலாளர்களுக்கு மீன்பிடி வலைகள் வழங்கப்பட்டுள்ளன.

இவ்வாறு வழங்கப்பட்டுள்ள 6 வலைகளும் 20 ஆயிரம் ரூபா பெறுமதியானவை என தெரிவிக்கப் பட்டுள்ளது. (இ-4)

# இசற் புள்ளியினூடாகவே பல்கலைகளுக்கு அனுமதி

(கொழும்பு)

எதிர்வரும் காலங்களில் இசற் புள்ளியினூடாக மாத்திரம் பல்கலைக்கழகங்களுக்கு மாணவர்களை இணைத்துக் கொள்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாக, பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

திறைமைகளின் அடிப்படையில் பல்கலைக்கழகத்திற்கு மாணவர்கள் உள்ளீர்க்கப்படுவதே இதன் முக்கிய நோக்கம் என பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் பேராசியர் மொஹான் பீரிஸ் சுட்டிக்காட்டியுள்ளார்.

அதற்கமைய தேரர்களை பல்கலைக்கழகங்களுக்கு உள்ளீர்ப்பதற்கான விசேட திட்டம் முன்னெடுக்கப்படுவதில்லை எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை விசேட தேவையுடையோருக்கான வரப்பிரசாதங்களில் எவ்வித மாற்றங்களும் முன்னெடுக்கப்படவில்லை எனவும் பேராசியர் மொஹான் பீரிஸ் தெரிவித்துள்ளார்.

இதனிடையே பல்கலைக்கழங்களுக்கு தேரர்களை இணைத்துக் கொள்வது தடைப்பட்டுள்ளதாக தெரிவித்து முன்னெடுக்கப்பட்ட ஆர்ப்பாட்டமானது தொடர்ந்தும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. (இ-5)

# புதிய குடியுரிமைச் சட்டத்தினால் இலங்கையர்களுக்கு பாதிப்பா?

## மூத்த அரசியல் ஆய்வாளர் விளக்கம்

(கொழும்பு)

கனடாவில் அமுல்படுத்தப்பட்டுள்ள புதிய குடிவரவு சட்டத்தின் கீழ், இரண்டாம்தர பிரஜைகள் பாதிப்படையக்கூடிய வாய்ப்பு உள்ளதாக பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டிருந்தது.

குறிப்பாக ஒரு இலட்சத்து 40ஆயிரத்திற்கும் மேற்பட்ட இலங்கையர்கள் குடியுரிமை இழக்கப்பட்டு நாடுகடத்தப்படும் நிலை ஏற்படலாம் என குறிப்பிடப்பட்டிருந்தது.

இந் நிலையில் புதிய சட்டத்தின் கீழ் சிறுபான்மை மக்களுக்கு பாதிப்பு இருந்தாலும், குடியுரிமை பறிக்கப்பட்டு, நாடு கடத்தக் கூடிய வாய்ப்பு கடினம் என கனடாவில் வசித்து வரும் மூத்த அரசியல் ஆய்வாளர் நேரு குணரெட்னம் தெரிவித்துள்ளார்.

இணையத்தளம் ஒன்றுக்கு வழங்கிய சிறப்பு நேர்காணலின் போது, கனடாவின் புதிய குடியுரிமை சட்டத்தின் சாதக பாதக நிலையை விரிவாக விபரித்துள்ளார். (இ-5)


## யாழ்.வண் வடகிழக்கு கலட்டி ஸ்ரீ வீரகத்தி விநாயகர் தேவஸ்தானம்

இன்று ஆறாம் நாள்



வினைகள் தீர்ப்பவனே விக்ன விநாயகனே கணபதியே
வீரகத்தி விநாயகனாய்க் கலட்டியில் உறைபவனே!
உனை நாம் பணிந்தே உன் நாமம் உச்சரித்தோம் ஐயா
ஊரவர் நாம் ஒன்றுகூடி விழாவெடுத்து வணங்கியே
பனையளவு துயரத்தை நீ திணையளவாக்கி அருள்வதனால்
பாரிலுள்ளோர் அனைவரும் பணிந்தே துதிக்கின்றார்!
சுனை நீரைச் சடையில் வைத்த சங்கரனார் திருமகனே!
சுப்பிரமணியரின் அண்ணாவே! கஜமுகனே சரணம்! சரணம்!!

நாச்சிமார் கோவிலடி
கே.கே.எஸ் வீதி,
யாழ்ப்பாணம்.

சுஜீவா வைத்தியசாலை
(தாய்மைப்பேற்று சிறப்பு சித்த ஆயுர்வேத வைத்தியசாலை)

(C-1238)



## கல்யாண மாலை

### இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு: 1981 இந்து
நட்சத்திரம்: சதயம்
கி.பா: 24 செவ் 2 இல்
உயரம்: 6'
தகைமை/தொழில்: A/L (கனடா PR)
தொ.இ: B/4080

பிறப்பு: 1987 இந்து
நட்சத்திரம்: அத்தம்
கி.பா: 14 1/2 சூரிசெவ் 2இல்
உயரம்: 5'6"
தகைமை/தொழில்: BBM/ தனியார்
தொ.இ: B/4081

பிறப்பு: 1985 இந்து
நட்சத்திரம்: மிருகசீரிடம்
கி.பா: 34
உயரம்: 5'8"
தகைமை/தொழில்: கணக்காளர்
தொ.இ: B/4082

பிறப்பு: 1985 இந்து
நட்சத்திரம்: கார்த்திகை
கி.பா: 25
உயரம்: 5'9"
தகைமை/தொழில்: ஆசிரியர்
தொ.இ: B/4083

### இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு: 1981 இந்து
நட்சத்திரம்: கேட்டை
கி.பா: 9 1/2 சூரிசெவ் 11 இல்
உயரம்: 5'3"
தகைமை/தொழில்: A/L/ தனியார்
தொ.இ: G/282

பிறப்பு: 1971 இந்து
நட்சத்திரம்: பூரம்
கி.பா: 43
உயரம்: 5'1"
தகைமை/தொழில்: பட்டதாரி/ ஆசிரியர்
தொ.இ: G/287

பிறப்பு: 1976 இந்து
நட்சத்திரம்: மகம்
கி.பா: 32 சூரிசெவ் 8 இல்
உயரம்: 5'2"
தகைமை/தொழில்: BA/ ஆசிரியர்
தொ.இ: G/290

பிறப்பு: 1977 இந்து
நட்சத்திரம்: புனர்பூசம்
கி.பா: 55 சூரிசெவ் 4 இல்
உயரம்: 5'2"
தகைமை/தொழில்: O/L
தொ.இ: G/291

## கல்யாண மாலை

(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:- 021 720 1005
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.


# இராசி பலன்

15.06.2015
(வைகாசி 32, திங்கட்கிழமை)
சூரிய உதயம் காலை 5.55 மணிக்கு
சதுர்த்தசி முன்னிரவு 9.00 மணிவரை
கார்த்திகை முற்பகல் 6.46 மணிவரை
இராகுகாலம் 7.23-8.53 மணிவரை
சுபநேரம் 11.53-1.23 மணிவரை
புதூர் நாகதம்பிரான் பொங்கல்.

| | | | |
|---|---|---|---|
| கேது | | செவ், சூரி, புதன், சந் | |
| | கிரகநிலை வைகாசி 32 | | குரு சுக் |
| | | | |
| | | சனி | ராகு |

வளவன்

**மேடம்:** நினைத்ததை முடித்து நிம்மதி காணும் நாள், அடிப்படை வசதி வாய்ப்புக்களைப் பெருக்கிக் கொள்ள முற்படுவீர்கள், வீட்டை அழகாக வைத்திருக்கும் எண்ணம் மேலோங்கும், வாக்கு மேன்மையுண்டு.

**இடபம்:** குடும்ப பொறுப்புக்கள் கூடும் நாள், நண்பர்கள் நம்பிக்கைக்குரியவர்களாக நடந்து கொள்வர், எந்தவொரு வேலையையும் நாளையென்று தள்ளி வைக்காமல் இன்றே செய்து முடிப்பீர்கள்.

**மிதுனம்:** விரயங்கள் ஏற்படாதிருக்க விழிப்புணர்வுடன் செயற்படுவது நல்லது, வழிபாட்டால் திருப்தி காண வேண்டிய நாள், ஆதாயமில்லாத அலைச்சல்கள் இடம்பெறலாம்.

**கடகம்:** உற்சாகத்துடன் பணிபுரிவீர்கள், குடும்பச் செலவுகளில் தாராளம் காட்டுவீர்கள், அரசு வழியில் எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கப்பெறுவீர்கள், எடுத்த காரியங்கள் எளிதில் கைகூடும் நாள், கீர்த்தியுண்டு.

**சிம்மம்:** தொட்ட காரியங்கள் துளிர்விடும் நாள், உற்ற நண்பர்கள் உறுதுணையாக இருப்பர், உற்சாகத்துடன் பணிபுரிந்து பலரது பாராட்டுக்களையும் பெறுவீர்கள், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும்.

**கன்னி:** பற்றாக்குறை தீர்ந்து பணவரவு கிடைக்கும் வாய்ப்புண்டு, தொழில் முன்னேற்றத்திற்கு நண்பர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும், எதிர்பாராத பயணங்கள் இடம்பெறலாம், ரோக பயமுண்டு.

**துலாம்:** புதிய முயற்சியில் சிறு தாமதங்கள் ஏற்படலாம், கவனக்குறைவால் சில பொருட்கள் விரயமாகலாம், பிரயாண பயமுண்டு, பொது வாழ்வில் வீண்பழிகள் ஏற்படாமல் பார்த்துக் கொள்வது நல்லது.

**விருச்சிகம்:** உறவினர் வருகையால் உற்சாகம் அடைவீர்கள், வருமானம் திருப்திதரும் வகையில் அமையும், சென்ற இடத்தில் செல்வாக்கு மேலோங்கும் நாள், முயற்சிகளில் முன்னேற்றம் காண்பீர்கள்.

**தனுசு:** காலை நேரத்திலேயே கலகலப்பான செய்திகள் வந்து சேரலாம், ஆற்றல் மிக்கவர்கள் உங்களுக்கு பின்னணியாக செயற்படுவர், அடுத் தவர் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள்.

**மகரம்:** பொருளாதார நிலையில் முன்னேற்றம் ஏற்படலாம், செய்தொழில் மேன்மையுண்டு, பிள்ளைகளால் பெருமைகள் வந்து சேரலாம், புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**கும்பம்:** மைத்துனர் வழியில் மனதிற்கினிய சம்பவமொன்று நடைபெறலாம், தொழில் முயற்சியில் எதிர்பார்த்த நற்பலன் கிடைக்கும், புண்ணிய காரியங்களுக்கு செலவுகள் செய்து மகிழ்வீர்கள்.

**மீனம்:** குடும்பத்தினர் உங்களின் குணமறிந்து நடந்து கொள்வர், வருமானம் திருப்திதரும் வகையில் அமையும், நீண்ட நாளைய பிணக்குகளில் திருப்பங்கள் ஏற்படலாம், வெற்றிகரமான செய்திகள் வந்து சேரும் நாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொழில் ரகசியம்: சவுத்வெஸ்ட் சொல்லிதரும் பாடம்?

ஒரு விமான கம்பனிக்கு ஒரு பெண்மணி சதா குற்றம் கண்டு பிடித்து மெயில் அனுப்பிக் கொண்டே இருந்தார். ஒவ்வொரு மெயிலுக்கும் மரியாதையுடன் பதில் அனுப்பிய வாடிக்கையாளர் சேவைப் பிரிவு கடைசியில் கடுப்பாகி அடுத்த மெயிலை கம்பனி சிஇஓ 'ஹெர்ப் கெல்ஹர்' பார்வைக்கு அனுப்பியது.

அவர் ஒரே வரியில் பதில் எழுதினார்: 'அன்புள்ள பெண்மணியே, உங்களை மிகவும் மிஸ் பண்ணப் போகிறோம். நன்றி ஹெர்ப்'. இனி எங்கள் பிளேனில் ஏறாதீர்கள் என்ற அர்த்தத்தில் பதில் அனுப்பினார்!

**குறைந்த கட்டண விமான நிறுவனம்**

இப்படிப்பட்ட கம்பனி எங்கே உருப்படப்போகிறது என்றுதானே நினைக்கிறீர்கள்? இது அநியாயத்திற்கு உருப்பட்ட கம்பனி. வெற்றிகரமான நிறுவனம். அமோகமாக பணம் பண்ணும் பிராண்ட். சுமார் நாற்பத்தெட்டு வருடங்களாக சக்கைப் போடு போடும் விமான சேவை நிறுவனம் இது.

உலகில் நூற்றுக்கணக்கான விமான சேவை கம்பனிகள் இழுத்து மூடப்பட்டுக் கொண்டிருக்க, இருக்கும் கம்பனிகள் மூச்சை இழுத்துக்கொண்டிருக்க, எந்த இளிச்சவாயன் கம்பனியில் கட்டலாம் என்று மீதி நிர்வாகங்கள் ஏங்கிக் கொண்டிருக்க, இந்த கம்பனி மட்டும் ஆண்டு தோறும் லாபத்தைத் தவிர வேறு பார்த்ததில்லை. வெற்றியைத் தவிர வேறு பார்த்ததில்லை. வளர்ச்சியைத் தவிர வேறு கண்டதில்லை. கம்பனியின் பெயர் 'சவுத்வெஸ்ட் ஏர்லைன்ஸ்'. அமெரிக்க நகரங்களை பஸ் டிக்கட் விலையில் இணைக்கும் அசாத்திய குறைந்த கட்டண விமான நிறுவனம்.

உலகெங்கும் விமான சேவை பிராண்டுகள் இறக்கும் தருவாயில் தவிக்க, உயரப் பறந்து இந்த கம்பனி சிறக்கும் ரகசியம் என்ன? இதை விளக்குகிறது 'நட்ஸ்!' (Nuts) என்ற புத்தகம். 'கெவின்' மற்றும் 'ஜாக்கி /ப்ரைபெர்க்' தம்பதி எழுதியது.

நட்ஸ் என்றால் ஆங்கில பேச்சு வழக்கில் கிரேசியாக இருப்பதென்று அர்த்தம். ஒரு கிரேசி மனிதனால் தொடங்கப்பட்டு, கிரேசி நிர்வாகத்தால் நிர்வகிக்கப்பட்டு, கிரேசியான ஊழியர்களால் நடத்தப்படும் ஒரு மகா கிரேசியான ஏர்லைன சவுத்வெஸ்ட்!

**உணவு, டிபன் கிடையாது?**

அறுபதுகளில் ஆரம்பிக்கப்பட்ட இந்த விமான சேவையின் தாரக மந்திரம் குறைந்த விலையில் டிக்கட். குறைந்த விலை என்பதால் மற்ற விமான சேவை கம்பனிகள் போல் உணவு, டிபன், ஸ்நாக்ஸ் எதையும் தர மாட்டார்கள். வெறும் வேர்கடலை பாக்கட்தான். இத்தனை ஏன், போர்டிங் கார்டில் நம்பர் கிடையாது. ஜன்னல் சீட் வேண்டுமென்றால் முண்டியடித்து ஏறி துண்டு போட்டுப் பிடிக்க வேண்டும். ஆனால் இவர்கள் வெற்றிக்கு காரணம் குறைந்த விலையில் நிறைந்த சேவை தருவது தான். சேவை என்றால் உங்க வீட்டு சேவை எங்க வீட்டு சேவை அல்ல யாரும் காணாத வாடிக்கையாளர் சேவை.!

எந்த விமான கம்பனியும் குறைந்த விலை நிர்ணயித்து சாதா சேவை தரமுடியும். அதேபோல் எந்த விமான கம்பனியாலும் அதிக விலை நிர்ணயித்து சிறந்த சேவை தர முடியும். ஆனால் சவுத்வெஸ்ட் ஏர்லைன்ஸ் மட்டும்தான் குறைந்த விலையில் சிறந்த சேவை அளிக்கிறது. அதனாலேயே போற்றத்தக்க விமான சேவைகளில் ஒன்றாக பெயரெடுத்து அதோடு சந்தையில் முன்னணியில் இருக்கிறது!

**சிறந்த வாடிக்கையாளர் சேவை?**

சுப்பர் வாடிக்கையாளர் சேவை என்பதால் வாடிக்கையாளர்களே பிரதானம் என்று இந்த கம்பனி இருக்கும் என்றுதானே நினைக்கிறீர்கள்? அதுதான் இல்லை. சவுத் வெஸ்ட்டில் ஊழியர்களே பிரதானம். வாடிக்கையாளர்கள் அடுத்த இடம்தான்.

சிறந்த வாடிக்கையாளர் சேவை அளிக்கப் போகிறவர்கள் ஊழியர்கள. அவர்களை நம்பி, நன்றாக நடத்தினால்தான் அவர்கள் வாடிக்கையாளர்களை நன்றாக நடத்துவார்கள் என்று நம்புகிறது சவுத்வெஸ்ட். அதனாலேயே வாடிக்கையாளர் கலாசாரத்தை கம்பனி முழுவதும் உருவாக்கியிருக்கிறது.

**எது சிறந்த வாடிக்கையாளர் சேவை?**

வாடிக்கையாளர் சேவை என்பது அலுவலகம் வந்தவுடன் ஆரம்பித்து மணி அடித்து வீட்டிற்கு கிளம்பும் போது முடியும் வேலை அல்ல. ஊழியர்கள் யார், எப்படிப்பட்டவர்கள், எத்தகைய மனிதர்கள் என்பதை பிரதிபலிப்பதுதான்வாடிக்கையாளர்சேவை.

சொல்லித் தந்து கிடைப்பதல்ல வாடிக்கையாளர் சேவை. சரியான ஊழியர்களைத் தேர்ந்தெடுத்து, அவர்களை அரவணைத்து, அவர்கள் செயல்களுக்கு, எண்ணங்களுக்கு, அவர்களுக்கே மதிப்பு தரும சூழ்நிலையை உருவாக்கி அவர்கள் செயல்பாட்டை மதித்தால் மட்டுமே கிடைக்கும் சிறந்த வாடிக்கையாளர் சேவ்வை.

**ஆலோசனை பெட்டி எதற்கு?**

விமான நிலையத்தில் பணிபுரியும் சவுத்வெஸ்ட் அதிகாரி வாடிக்கையாளர் சேவை மேலாளரிடம் பெருமையாக 'அலுவலக வாயிலில் ஆலோசனை பெட்டி வைத்திருக்கிறேன். நல்ல யோசனை இருந்தால் ஊழியர்கள் எழுதிப் போடலாம்' என்றார். அதற்கு வாடிக்கையாளர் சேவை அதிகாரி 'ஊழியர்கள் கூறுவதை நேருக்கு நேர் கேட்க முடியாத, அவர்கள் பேச விரும்பும் போது பார்க்க முடியாத மேலாளராக இருந்தால் நீங்கள் எப்படி ஊழியர்களை வெற்றியாளர்களாக மாற்ற முடியும்' என்று கடிந்து கொண்டார்.



அரசாங்க அலுவலகத்தில் இருக்கவேண்டிய பொருள்தான் ஆலோசனை பெட்டி. எதை எழுதினாலும் யாரும் படிக்காமல் சும்மா கடனுக்காக வைக்கப்படும் ஆலோசனை பெட்டியானது சிறந்த வாடிக்கையாளர் சேவை கம்பனிகளில் இருக்கக் கூடாது. நல்ல யோசனை இருந்தால் ஊழியர்கள் அதை யாரிடமும் கேட்காமல், அனுமதி வாங்காமல் செயலபடுத்தும் கலாசாரம்தான் நிறுவனத்துக்குத்தேவை. குறைந்த பட்சம்மேலாளர் அறைக்கு சட்டென்று நுழைந்து யோசனையை பட்டென்று கூறும் சுதந்திரம் தரப்படவேண்டும்.

**மூன்று முறை விருது?**

அமெரிக்காவில் விமான சேவை கம்பனிகளுக்கென்று பிரத்யேகமாக அளிக்கப்படும் ட்ரிபிள் க்ரவுன் விருதை 4 முறை தொடர்ந்து பெற்றது சவுத்வெஸ்ட். காரணம் கேட்டபோது ஹெர்ப் கூறினார்: 'இது சாதாரண விடயம். எவனும் வாங்கலாம். குறைந்த விலை, அதிக எண்ணிக்கையில் இயக்குவது, சிறந்த வாடிக்கையாளர் சேவை. இதை செய்யும் ஜாலியான, அரவணைத்துச் செல்லும் ஊழியர்கள் இருந்தால் போதும் என்றார்.

இதற்கு நிர்வாக விதிகளும், பயிற்சியும் மட்டும் போதாது. கம்பனி சிஇஓ ஒரு முன் உதாரணமாய் திகழவேண்டும். சவுத் வெஸ்ட் சிஇஓ ஹெர்ப் கெல்ஹர் அப்படிப்பட்டவர்.

**சிஇஓ செயல்பாடு?**

கற்றுக்கொள்ளும்மனம்கொண்ட ஆசிரியனே தலைவன்! ஹெர்ப் ஒரு நல்ல மனிதர். புதுமை விரும்பி. மனிதர்களை நேசிப்பவர். அதனாலேயே ஊழியர்களின் ஆத்மார்த்த ஊழியத்தை அவரால் பெற முடிகிறது. ஒரு சமயம்,கம்பனியின் மூத்த அதிகாரி ஒருவரின் தாயார் நோய் வாய்பட்டிருந்தார்.

வீட்டிலிருந்து ஒரு நாள் அவர் தன் மகனுக்கு ஃபோன் செய்து 'யாரப்பா உன் கம்பனியில் ஹெர்ப் கெல்ஹர். என் உடம்பு குணமடைய வாழ்த்தி பூங்கொத்து அனுப்பியிருக்கிறார்' என்றார். அதிகாரிக்கு ஆச்சரியம். 3 நாள் லீவில் அம்மாவை பார்த்து விட்டு வந்தது சிஇஓவுக்கு தெரிந்து எத்தகைய மனிதாபிமான செயல் செய்திருக்கிறார் என்று.

**கடைநிலை ஊழியர் வரை?**

விமானநிலையத்தில் பொருட்களை தூக்கி சென்று விமானத்தில் ஏற்றும் கடைநிலை ஊழியர் ஒருவர் கூறினார்: 'வேறு எந்த கம்பனியின் சிஇஓ ஞாயிற்றுக் கிழமை அதிகாலை எங்களைப் போன்றவர்கள் தங்கும் இடத்திற்கு வந்து பசியாயிருப்பீர்கள் என்று, உணவு, நேநீர் வாங்கி வந்தேன் என்பார். பத்தாதற்கு பொருட்களை ஏற்றி இறக்க உதவி செய்வார். இந்த கம்பனிக்கு என்னை செருப்பாய் தைத்து போடவும் தயார்.' இதுதான் சவுத் வெஸ்ட் கலாசாரம். இப்படித்தான் இருக்க வேண்டும் சிஇஓ!

எப்பேற்பட்ட தொழிலிலும், எத்தகைய போட்டியிலும், எப்படிப்பட்ட சூழ்நிலையிலும் சிரித்து பணி செய்து, சந்தோஷமாக உழைத்தால் வேலையோடு வாழ்க்கையையும் சேர்த்து கொண்டாடலாம் என்பதற்கு சவுத் வெஸ்ட் சாட்சி. கிரேசியாய் இருந் தாலும் ஈசியாய் வெல்லலாம் என்பதே சவுத் வெஸ்ட் சொல்லித் தரும் பாடம்.

## இளம் தொழில் முயற்சியாளர்களுக்கு உதவும் SLIIT



இலங்கையில் பட்டப்படிப்புகளை வழங்கும் முன்னணி கல்வியகம் எனும் வகையில், மாணவர்களுக்கு கல்விசார் வாய்ப்புகளை வழங்கி வரும் SLIIT, ஹேமாஸ் ஹோல்டிங்ஸ் உடன் புரிந்துணர்வு உடன்படிக்கையொன்றில் கைச்சாத திட்டிருந்தது. இந்த உடன்படிக்கையின்பிரகாரம், "Slingshot" எனும் திட்டம் பின்பற்றப்படுவதுடன், SLIIT மாணவர்களுக்கு தமது இறுதி ஆண்டுக்குரிய செயற்திட்டங்களை வியாபார தாபனங்களுக்கு பொருதத மான வகையில் சமர்ப்பிப்பதற் கான நிதியுதவிகளை ஹேமாஸ் ஹோல்டிங்ஸ் மேற்கொண்டிருந்தது.

இந்த உடன்படிக்கை கைச்சாத்திடல் தொடர்பில் SLIIT இன் பிரதம நிறைவேற்று அதிகாரியும் தலைவருமான பேராசிரியர் லலித் கமகே கருத்து தெரிவிக்கையில் "புத்தமைவு மற்றும் தொழில்முயற்சியாண்மை ஆகியவற்றை மாணவர்கள் மத்தியில் ஏற்படுத்த முனைகிறோம். இந்த திட்டத்தின் மூலமாக மாணவர்கள் மத்தியில் புத்தாக்கத்தை ஊக்குவிக்கப்படும் வகையில் அமைந்திருக்கும். இதன்மூலம்தொழில் நுட்ப வளர்ச்சிக்கும் தேசத்தின் அபிவிருத்திக்கும் உதவும் வகையில் அமைந்திருக்கும்" என்றார். ஒவ்வொரு வருடமும் 100க்கும் அதிகமான செயற்திட்டங்கள் இறுதியாண்டில் பயிலும் மாணவர்களால் குழுக்களாக அல்லது தனிநபர்கள் அடிப்படையில் பூர்த்தி செய்யப்படுகின்றன. இவ்வாறு சமர்ப்பிக்கப்படும் திட்டங்களில் சிறப்பாக அமைந்த திட்டங்களை SLIIT தெரிவு செய்து, ஹேமாஸ் தாபனத்துக்கு அவற்றை நடைமுறைப்படுத்துவதற்கான வழங்கும்.

## 50 ஆயிரம் பேரை குறைக்கிறது எச்எஸ்பிசி

வங்கியியல் கம்பனியான எச்.எஸ்.பி.சி.உலகளாவிய ரீதியில் தனது நிறுவன வலைப்பின்னலை மீளக் கட்டமைக்கும் முயற்சியின் அங்கமாக 50,000 பணியாளர்களைக் குறைக்கவுள்ளதாக கடந்த வாரம் அறிவித்துள்ளது.


அந்த நிறுவனமானது பிரேசில் மற்றும் துருக்கியிலிருந்து வாபஸ் பெறுவதுடன் லண்டனிலுள்ள தனது தலைமையகத்தை கைவிடவும் உத்தேசித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

எதிர்வரும் இரண்டரை வருட காலப் பகுதியில் 5 பில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியான வருடாந்த செலவை சேமிப்பதை இலக்காகக் கொண்டு மேற்படி நிறுவன வலைப்பின்னலை மீளக் கட்டமைக்கும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளதாக அந்நிறுவனம் ஹொங்கொங் பங்குச் சந்தைக்கு வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அத்துடன் தனது தலைமையகத்தை எங்கு நகர்த்துவது என்பது தொடர்பில் இந்த வருட இறுதிக்குள் முழுமையான மதிப்பீடு ஒன்று மேற்கொள்ளப்படும் என எதிர்பார்ப்பதாக எச்.எஸ்.பி.சி. தெரிவிக்கிறது.

2008-ம் ஆண்டிலான உலக நிதி நெருக்கடியிலிருந்து பிரித்தானியாவானது வங்கித் தொழிற்றுறை மீது கடும் கட்டுப்பாடுகளை விதித்து வருகிறது. அதன் காரணமாக அங்கு வங்கித் தொழிற்றுறையானது பாரிய அளவான செலவினங்களை எதிர்கொள்ள நேரிடுவதாக கூறப்படுகிறது.

ஏற்கெனவே துருக்கி மற்றும் பிரேசிலிலிருந்து வாபஸ் பெறப்பட்டமையால் 25,000 தொழில்கள் இழக்கப்பட்டுள்ளன. அதேசமயம் செலவினங்களை குறைக்கும் இலக்கில் மேலும் மொத்தம் 22,000க்கும் 25,000க்கும் இடைப்பட்ட பணிகளைக் குறைக்கவுள்ளதாக எச்.எஸ்.பி.சி. தெரிவிக்கிறது. இது அதன் மொத்த தொழில்களில் 10 சதவீதமாகும்.




## 3 மாதத்திற்கு எரிபொருள் விலை மாறாது!

எதிர்வரும் 3 மாதத்திற்கு எரிபொருள் விலையை அதிகரிக்கப் போவதில்லை என மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சு தெரிவிக்கின்றது.

லங்கா ஐ.ஓ.சீ மற்றும் கனிய எண்ணெய் கூட்டுத்தானம் ஆகியன எரிபொருள் விலையை அதிகரிக்குமாறு கோரிக்கை விடுத்துள்ளதாக அமைச்சின் செயலாளர் சுரேன் படகொட குறிப்பிட்டுள்ளார்.

இவ்வாறான கோரிக்கைகள் குறித்து விலை சூத்திரம் தயாரிக்கபட வேண்டும் எனவும் அதனுடன் பொதுமக்களின் தேவை குறித்தும் ஆராயப்பட வேண்டும் எனவும் அவர் கூறியுள்ளார்.

எரிபொருள் விநியோகத்தில் கனிய எண்ணெய் கூட்டுதாபனத்திற்கு 4 பில்லியன் நட்டம் ஏற்பட்டுள்ளதாகவும் அமைச்சின் செயலாளர் குறிப்பிட்டுள்ளார்.

எனினும் எரிபொருள் விலை அதிகரிக்கப்படமாட்டாது எனவும் அமைச்சின் செயலாளர் சுரேன் படகொட சுட்டிக்காட்டியுள்ளார்.

## பங்குச் சந்தை விபரம்

CSE COLOMBO STOCK EXCHANGE

(வார இறுதியில்)

| துறை | கடந்த வாரம் | இந்த வாரம் |
|---|---|---|
| அனைத்துப் பங்கு விலைச்சுட்டி | 7,122.73 | 7,061.28 ⇩ |
| எஸ் & பி 20 சுட்டி | 3,963.68 | 3,914.01 ⇩ |
| விலை அசைவுகளின் அடிப்படையில் | புரள்வு (ரூபா.மில்.) | 3,782.828 |

**உயர்வடைந்த பங்குகள்(ரூ.):** சிற்றி ஹவுஸிங் (16.70),ஒபிஸ் ஈகுப்மன்ட்(1,999.30), புளூ டைமன்ட்(X)(0.60),ஒன்;லே(69.80), அக்சஸ் இன்ஜி.எஸ்எல்.(24.00).

**சரிவைக் காட்டிய பங்குகள்(ரூ.):** சிலோன் லெதர்(X)(1.10), ரேடியன்ட் ஜெம்ஸ் (36.10), பிறின்ட் கெயர் பிஎல்சி(35.60), டேடன்ஸ்(90.50), நேசன் லங்கா (3.60).

மேலதிக தகவல்கள்: www.cse.lk

## வெளிநாட்டு நாணயமாற்று வீதம்

(வார இறுதியில்)

| நாணயம் | கொ/வு விலை ரூபா. | வி/னை விலை ரூபா. |
|---|---|---|
| ஐக்கிய அமெரிக்க டொலர் | 132.43 | 135.66 |
| பவுண்ட்(ஐக்கிய இராச்சியம்) | 204.83 | 211.31 |
| யூரோ (ஐரோ.ஒன்றியம்) | 148.14 | 153.50 |
| சுவிஸ் பிராங் | 140.94 | 146.31 |
| கனேடிய டொலர் | 107.09 | 111.20 |
| அவுஸ்திரேலிய டொலர் | 101.70 | 106.05 |
| சிங்கப்பூர் டொலர் | 98.05 | 101.52 |
| ஜப்பான் யென் | 1.06 | 1.10 |
| இந்திய ரூபாய் | சுட்டி விலை 2.09 | |
| ஐக்.அரபு இராச்சிய டிராம் | சுட்டி விலை 36.42 | |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெண்களை தலைமைத்துவமாக கொண்ட சங்கங்கள் சிறப்பான முகாமைத்துவத்தைப் பேணி வருகின்றன

## யாழ். அரச அதிபர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

**யாழ்.மாவட்டத்தில் பெண்களை தலைமைத்துவமாக கொண்ட சங்கங்கள் மற்றைய சங்கங்களை விடமிக சிறப்பான முகாமைத்துவத்தை நிர்வகித்து வருகின்றன என யாழ். மாவட்ட அரச அதிபர் நா.வேதநாயகன் தெரிவித்துள்ளார்.**

மகளிர் விவகார அமைச்சின் ஏற்பாட்டில் பெண் தலைமைத்துவம் மற்றும் சுய தொழில் முயற்சி தொடர்பான கருத்தரங்கு யாழ். மாவட்டச் செயலகத்தில் நேற்று இடம் பெற்றது

அதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

யாழ்.மாவட்டத்தில் போரினாலும் விபத்துக்களாலும் இயற்கை அனர்த்தங்களாலும் பல பெண்கள் தமது துணைவர்களை இழந்துள்ளார்கள். குறிப்பாக யாழ். மாவட்டத்தில் 11 ஆயிரத்துக்கு மேற்பட்ட பெண்தலைமைத்துவ குடும்பங்கள் உள்ளன. அவர்களில் கணவனை இழந்த இளம் பெண்கள் தான் அதிகமாக காணப்படுகின்றனர்.

அத்துடன் 7 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மாற்றுவலுவுடையோர் வசித்து வருகின்றனர்.

இவர்களின் வாழ்வாதாரம் மிக பாதிப்படைந்து காணப்படுகின்றது. சுயதொழில் மேற்கொள்வதற்கான ஆற்றல் இவர்களிடத்தில் காணப்பட்டாலும் அதைசெயற்படுத்துவதற்கான மூலதனம் அவர்களிடத்தில இல்லை. எனவே இவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்கான தேவை எமக்கு உள்ளது.

எமது மாவட்டத்தில் 500இற்குமேற்பட்ட தாய், தந்தை இருவரையும் இழந்த சிறுவர்கள் உள்ளார்கள். 6 ஆயிரம்பேர்வரையில் தாய் அல்லது தந்தையை இழந்த சிறுவர்கள் இருக்கின்றார்கள் இவர்களின் எதிர்காலம், கல்வி என்பவற்றை முன்னேற்றுவதற்கான தேவை எமக்கு அவசியம்ஆகும்.

இவ்வாறான தலைமைத்துவ பயிற்சிகளை கற்று சுயதொழில்களை மேற்கொள்ளும் போது பெண்கள் தமது வாழ்வாதாரத்தை உயர்த்திக்கொள்ளமுடியும்.

மகளிர் விவகார அமைச்சின் மூலம் பெண் தலைமைத்துவ குடும்பங்களுக்கு உதவிகள் வழங்கப்படும். அவற்றைக் கொண்டு சிறந்த முறையில் கூடிய வருமானத்தை பெற்றுக் கொள்ள முடியும். அதற்கு ஏற்ற வகையில் பயிற்சிகளை சிறப்பாகவும் கவனமாகவும் கற்று பயனடைய வேண்டும். அத்துடன் பெண்கள் தமது பிள்ளைகளின் எதிர்காலத்தை கருத்தில் கொண்டு சிறந்த தொழில் முயற்சியில் ஈடுபட்டு வாழ்வாதாரத்தை உயர்த்த வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-9)

# முன்னாள் ஜனாதிபதி உண்மை பேசுகிறார்

## ஐ.தே.க.புகழாரம்

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தனது ஆட்சிக்காலத்தில் பொய்களை கூறியதாகவும் தோல்வியடைந்த பின்னர் உண்மை பேசி வருவதாகவும் ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளரான அமைச்சர் கபீர் ஹாசீம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

வடக்கில் இராணுவ முகாம்கள் அகற்றப்படுவது குறித்து முன்னாள் ஜனாதிபதி வெளியிட்டுள்ள கருத்துக்கு பதிலளிக்கும் வகையில் வெளியிட்டுள்ள அறிக்கையில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் ஆட்சிக்காலத்திலேயே வடக்கில் 59 முகாம்கள் அகற்றப்பட்டன.

அதேவேளை முன்னாள் ஜனாதிபதி, தான் அலரி மாளிகையில் வளர்த்த நாய்களுக்கு மக்களின் பணத்தை பயன்படுத்தியே உணவு வழங்கினார்.முன்னாள் ஜனாதிபதியின் குடும்பம் பயன்படுத்திய வாகனங்களின் எண்ணிக்கை பற்றி இன்னும் கண்டு பிடிக்க முடியாமல் உள்ளது எனவும் கபீர் ஹாசீம் தனது அறிக்கையில் சுட்டிக்காட்டியுள்ளார். (இ-5)

அந்தியேட்டி சபிண்டீகரண அழைப்பிதழ்



கடந்த 16.05.2015 அன்று நூற்றியொராவது வயதில் இறைபதம் எய்திய எமது குடும்பத் தலைவி

அமரர் கிட்டிணர் கதிராசி

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் 15.06.2015 இன்று திங்கட்கிழமை அதிகாலை 6 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் அன்னாரின் ஆத்ம சாந்திக்காக தாங்களும் வருகை தந்து அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

மாத்மா வீதி,
நெல்லியடி,
யாழ்ப்பாணம்.

(சி-1273)

இங்ஙனம்
குடும்பத்தினர்.

# கண்ணீர் அஞ்சலி

## ஞானேஸ்வரன் கோகிலவதனன்

பிறப்பு:14.11.1980

இறப்பு:12.06.2015



நேற்றுவரை எம்மோடு உறவாடி இருந்தாய்
காற்றாகி இன்றெங்கே கனவாகிப் போனாய்
கூற்றுவனைக் கேட்கின்றோம்
ஏன் கொன்று சென்றாய் என
தேற்ற ஒரு மொழியில்லை
தேம்பும் மனதிற்கு....

(சி/1275)

ஆசைப்பிள்ளை அன்சன் நகைமாடம்
K.T. பிளாஷா
பிரதான வீதி, சங்கானை.

ஆசைப்பிள்ளை குடும்பத்தினரும்,
குணசேகரம் குடும்பத்தினரும்
ஆசைப்பிள்ளை அன்சன் நகைமாடம் ஊழியரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிரமோற்சவ விஞ்ஞாபனம்

(யாழ்ப்பாணம்)

பொலிகண்டி கந்தவனம் திருவருள்மிகு கல்யாண வேலவ சுவாமி தேவஸ்தானத்தின் மன்மத வருட பிரமோற்சவ விஞ்ஞாபனம் நாளை மறுதினம் 17 ஆம் திகதி புதன்கிழமை மு.ப.11 மணியளவில் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 15 தினங்கள் நடைபெறவுள்ளது.


எதிர்வரும் 30 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை தேர்த்திருவிழாவும் மறுநாள் ஜூலை மாதம் முதலாம் திகதி தீர்த்தோற்சவமும் இடம்பெறவுள்ளன. (இ-7)

## சின்மயா மிஷன் நடத்தும் பாலவிஹார் வகுப்புக்கள்

சுய ஒழுக்கம் சிறந்த ஆற்றல் உள்ள தலைமைத்துவம், கலை, கலாசார விழுமயங்களைப் பேணும் தன்மை, தன்னம்பிக்கையுடன் மகிழ்ச்சியாக சேவை செய்யும் மனப்பாங்கு, முரண்பாடுகள் அற்ற ஆரோக்கியமான நேர்மனப்பாங்குள்ள எண்ணங்கள் போன்ற சிறந்த விழுமியப் பண்புகளை இன்றைய சிறார்கள் மனதில் வளர்க்கும் நோக்குடன் சின்மயா மிஷன் யாழ்ப்பாண ஆச்சிரமத்தில் வயது 5 முதல் 13 வரையான (பாலர் வகுப்பு முதல் தரம் 8) சிறுவர்களுக்கான பாலவிஹார் வகுப்புக்கள் பிரதி ஞாயிற்றுக்கிழமைகளில் காலை 9.00 தொடங்கி மு.ப. 10.30 மணி வரை, பிரதி வெள்ளிக்கிழமைகளில் மாலை 3.30 மணி தொடக்கம் 5.00 வரை என இரு பிரிவுகளாக வதிவிட ஆச்சாரியார் பிரம்மச்சாரி ஜாக்ரத சைதன்யா சுவாமிகளின் வழிகாட்டலில் நடத்தப்பட்டு வருகின்றன. இவ்வகுப்புக்களில் ஆர்வமுள்ள சிறார்கள் அனைவரும் பங்குகொண்டு பயன்பெறலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-5)

# சட்டவிரோத மணல் அகழ்வு சாவகச்சேரியில் இருவர் கைது

### உழவு இயந்திரமும் பறிமுதல்



(யாழ்ப்பாணம்)

**சாவகச்சேரி கோவிலாக்கண்டி களப்பு பகுதியில் சட்டவிரோத மணல் அகழ்வில் ஈடுபட்ட இருவர் சாவகச்சேரி பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளதோடு உழவு இயந்திரம் ஒன்றும் பொலிஸாரினால் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது.**

கோவிலாக்கண்டி களப்பு பகுதியில் நீண்ட காலமாக மணல் கொள்ளையில் குழுவொன்று ஈடுபட்டு வந்துள்ளது.

இச்சட்டவிரோத குழுவினை மடக்கிப் பிடிப்பதற்கு சாவகச்சேரி பொலிஸார் சுற்றிவளைப்பு நடவடிக்கையொன்றினை நேற்று முன்தினம் அதிகாலை 2 மணியளவில் மேற்கொண்டிருந்தனர்.

இதனடிப்படையில் சாவகச்சேரி பொலிஸ் பிரிவிற்குட்பட்ட நாவற்குழி வேலம்பிராய் கண்ணகி அம்மன் கோவிலில் இருந்து சுமார் இரண்டு கிலோமீற்றருக்கு அப்பால் உள்ள கோவிலாக்கண்டி களப்பு பகுதியில் வைத்து சட்டவிரோதமாக மண்ணகழ்வில் ஈடுபட்டு வந்த குறித்த குழுவினைச் சேர்ந்த இருவர் மடக்கிப் பிடிக்கப்பட்டுள்ளனர்.

களப்பு பகுதியில் நீண்டகாலமாக இரவு வேளைகளில் அனுமதிப் பத்திரமின்றி சட்டவிரோதமான முறையில் மணல் அகழ்வில் ஈடுபட்டு வந்தனர்.

இச்சட்டவிரோத மண்ணகழ்வு குறித்து பொதுமக்களினால் சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடும் பதிவு செய்யப்பட்டிருந்தது.

இம்முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றும் கடந்த சில மாதங்கள் சட்டவிரோத மண்ணகழ்வில் ஈடுபட்டவர்கள் பொலிஸாரிடம் சிக்காமல் இருந்து வந்தனர்.

இதனைத் தொடர்ந்து சாவகச்சேரி பொலிஸார் நேற்று முன்தினம் மேற்கொண்ட விசேட நடவடிக்கையில் இருவர் கைது செய்யப்பட்டுள்ளதோடு மண்ணகழ்விற்கு பயன்படுத்திய உழவு இயந்திரம் ஒன்றும் கைப்பற்றப்பட்டுள்ளது.

மேலும் இக்குழுவினைச் சேர்ந்த பலர் தலைமறைவாகி உள்ள நிலையில் அவர்களை தேடி வருவதாகவும் சாவகச்சேரி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி டபிள்யூ ஏ.கே.டி. வன்னியாராச்சி தெரிவித்தார். (இ-4)

## அலங்கார உற்சவம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.கோட்டை ஸ்ரீமுனீஸ்வரன் தேவஸ்தானத்தின் மணவாளக் கோல அலங்கார உற்சவ விஞ்ஞாபனம் எதிர்வரும் 18 ஆம் திகதி வியாழக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 26 தினங்கள் நடைபெறவுள்ளது.

எதிர்வரும் ஜூலை மாதம் 12 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை தேர்த் திருவிழாவும் மறுநாள் 13 ஆம் திகதி திங்கட்கிழமை தீர்த்தோற்சவமும் இடம்பெறவுள்ளன. (இ-7)




## இரத்தின தீபம்-2015 விருது வழங்கி கௌரவிப்பு



(யாழ்ப்பாணம்)

மலையக கலை கலாசார சங்கமும் யாழ்.கொட்டடி சனசமூக நிலையமும் இணைந்து கடந்த 7 ஆம் திகதி நடத்திய புத்தாண்டு விழாவில் வடமராட்சி தென்புலோலியைச் சேர்ந்த சாமசிறி ச.வல்லிபுரநாதன் இந்திய துணைத் தூதுவர் ஆ. நடராஜனிடமிருந்து சமூக சேவைக்கான இரத்தினதீபம்-2015 விருதினைப் பெற்றுக்கொண்டுள்ளார். (இ-3)

# முஸ்லிம்களின் கொள்கைத் தீர்மானங்கள்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்ட முஸ்லிம்களின் மீள்குடியேற்றம் தொடர்பில் யாழ். கிளிநொச்சி மாவட்ட முஸ்லிம் சிவில் சமூகப் பிரதிநிதிகள் மற்றும் சமூகத் தலைவர்களுடனான விசேட கலந்துரையாடல் ஒன்று யாழ். பொது நூலக மாநாட்டு மண்டபத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

இக்கலந்துரையாடலில்ல யாழ். கிளிநொச்சி மாவட்ட முஸ்லிம்களின் மீள்குடியேற்ற செயற்பாடுகளை ஒழுங்கமைக்கும் விதத்தில் ஒருமுறையான திட்டமிடல் அவசியம் என பல்வேறு தரப்பினராலும் வலியுறுத்தப்பட்டது.

அத்தகைய திட்டமிடல்களுக்கு அடிப்படையாக யாழ். கிளிநொச்சி மாவட்ட முஸ்லிம்களின் விவகாரங்களை ஒழுங்கமைக்கின்ற **கொள்கைத் தீர்மானங்கள்** அவசியம் என்பதால் சிவில் சமூகத்தினர் ஒன்றிணைந்து 10 அடிப்படையான கொள்கைத் தீர்மானங்களை முன்மொழிந்துள்ளனர்.

தாயக மண்ணில் மீளக்குடியேற்றமே யாழ். கிளிநொச்சி மாவட்ட முஸ்லிம்களின் சமூகப் பிரச்சினைகள் அனைத்திற்குமான அடிப்படைத் தீர்வு என யாழ். கிளிநொச்சி மாவட்ட முஸ்லிம்களாகிய நாம் நம்புகின்றோம். அதுவே முதன்மையானது என்றும் தீர்மானிக்கின்றோம். எமது வாழ்வுரிமை, வாழ்வாதார உரிமை, வாக்குரிமை, கல்வி உரிமை, மத கலாசார உரிமை அனைத்தும் வடக்கையே சார்ந்திருக்கின்றது.

வடக்கு முஸ்லிம்களினதும் தாயகம், பூர்வீக வாழிடம் 1990 களில் பலவந்தமாக வெளியேற்றப்பட்ட அனைவரினதும் அவர்களது சந்ததியினரதும் வாழிடமாக பூர்வீக பிரதேசமாக வடக்கே இருக்கின்றது. அவர்கள் அனைவரும் மீளவும் குடியேறவும் வாழிடங்களை ஒழுங்கமைக்கவும் வாழ்வாதார முயற்சிகளில் ஈடுபடவும் முழுமையான உரித்துடையவர்கள்.

1990 களில் முஸ்லிம்களுக்கு சொந்தமாகவிருந்த வாழிடக் காணிகள், விவசாய நிலங்கள், சமூகவாழ்விற்கான ஏற்பாடுகள் அனைத்தும் எவ்வித மாற்றமும் இன்றி மீண்டும் அவர்களுக்கு வழங்கப்பட வேண்டும். அத்தோடு அவர்களது 20 வருட கால இடைவெளியில் ஏற்பட்ட சனத்தொகைப் பரம்பலுக்கு அமைவான ஒதுக்கீடுகளும் அவர்களது வாழிடங்களுக்கு அண்மித்ததாக ஒழுங்கமைக்கப்பட வேண்டும்.

மீள்குடியேற்றமே யாழ். கிளிநொச்சி முஸ்லிம்களின் அடிப்படைத் தேவை என்ற வகையில் யாழ். கிளிநொச்சி மாவட்ட முஸ்லிம்களின் மீள்குடியேற்றத்திற்குத் தேவையான காணி, வீடமைப்பு, வாழ்வாதார ஒத்துழைப்புக்கள், தொழில் வாய்ப்புக்கள், சமூக நிறுவனங்கள், கல்வி, உட்கட்டமைப்பு வசதிகள் என்பன எவ்வித பாரபட்சமும் இன்றி மீள்குடியேறும் அனைவருக்கும் வழங்கப்பட வேண்டும். இதனை மத்திய மாகாண அரசுகள், தேசிய சர்வதேசிய தொண்டு நிறுவனங்கள் காலநிர்ணயம் செய்யப்பட்டதாக பொறுப்பேற்றுக் கொள்தல் வேண்டும்.

யாழ். கிளிநொச்சி முஸ்லிம்களின் பலவந்த வெளியேற்ற நாளாக 30.10.1990 அமைவதைப் போலவே யாழ். கிளிநொச்சி முஸ்லிம்களின் மீள்குடியேற்ற நாளாக 11.01.2011 அமைகின்றது.

யாழ். கிளிநொச்சி மாவட்டத்தில் 1990 கள் வரை இயங்கி அனைத்துப் பாடசாலைகள், கல்வி நிலையங்கள் மீண்டும் ஆரம்பிக்கப்பட வேண்டும். அவற்றின் கல்வி நிலை மேம்பாடு மற்றும் பௌதீகவளங்களின் மேம்பாடு என்பன உரிய முறையில் ஒழுங்கமைக்கப்பட வேண்டும்.

மீள்குடியேற்றத்தில் காணி மற்றும் வீடமைப்பு விடயங்கள் முக்கியத்துவமானவைகளாக அமைந்திருக்கின்றன. இதனைக் கருத்தில் கொண்டு மீள்குடியேறியுள்ள காணியற்றோருக்கும் மீள்குடியேறியுள்ள வீடற்றோருக்கும் அவர்களது தேவைப்பாடுகளைக் கருத்தில் கொண்டு துரிதமான வீடமைப்பு மற்றும் காணி வழங்கலை உறுதி செய்தல் வேண்டும் என தீர்மானங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன. (இ-9)

## மஹோற்சவம் இன்று ஆரம்பம்

சித்தன்கேணி தனுவோடைப்பதி அருள்மிகு ஸ்ரீ சிவகாமசுந்தரி சமேத ஸ்ரீ சிவசிதம்பரேஸ்வரர் தேவஸ்தான மஹோற்சவம் இன்று 1 திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 10 தின்ங்கள் இடம்பெறவுள்ளன.

எதிர்வரும் 23 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு தேர்த்திருவிழாவும் மறுநாள் புதன்கிழமை முற்பகல் 11 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறவுள்ளது. (இ-5)

## மஹோற்சவ விஞ்ஞாபனம்

கல்லுவம் ஞான வைரவர் திருக்கோயிலின் வருடாந்த மஹோற்சவ விஞ்ஞாபனம் இன்று திங்கட்கிழமை மு.ப. 10 மணியளவில் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 10 தினங்கள் நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 23 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை தேர்த்திருவிழாவும் மறுநாள் 24 ஆம் திகதி புதன்கிழமை தீர்த்தோற்சவமும் இடம்பெறவுள்ளன. (இ-7)



வடமராட்சி இந்து மகளிர் கல்லூரியில் அமைக்கப்பட்ட தொழில்நுட்ப ஆய்வு கூடம் கடந்த 12 ஆம் திகதி வெள்ளிக்கிழமை திறந்து வைக்கப்பட்டது. நிகழ்வில் விருந்தினர்கள் அழைத்து வரப்படுவதையும் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.சிறிதரன் தம்பதியினர் நாடாவை வெட்டி ஆய்வு கூடத்தை திறந்து வைப்பதையும் நிகழ்வில் கலந்து கொண்டோரையும் படங்களில் காணலாம். (படங்கள்:-கரணவாய் செய்தியாளர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை மகிந்த பலவீனப்படுத்துகிறார்

## அமைச்சர் அர்ஜுன குற்றச்சாட்டு

(கொழும்பு)

**முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை படிப்படியாக பலவீனப்படுத்தி வருவதாக அந்த கட்சியின் அத்தனகல்ல தொகுதி அமைப்பாளரும் அமைச்சருமான அர்ஜுன ரணதுங்க குற்றஞ்சாட்டியுள்ளார்.**

அத்தனகல்லவில் நேற்று முன்தினம் நடைபெற்ற கட்சிகளின் தொழிற்சங்க கிளைகளின் பிரதிநிதிகளுடனான சந்திப்பிலேயே அவர் இதனை தெரிவித்தார்.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை பிரதமர் வேட்பாளராக்க வேண்டும் என்ற எதிர்பார்ப்பில் ஒழுங்கு செய்யப்படும் கூட்டங்களில் முன்னாள் ஜனாதிபதி ஏன் கலந்து கொள்வதில்லை.

முன்னாள் ஜனாதிபதியின் தற்போதைய நடத்தை காரணமாக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி பலவீனப்படும். முன்னாள் ஜனாதிபதியின் தறபோதைய செயற்பாடுகளை அவதானிக்கும் போது, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் அரசாங்கம் ஒன்றை ஏற்படுத்த சந்தர்ப்பம் கிடைக்கும் என நான் எண்ணவில்லை.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை அவர் நேசிப்பவராகவும் தான் உண்மையான சுதந்திரக் கட்சிக்காரன் என அவர் எண்ணினால், அவர் கிராமம், கிராமமாக சென்று கட்சியை அழிக்கும் நடவடிக்கைகளை நிறுத்த வேண்டிய காலம் ஏற்பட்டுள்ளது. மாத்தறையில் கூட்டம் ஒன்று நடைபெற்றது. ஒன்றில் அவர் அந்த கூட்டங்களின் மேடைகளில் நெஞ்சை நிமிர்த்தி கொண்டு ஏற வேண்டும் அல்லது அவற்றில் இருந்த விலகி கட்சியை நடத்த ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு இடமளிக்க வேண்டும்.

எனினும் மகிந்த இவை இரண்டையும் செய்வதில்லை என அமைச்சர் அர்ஜுன ரணதுங்க மேலும் தெரிவித்துள்ளார். (இ-5)

# ரணிலுக்கு பிரதமர் பதவி வழங்க ஒப்பந்தம் ஏதுமில்லை- ஜனாதிபதி

(கொழும்பு)



எதிர்வரும் பொதுத் தேர்தலின் பின்னர் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு பிரதமர் பதவியை வழங்குவது தொடர்பாக எவ்வித ஒப்பந்தங்களும் மேற்கொள்ளப்படவில்லை என ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் தலைவர்களிடம் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

நடைபெறவிருக்கும் பொதுத் தேர்தலில் அதிகமான ஆசனங்களைப் பெறும் கட்சிக்கே பிரதமர் பதவி கிடைக்கப்பெறும். அதில் எவ்வித சந்தேகமும் இல்லை எனவும் ஜனாதிபதி சுட்டிக்காட்டியுள்ளார்.

எந்த அரசியல் கட்சி ஆட்சி அமைத்தாலும் அந்த அரசாங்கத்தின் அமைச்சரவையில் எதிர்க் கட்சியை சேர்ந்த சிலர் இணைத்து கொள்ளப்படுவார்கள் எனவும் குறிப்பிட்டுள்ளார். ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் தலைவர்களுடன் இடம் பெற்ற விசேட சந்திப்பின் போதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்துள்ளார். (இ-5)

# நாமலின் எதிர்காலம் குறித்தே மகிந்த ராஜபக்ஷ அஞ்சுகிறார்

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, அவரின் மகன் நாமல் ராஜபக்ஷவின் எதிர்கால அரசியலுக்கு பாதிப்பு ஏற்படும் என்று அஞ்சுவதாக ஐக்கிய தேசியக்கட்சி தெரிவித்துள்ளது.

மாத்தறையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற தம்மை ஆதரிக்கும் கூட்டத்துக்கு சென்ற மகிந்த ராஜபக்ஷ மேடையில் ஏறவில்லை.

இது, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் வேட்பாளர் நிலைக்கு விண்ணப்பித்துள்ள நாமல் ராஜபக்ஷவுக்கு பாதிப்பை ஏற்படுத்தும் என்பதன் காரணமாகவே மகிந்த மேடையில் ஏறவில்லை என்று நாடாளுமன்ற உறுப்பினர் ரோசி சேனநாயக்க தெரிவித்துள்ளார். (இ-5)

# கலகம் விளைவித்த ஐவருக்கும் மறியல்

கடந்த 22ஆம் திகதி காரைநகரில் உள்ள வீடு ஒன்றினுள் புகுந்து கலகம் விளைவித்தமை தொடர்பாக நேற்று முன்தினம் மாலை 5பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

காரைநகர் பிரதேச சபைத்தவிசாளர் உட்பட கைது செய்யப்பட்ட ஐந்து பேரும் நேற்று யாழ். நீதவான் நீதிமன்றில் பதில் நீதவான் சபேசன் முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டனர். அவர்களை இன்று வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

இதேவேளை மேற்படி 5பேரும் இன்றைய தினம் யாழ். நீதவான் நீதிமன்ற நீதிபதி லெனின்குமார் முன்னிலையில் ஆஜர் செய்யப்படவுள்ளனர். (இ-3-9)

# சவால்களைச் சமாளிக்க ஆங்கில அறிவு அவசியம்

விஞ்ஞான தொழில்நுட்ப வளர்ச்சி காரணமாகவும் வேறு பல காரணிகளாலும் இன்றைய வாழ்வு சவால் நிறைந்ததாக உள்ளது. இச்சவாலினைச் சமாளிக்க மாணவர்களின் ஆங்கில அறிவு மேம்படுத்தப்படல் அவசியம் என்பதை மனச்சாட்சியுள்ள கற்றறிந்தோர் ஏற்றுக் கொள்வர். இன்று பலர் ஆங்கில மொழியாற்றல் இன்மையால் தங்களின் திறமைகளை வெளிக்கொணர முடியாமல் உள்ளனர். ஆங்கில மொழித் தேர்ச்சி தனிமனித சமூக மற்றும் நாட்டின் அபிவிருத்திக்கு இன்றியமையாதது என்பது யதார்த்தம். இதற்கான காரணங்கள் பல. இது தொடர்பாக தமிழ் ஆங்கிலப் பத்திரிகைகளில் கட்டுரைகள் வெளியிடப்பட்டன.

நன்றாக சிந்தித்துப் பார்த்தால் ஆங்கிலக் கல்வியை பொறுத்தவரையில் ஆரம்ப பாடசாலை மாணவர்களுக்கு உரிய முறையில் புகட்டப்பட வேண்டும் என்பது ஏற்றுக் கொள்ளப்பட்ட உண்மை. மேலும் 1956ஆம் ஆண்டின் பின்னர் தொடர்பு மொழியான ஆங்கிலமொழி புறக்கணிக்கப்பட்டமையால் ஏற்பட்ட விளைவுகள் தாங்கள் அறிந்தவையே.

ஆங்கிலமொழி மக்களின் முன்னேற்றத்திற்கு மிகவும் அத்தியாவசியம் என்பது கண்கூடு. முன்னோர் பல துறைகளிலும் சிறந்து விளங்கியமைக்கு ஆங்கிலக் கல்வியும் முக்கிய பங்காற்றியமை வெள்ளிடைமலை. அவர்கள் ஆங்கில மொழிக்கல்வியை ஆரம்ப பாடசாலைகளில் உரிய முறையில் கற்பதற்கான வசதிகள் கிடைக்க பெற்றிருந்தன. ஆனால் நிலைமை தற்போது மாறியுள்ளது.

### தற்போதைய யதார்த்த நிலை

ஆரம்ப வகுப்புகளில் தரம் மூன்று தொடக்கம் ஐந்து வரை உரிய முறையில் ஆங்கிலக் கல்வி போதிக்காமையினால் தரம் ஆறிலிருந்து அல்லது அதற்கு மேல் ஆங்கில மொழியைக் கற்பதில் மாணவர்கள் பின்னடைகின்றனர். அதற்கான காரணங்களாக ஆங்கிலக் சொல்லின் எழுத்துக் கூட்டல் (Spelling), உரிய கருத்தினை புரிந்து கொள்ளல், உரிய உச்சரிப்பினை(Pronunciation) ஏற்படுத்தும் வகையில் உதவும் உறுப்புக்களான நாக்கு உதடுகள், பற்கள், அண்ணம் ஆகியவற்றிற்கு இளம் பராயத்திலேயே போதிய பயிற்சி இன்மையாகும். வடமாகாணத்தில் உள்ள ஓர் பிரபல பாடசாலையில் தரம் 3-5 பயிலும் மாணவர்கள் சரியான முறையில் ஏ.பி.சி.டி எழுதத் தெரியாதவர்களாக உள்ளமையினை நேரில் அவதானித்து ஆராய்ந்த போது காரணம் போதிய பயிற்றப்பட்ட ஆசிரியர்கள் இன்மையேயாகும்.

இவ்விடயம் தொடர்பில் ஆளுநர் மற்றும் செயலாளர் வடமாகாண கல்வி அமைச்சு ஆகியோரு க்கு அனுப்பிய கடிதங்களுக்கு பதில் கிடைக்கப்பெற்றன. யாழ். மாவட்டத்தில் உள்ள ஐந்து வலயக் கல்விப் பணிப்பா ளர்களுக்கு அனுப்பப்பட்ட பதிவுக் கடிதங்களுக்கு பதில் அல்லது கிடைக்கப்பெற்றமை தொடர்பில் எவ்வித நடவடிக்கையும் இல்லை. வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் மட்டும் பதில் அனுப்பியுள்ளார். பொதுமகன் ஒருவரின் கடிதத்திற்கு பதில் அல்லது கிடைக்கப்பெற்றமை தொடர்பில் அறிவிக்கப்பட்டல் வேண்டும் என்பது நியதி. இந்நியதியினை அறியாதவர்களும் உள்ளனரோ.

இந்த முன்மொழியின் நோக்கமானது முதன்மைப் பாடசாலை ஆசிரியர்களை உரிய முறையில் ஆங்கிலக் கல்வியினை மூன்று தொடக்கம் ஐந்தாம் வகுப்பு மாணவர்களை கற்பிப்பதற்கு தூண்டும் அல்லது வழிகாட்டும் நோக்கத்துடன் ஆங்கிலமொழியின் முக்கியத்துவமும் சில நுட்பங்களும் என்ற தலைப்பில் உரையாற்றுகைகளை நிகழ்த்துவதாகும்.

இவ்விடயத்தில் இதுவரை பத்துக்கு மேற்பட்ட பாடசாலைகள் மற்றும் மாகாணத்தின் இரு தேசிய கல்வியியல் கல்லூரிகளில் நிகழ்த்தப் பெற்ற உரையாற்றுகைகள் பயனுறுதியாக அமைந்துள்ளமை தொடர்பில் சம்பந்தப்பட்ட அதிபர்கள் எழுத்து மூலம் அறியத்தந்துள்ளனர்.

மாணவர்களின் எதிர்காலம் தொடர்பில் ஆக்கபூர்வமாகச் சிந்தித்தால் எனது முன்மொழியின் தார்ப்பரியம் இலகுவாக விளங்கும்.முயற்சி செய்தால் வெற்றி நிச்சயம். எந்த ஒரு மொழியினையும் சிறுபராயத்திலிருந்தே செவிமடுத்தல், பேசுதல்,வாசித்தல்,எழுதுதல் ஆகிய திறன்களுடன் கற்றல் வேண்டும்.

எனவே காலங்கடந்தாலும் வருங்காலச் சந்ததியினரின் முன்னேற்றம் கருதிச் செயற்படும்படி சம்பந்தப்பட்டவர்களை பணிவுடன் வேண்டுவதுடன் இன்று பலர் ஆங்கிலமொழித் தேர்ச்சியின்மையால் தங்களின் இயல்பான திறமைகளை வெளிப்படுத்த முடியாமற் திணறுகின்றனர் என்பதற்கு தங்களின் மனச்சாட்சியே சான்று.

மேடைப் பேச்சின் போது ஆங்கிலமொழி கற்பது முக்கியமானது என்று கூறுபவர்கள் இவ்விடயம் தொடர்பாக தங்களால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் தொடர்பில் பகிரங்கப்படுத்தினால் வரவேற்பதற்குரியதாகும்.

மேலும் அம்முன்மொழிவு தொடர்பாக கற்றறிந்த சான்றோரின் கருத்துக்கள் வரவேற்கப்படுவதுடன் அக்கருத்துக்கள் சம்பந்தப்பட்டவர்களின் கண்களைத் திறப்பதுடன் பெற்றோர்களும் ஆழமாகச் சிந்திப்பது வருங்காலச் சந்ததியினருக்கு வரப்பிரசாதமாக அமையட்டும்.

**அம்பலவாணர் துரைசிங்கம்**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சட்டவிரோத மணல் அகழ்வு

## குடிமனையினுள் வெள்ளம் புகும் அபாயம்- பொதுமக்கள் சுட்டிக்காட்டு

(கிளிநொச்சி)

**கிளிநொச்சி மாவட்டத்தில் சட்ட விரோத மணல் அகழ்வு தொடர்ச்சியாக நடைபெற்று வருகின்றது. இதனால் நெற்பயிர் செய்யும் வயல் நிலங்களும் மக்கள் குடியிருக்கும் பகுதிகளும் அழிவடையக்கூடியநிலை ஏற்பட்டு வருகின்றது.**



நீவில் பகுதி வயல் நிலங்களில் இத்தகைய மணல் அகழ்வு நடவடிக்கை நடைபெறுவதை சில மாதங்களுக்கு முன்னர் கிளிநொச்சி கமநல சேவை உதவி ஆணையாளர் நேரில் சென்று பார்வையிட்ட போதிலும் இதுவரை எதுவித நடவடிக்கையும் எடுக்கப்படாமல் தொடர்ச்சியாக மணல் அகழ்வு நடைபெற்று வருகின்றது என பொதுமக்களால் சுட்டிக்காட்டப்படுகின்றது.

இதேவேளை சிவநகர் கிராம அலுவலர் பிரிவில் பிரதான கழிவு வாய்க்கால்லுக்கு அருகாமையில் பாரிய அளவில் மணல் அகழ்வு நடவடிக்கை நடைபெற்று வருகின்றது.

இதனால் இக்கிராமம் மழை காலங்களில் வெள்ள அழிவை எதிர் நோக்கும் அபாயத்தை சந்திக்க நேரிடும் என தெரிவிக்கப்படுகின்றது.

இது தொடர்பில் அறிய வருவதாவது,

காணி உரிமையாளர் மணல் அகழ்விற்கு அனுமதி வழங்கியதாகவும் இதனைப் பயன்படுத்தி ஒருசில உள்ளூர் வாசிகள் இந்த மணல் அகழ்வை மேற்கொண்டு வருவதாகவும் குற்றஞ் சாட்டப்படுகின்றது.



சொந்தக் காணியாக இரு தாலும் அதில் மணலை அகழ்வதற்கு அனுமதி வழங்கியது யார் என பொதுமக்கள் கேள்வி எழுப்புகின்றனர்.

இத்தகையோரின்நடவடிக்கையை கமநல சேவை திணைக்களம், காணி பகுதியினர் கவனம் எடுக்காமல் இருப்பதாகவும் ஒரு சிலரின் விசமத்தனமான நடவடிக்கையினால் கிராமமே வெள்ளநீரினால் அழிவுறும் நிலையில் இருப்பதால் அதை தடுப்பதற்கு விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டுமென பொதுமக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (2-254)

## வவுனியா மாவட்ட அரசாங்க அதிபரை இடமாற்றம் செய்க

**ஜனாதிபதிக்கு வடக்குமாகாண சபையினரால் கடிதம் அனுப்பிவைப்பு**

வவுனியா மாவட்ட அரசாங்க அதிபரை இடமாற்றம் செய்யும் படி கோரி ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிற்கு வடக்கு மாகாண சபையால் கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக வடக்கு மாகாண சபை தலைவர் சீ.வீ.கந்தையா சிவஞானம் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் அனுப்பி வைத்துள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்ட விடயம் வருமாறு, வவுனியா மாவட்ட அரசாங்க அதிபரை அந்த மாவட்டத்திற்கு வெளியே இடமாற்றம் செய்யுமாறு வவுனியா மாவட்டத்தை சேர்ந்த ஐந்து வடக்குமாகாண சபை உறுப்பினர்களும் மூன்று பாராளுமன்ற உறுப்பினர்களும் கையொப்பமிட்டு தங்களுக்கு அனுப்பிவைத்த கடிதத்தின் பிரதியை 17.03.2015 திகதி வடக்கு மாகாண சபையின் அமர்வின் போது சமர்ப்பித்து வவுனியா மாவட்ட அதிபரை இடமாற்றம் செய்வதற்கு இந்தச் சபை நடவடிக்கை எடுக்க வேண்டும் என்ற முன்மொழிவு சபையினால் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

பொருத்தமான நடவடிக்கை எதுவும் எடுக்கப்படாத நிலையில் கட்சி வேறுபாடுகளுக்கு அப்பால் சகல உறுப்பினர்களும் 09.06.2015 ஆம் திகதி வடக்கு மாகாண சபையின் அமர்வு ஆரம்பித்தவுடன் சபா மண்டபத்தின் நடுவே எமக்கு முன்பாக நின்று தமது ஆட்சேபத்தை வெளிப்படுத்தினர். இந்த விடயம் தொடர்பாக ஜனாதிபதியுடனும் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைமை த்துவத்துடனும் தொடர்பு கொண்டு பொருத்தமான நடவடிக்கை எம்மால் எடுக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டதை அடுத்து தத்தமது ஆசனங்களுக்கு திரும்பினர்.

இது முழுமையான சிறப்புரிமை மீறல் மற்றும் மக்களால் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளை அவமதித்த செயல் சம்பந்தப்பட்டதாகும் இதில் இனரீதியான கோணம் எதுவுமில்லை ஏனெனில் ஆட்சேபனை தெரிவித்தவர்கள் யாவரும் தமிழ், முஸ்லிம் மற்றும் சிங்கள இனங்களைச் சேர்ந்தவர்கள். ஆகையினால் வவுனியா மாவட்ட அதிபரை கூடிய விரைவில் அந்த மாவட்டத்திற்கு வெளியே இடமாற்றம் செய்யுமாறு தங்களை மிக விநயமாக வேண்டுகிறோம் என அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. (2-9)

## கிளி. உருத்திரபுரீஸ்வரர் ஆலய மஹோற்சவம்



(கிளிநொச்சி)

கிளிநொச்சி உருத்திரபுர நாயகி உடனுறை உருத்திரபுரீஸ்வரர் ஆலய மஹோற்சவம் இன்று திங்கட்கிழமை முற்பகல் 10மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து திருவிழா நடைபெறவுள்ளது.

இதற்கமைய 21ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை வசந்த உற்சவம் நடைபெறும்.

மறுநாள் திங்கட்கிழமை சப்பறத் திருவிழாவும் எதிர்வரும் 23ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு தேர்த்திரு விழாவும் நடைபெறும். எதிர்வரும் 24ஆம் திகதி புதன் கிழமை அதிகாலை 5 மணிக்கு தீர்த்த திருவிழா இடம்பெறும். (2-254)

## யுத்தம், அரசியல் பழிவாங்கல்களுக்குட்பட்டு பாதிக்கப்பட்ட கல்வி ஊழியர்களுக்கு நிவாரணம்

(மல்லாவி)

நாட்டில் இடம்பெற்ற யுத்தம் காரணமாகவும் அரசியல் பழிவாங்கல் காரணமாகவும் பாதிக்கப்பட்ட கல்வி ஊழியர்களுக்கான நிவாரணங்களை வழங்குவதற்கு கல்வி அமைச்சு நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

அத்துடன் பாதிக்கப்பட்டோர் தொடர்பான விபரங்களையும் சேகரித்து வருகின்றது.

இது தொடர்பாக அவ்வமைச்சின் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ள விடயங்கள் வருமாறு,

கடந்த 1994 ஆம் ஆண்டு தொடக்கம் 2014 ஆம் ஆண்டு வரையிலான காலப் பகுதியில் அரசியல் பழிவாங்கலுக்குட்பட்டோருக்கும் யுத்தத்தினால் பாதிக்கப்பட்டோருக்கும் நிவாரணங்களை வழங்கவுள்ளதாக அவ்வமைச்சு அறிவித்துள்ளது.

இது தொடர்பான விண்ணப்பப் படிவங்கள் அரசியல் பழிவாங்கலுக்குட்பட்டவர்களின் விவகாரங்களுக்கு பொறுப்பான குழுவின் செயலாளர் பீ.கே.விதானகேவினால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

அவ் விண்ணப்பத்தில் தற்போது வகிக்கும் பதவி, ஓய்வூதியத்திற்கு செல்லும் திகதி, எதிர்பார்க்கும் பதவி, பழிவாங்கலுக்கான காரணம் உட்பட பல விபரங்கள் அதில் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பத்தை பூர்த்தி செய்து நாளை மறுதினம் புதன்கிழமைக்கு முன்னதாக செயலாளர், அரசியல் பழிவாங்கலுக்குட்பட்டோருக்கான நிவாரணக் கமிட்டி, கல்வி அமைச்சு, இசுறுபாய, பத்தரமுல்ல, கொழும்பு என்ற முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு அச்செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-15)




## மாற்றுத்திறனாளிகளுக்கு புனர்வாழ்வளிக்கும் செயலமர்வு

சமூக சேவைகள் அமைச்சின் மாற்றுத்திறனாளிகளை சமூக மட்டத்தில் வைத்து புனர்வாழ்வளிக்கும் சி.பி.ஆர் வேலைத் திட்டத்தின் கீழ் முழு நாள் செயலமர்வு நாளை செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு கிளிநொச்சி மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில், மத்திய அரசின் சமூக சேவைகள் அமைச்சின் சீ.பி.ஆர் திட்ட தேசிய இணைப்பாளர் எம்.ஆர்.சாந்தகுமார, சீ.பி.ஆர். திட்ட கிளிநொச்சி இணைப்பாளர் சு.ஜெயானந்தராஜா, சமூக சேவைகள் மாவட்ட சமூக சேவைகள் அலுவலர், தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் மாவட்ட அலுவலர், மாவட்ட உளவள துணையாளர், 4 பிரதேச செயலகப் பிரிவுகளையும் சேர்ந்த சமூக சேவைகள் அலுவலர்கள், சமூக சேவைகள் அபிவிருத்தி அலுவலர்கள், சமூக சேவைகள் உதவியாளர்கள், முதியோர் உரிமைகள் மேம்பாட்டு அலுவலர்கள், தொண்டர்கள், மாற்றுத்திறனாளிகளுக்கான மாவட்ட மட்ட சுயஉதவிக் குழுவின் உறுப்பினர்கள் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

சீ.பி.ஆர் திட்டத்தினது கடந்த கால செயற்பாடுகள் தொடர்பாக இதில் மீளாய்வு செய்யப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (2-254)

## உணவகங்களில் பணிபுரிவோருக்கு மருத்துவ பரிசோதனை அவசியம்

தேசிய உணவு பாதுகாப்பு மாதத்தை முன்னிட்டு வவுனியாவிலுள்ள அனைத்து உணவகங்களிலும் திடீர் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. சுகாதார வைத்திய அதிகாரி எஸ். லவன் தலைமையிலான பொது சுகாதார பரிசோதகர்கள் அடங்கிய குழுவினர் இப்பரிசோதனையில்ஈடுபட்டு வருகின்றனர்.

கடந்த பல மாதங்களுக்கு முன்னர் வவுனியாவில் உள்ள அனைத்து உணவகங்களின் உரிமையாளர்களுக்கும் உணவு பாதுகாப்பு தொடர்பான அறிவுறுத்தல் வழங்கப்பட்டிருந்தது. அதனையடுத்து தொடர்ச்சியாக கண்காணித்து வந்த சுகாதார பரிசோதகர்கள், தற்போது திடீர் பரிசோதனை மேற்கொண்டுள்ளனா.

இதேவேளை, வவுனியா மாவட்டத்தில் நெருப்பு காய்ச்சல் நோயின் தாக்கம் அதிகமாக காணப்படுவதால் உணவு பாதுகாப்பு என்ற விடயத்தில் கூடுதல் கவனம் செலுத்தப்படுவதாகவும் அனைத்து உணவகங்களிலும் பணியாற்றுபவர்கள் மருத்துவ பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டு நெருப்பு காய்ச்சல் தடுப்பு ஊசி ஏற்றப்பட வேண்டும் எனவும் மேற்பார்வை பொது சுகாதார பரிசோதகர் கே.மேஜெயா தெரிவித்துள்ளார்.

மேலும், மருத்துவசான்றிதழ்இன்றி உணவகங்களில் பணிபுரியும் ஊழியர்கள், அவர்களை கடமையில் ஈடுபடுத்தும் உரிமையாளர ஆகியோருக்கு எதிராக நீதிமன்றத்தின் ஊடாக சட்ட நடவடிக்கை எடுக்கவும் தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இந்நிலையில் நீதிமன்றத்தின் உத்தரவின்போரில் குருமன்காடுப் பகுதியில் உள்ள ஒரு உணவகம் சீல் வைக்கப்பட்டுள்ளதுடன் தரமற்ற மற்றும் பாவனைக்குதவாத உணவு வகைகளை வைத்திருந்த குற்றச்சாட்டில் வவுனியா நகர்ப்பகுதியில் உள்ள உணவக மொன்றின் உரிமையாளர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார் என மேற்பார்வை பொது சுகாதார பரிசோதகர் தெரிவித்தார். (2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆறு பேருக்கு எதிராக சிறுவர் துஷ்பிரயோக முறைப்பாடுகள்

(குருமன்காடு)

வவுனியாவில் கடந்த ஒரு மாத காலத்திற்குள் 6 பேருக்கு எதிராக சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பான முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளதாக மாவட்ட சிறுவர் உரிமை மேம்பாட்டு அதிகாரிஜெ.ஜெய க்கெனடி தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது.

புங்குடுதீவு மாணவி வித்தியா வண்புணர்வின் பின்னர் படுகொலை செய்யப்பட்டதை தொடர்ந்து நேற்று வரையிலான கடந்த ஒரு மாத காலத்திற்குள் சிறுமிகள். மாணவி களை துஷ்பிரயோகம் செய்ததாக 6 பேருக்கு எதிராக முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளன.

இவற்றில் சிலருக்கு எதிராக பல முறைப்பாடுகளும் கிடைத்துள் ளன. கன்னாட்டி கணேசபுரம் பாட சாலை ஆசிரியர் ஒருவருக்கு எதி ராக 17 முறைப்பாடுகளும். பூவர சன்குளம் மகாவித்தியாலய ஆசி ரியர் ஒருவருக்கு எதிராக 9 முறைப் பாடுகளும் கிடைக்கப்பெற்றுள் ளன.

இம் முறைப்பாடுகள் தொடர்பில் பொலிஸார் தீவிர விசாரணை களை மேற்கொண்டு வருவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இச் சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பான விசாரணைகளை மேற் கொண்டு வரும்வவுனியா பொலிஸார் இரு ஆசிரியர்கள் உள்ளிட்ட மூவரை யும் கைது செய்து நீதிமன்ற உத்தரவுக் கமைய விளக்கமறியலில் வைத் துள்ளமை குறிப்பிடத்தக்கது.(2-250)

## பொங்கல் விழா

(முள்ளியவளை)

வரலாற்று சிறப்பு மிக்க புதூர் நாகதம்பிரான் ஆலய வருடாந்த பொங்கல் உற்சவம் இன்று திங்கட் க்கிழமை நடைபெறவுள்ளது.

இதற்கான ஏற்பாடுகள் அனை த்தும பூர்த்திசெய்யப்பட்டுள்ளதாகவும் இப்பொங்கலுக்கு வருடாந்தம் இலட்சக்கணக்கான பக்தர்கள் கலந்துகொள்வதாகவும் இதேபோல இந்தமுறையும் பல இலட்சம் பக்த ர்கள் ஆலயத்திற்கு வருகை தரு வார்கள் எனவும் நிர்வாகத்தினர் தெரிவித்துள்ளனர். இதேநேரம் இப் பொங்கலை முன்னிட்டு இ.போ.ச பேருந்துகளும் தனியார் பேருந்துக ளும் விசேட பேருந்து சேவை யினை நடத்தவுள்ளன. (2-302)

# கசிப்பு உற்பத்தி இடம் திடீர் சுற்றி வளைப்பு

(மல்லாவி)

**வவுனிக்குளத்திலுள்ள செல்வபுரம் கிராமத்தில் சட்டவிரோதமான முறையில் கசிப்பு உற்பத்தி செய்த இடத்தை திடீர் சுற்றி வளைப்பு செய்த ஏ-9 வீதியி லுள்ள மாங்குளம் பொலிஸ் நிலையத்தில் போதைப் பொருள் தடுப்பு குற்றப் புலனாய்வு பொலிஸார் இரண்டு பரல் கோடா கசிப்பு, கசிப்பு உற்பத்திக்கு பய ன்படும் உபகரணங்கள் ஆகியவற்றைக் கைப்பற் றியுள்ளதுடன் கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்டுக் கொண்டிருந்த பெண்ணொருவரை யும் கைது செய்துள்ளனர்.**

இச் சம்பவம் தொடர்பில் தெரிய வருவதாவது,


வவுனிக்குளம் செல்வபுரத்தில் சட்டவிரோதமான முறையில் கசிப்பு உற்பத்தி நடைபெற்றுக் கொண் டிருப்பதாக பொலிஸாருக்கு இரகசிய தகவல் ஒன்று கிடைக்கப்பெற்றது

இதனையடுத்து கடந்த 12 ஆம் திகதி இரவு 7 மணியளவில் மேற்படி கசிப்பு உற்பத்திநடைபெற்றுக் கொண் டிருந்த இடத்தை பொலிஸார் முற் றுகையிட்டனர். இதன்போது இரண்டு பரல் கோடா கசிப்பு, கசிப்பு உற்பத்திக்கு பயன்படும் உபகரணங்கள் ஆகியன வும் அவ்விடத்தில் கசிப்பு காய்ச்சிக் கொண்டிருந்த பெண்ணொருவரை யும் பொலிஸார் கைது செய்தனர்.

சம்பவத்தின் போது கைதான பெண்ணை அன்றைய தினம் விசார ணைக்குட்படுத்திய பின்னர் பொலி ஸார் பிணையில் விடுவித்துள் ளனர்.

சந்தேக நபரான பெண்ணை எதிர் வரும் 18 ஆம் திகதி புதன்கிழமை முல் லைத்தீவு மாவட்ட நீதிமன்றில் முற்படுத்தப்படவுள்ளதாகவும் அன் றைய தினமே கசிப்பு கோடாவை யும் பாரப் படுத்தவுள்ளதாகவும் மாங் குளம் பொலி ஸார் மேலும் தெரி வித்தனர். (2-15)



கிளி/கிளிநொச்சி மகா வித்தியாலயத்தில் க.பொ.த. (சா/த) பரீட்சை-2014 ஆம் ஆண்டு சித்தியடைந்த அனைத்து மாணவர்களையும் கௌரவிக்கும் நிகழ்வு அண்மையில் பாடசாலை மண்டபத்தில் நடைபெற்ற போது...
(படங்கள்:-கிளிநொச்சி-1 செய்தியாளர்)

## அங்குரார்ப்பண நிகழ்வு

### உலக யோகா தினம்




ஓம் கிரியா பாபாஜி யோக ஆரண் யத்தின் கனகராயன்குளக் கிளை அங்குரார்ப்பண விழா எதிர்வரும் 21 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை9 மணிக்கு நடைபெறவுள்ளது.

அத்துடன் உலக யோகா தினம் எதிர்வரும் 21 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை கொண்டாடப்படவுள்ளது.

இதனையொட்டி இன்று திங்கட் கிழமை தொடக்கம் எதிர்வரும் 21 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை வரை யோகா கொடிவாரம் அனுஷ்டிக்கப் படவுள்ளது. இதன்போது பாடசாலை மாண வர்கள் மத்தியில் யோகா பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது. (2)

# குடும்பங்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்கு உதவித்திட்டம்

## கிளிநொச்சி அரசாங்க அதிபர் தெரிவிப்பு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தில் சட்ட விரோத கசிப்பு உற்பத்தி மற்றும் விற்பனையில் ஈடுபடுகின்றவர்க ளின் குடும்பங்களை இனம் கண்டு அவர்களுக்கு வாழ்வாதார உதவி களை வழங்குவதற்கு திட்டமிடப்பட் டுள்ளதாக கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அருமை நாயகம் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

கிளிநொச்சி மாவட்டத்தில் சட்ட விரோத கசிப்பு உற்பத்தி மற்றும் விற் பணையில் ஈடுபடுபவர்கள், கிளிநொ ச்சி மாவட்ட செயலக அதிகாரிகளால் அடையாளம் காணப்பட்டு நூற்று க்கு அதிகமான விபரங்கள் தற்போது கிடைக்கப்பெற்றுள்ளன.

கடந்த வாரம் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் மற்றும் உதவி மதுவரி ஆணையாளர் ஆகி யோருடன் கலந்துரையாடல் இடம் பெற்றது.

இதன்போது சட்டவிரோத கசி ப்பு உற்பத்தி மற்றும் விற்ப னை யில் ஈடு படுபவர்களின் விபரங்களை அவர்க ளுக்கு தெரியப்படுத்தி உட னடியாக நடவடிக்கைகளை மேற் கொள்ளுமாறு உத்தரவிட் டேன்.

அவர்கள் உடனடியாக நடவடிக் கைகளை மேற்கொள்வதாக எனக்கு உறுதியளித்துள்ளனர்.

கூடுதலானவர்கள் இந்த சட்ட விரோத கசிப்பு உற்பத்தியை வறுமை யின் நிமிர்த்தம் செய்து வருவதாக அறிய முடிகிறது.

எனவே அவர்களுக்கு விழிப்பு ணர்வு நடவடிக்கைகளை மேற் கொண்டுஅவர்களின்பிள்ளைகளின் எதிர்காலத்தை கருத்தில் கொண்டு அவர்களுக்குரிய வாழ்வாதார நட வடிக்கைகளை மேற்கொள்ள திட்ட மிட்டுள்ளோம்.

அதன்படி அவர்களுக்கு மாற்றுத் தொழில்களை இனம்கண்டு அதனை மேற்கொள்ள இருப்பதாக அவர் மேலும் தெரிவித்தார். (2-9)

## வீதியை கடக்க முற்பட்ட வயோதிபர் வாகனம் மோதியதில் உயிரிழந்தார்

(வவுனியா)

வயலுக்குச் சென்றுவிட்டு வீடு திரும்பியவர் ஏ-9 வீதியை கடக்க முற்பட்ட வேளையில்வாகனம்மோதி முதியவர் உயிரிழந்தார்.

இச் சம்பவம் வவுனியா கனகரா யன்குளம் பகுதியில் நேற்றுக் காலை 9 மணியளவில் நடைபெற்றுள் ளது.

இதில் மேற்படி பகுதியைச் சேர் ந்த நாகமுத்து தெய்வேந்திரப்பி ள்ளை (வயது- 65) சம்பவ இடத்தி லேயே பலியானார்.

இது தொடர்பில் தெரியவருவ தாவது,

பிரஸ்தாப வீதியை கடக்க முற் பட்ட வேளை யாழ்ப்பாணத்தில் இரு ந்து கொழும்பு நோக்கி சென்ற கார் மோதியதில் இவ்விபத்து நேர்ந்துள் ளது.

சடலம் வவுனியா வைத்தியசா லையில் ஒப்படைக்கப்பட்டது.

மேலதிக விசாரணை கனகராயன் குளம் பொலிஸார் மேற்கொண்டுள் ளனர். (2)

## பரீட்சை முன்னாயத்த செயலமர்வு

கிளிநொச்சி மாவட்ட கல்வி அபிவிருத்திக்குழுவின் ஏற்பாட்டில் நாடாளுமன்ற உறுப்பினர் மு.சந்தி ரகுமாரின் நிதி ஒதுக்கீட்டில் தரம் ஐந்து மாணவர்களுக்கான மாதிரி பரீட்சைகள் கடந்த மூன்று வருடங் களாக கிளிநொச்சியில் நடைபெற்று வருகின்றன. அதன் தொடர்ச்சியாக கடந்த வருடங்களில் நடத்தப்பட்ட தரம் ஐந்து மாணவர்களுக்கான பரீட்சை முன்னாயத்த செயலமர்வு இவ் வருடமும் முதற்கட்டமாக ஜெயபுரம் மகா வித்தியாலயத்தில் அண்மையில் இடம்பெற்றது.

மாணவர்களுக்கான வழிகாட் டல் செயலமர்வுகளை ஆசிரியர் அன்பழகன் மற்றும் கிளிநொச்சி கல்வி வலயத்தின் ஆரம்பிரிவு உதவிக் கல்விப்பணிப்பாளர் கணே சலிங்கம் ஆகியோர் நடத்தியிருந்தனர.

இந்த பரீட்சை முன்னாயத்த செயலமர்வில் ஜெயபுரம். முழங்கா வில் பிரதேசங்களை சேர்ந்த 23 வரையான பாடசாலைகளில் இருந்து வருகை தந்திருந்த 450 வரையான மாணவர்கள் கலந்து கொண்டனர்.

அத்தோடு கலந்துகொண்ட மாணவர்களுக்கு பரீட்சை வழி காட்டல் கைநூலும் வழங்கப்பட் டது. இந்த செயலமர்வில் கிளி நொச்சி மாவட்ட கல்வி அபிவிரு த்திக் குழுவின் தலைவர். பாடசா லைகளின் அதிபர்கள், ஆசிரியர் கள், பெற்றோர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர். (2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# சிறுவர் அரங்கம்

1165





# மூன்றாவது பகை!

"நம்ம ஹீரோ சித்து, 7ஆம் வகுப்பு படிக்கிறான். ஹரிதா, ஜனனி, அபிநிதி, திலக் எல்லாம் அவனோட நண்பர்கள்.

இவங்க ஒன்னு சேர்ந்தால், அந்த இடமே அதகளம் ஆயிரும்.

ஒரு நாள் திலக்கிடம், நாலைஞ்சு நாள் விடுமுறை வருது... உருப்படியா ஏதாவது செய்யணும். நான் என் அம்மாவோட மொபெட்டை ஓட்டக் கத்துக்கப் போறேன் என்றான் சித்து.

உடனே அபிநிதி, கீழே விழுந்து கையைக் காலை உடைச்சுக்கப் போற! என்றாள்.

சித்து, ஆரம்பிக்கும் போதே அபசகுனமாப் பேசாதே! என்று சொல்லிட்டு நகர்ந்தான்.

சொன்ன மாதிரியே டி.வி.எஸ். ஸ்ப்ரீஜ் வண்டியை எடுத்துக்கொண்டு பக்கத்து வீட்டு ஹரி அண்ணாவின் உதவியோடு கற்றுக்கொள்ள ஆரம்பித்தான்.

நண்பர்கள், ஓரம்போ ஓரம்போ... சித்துவோட வெஹிக்கிள் வருது... என்று கலாய்க்க ஆரம்பிச்சாங்க. சித்து கொஞ்சமும் அசரலை. நினைச்சதை முடித்துக் காட்டினான்

சில தினங்களில் நன்றாகவே ஓட்டக் கற்றுக்கொண்டான். சூப்பர் பைக்வேர்ல்ட் சாம்பியன்ஷிப் போட்டி எங்கே நடக்குது? நான் அப்ளை செஞ்சாகணுமே என்று ரொம்ப சீரியஸாகவே கேட்டான்.

ரொம்ப அலட்டாதடா... வர வர இவன் இம்சை தாங்க முடியல சாமி... என்று நொந்து கொண்டாள் ஹரிதா.

அவ்வப்போது வண்டியில் நண்பர்களை ஏற்றிக் கொண்டு ரவுண்ட் அடிக்க ஆரம்பித்தான். அப்போது, அவனது பாக்கெட்டில் இருந்த செல்போன் ஒலித்தது. அடப்பாவி, வீட்ல இருந்து செல்லையும் எடுத்துட்டு வந்துட்டியா..? என்று கேட்டாள் ஜனனி.

சித்து செல்லை, ஆன் செய்தவாறு நண்பர்களிடம் என் தங்கைதான் போகோ சேனலில் என்னோட ஃபேவரைட் ப்ரோக்ராம் போடறானாம்...இன்ஃபார்ம் பண்றா என்றவன் வண்டியை ஓட்டிக்கொண்டே, கழுத்தைச் சாய்த்தவாறு பேச ஆரம்பித்தான்.

டேய், டிரைவிங் பண்ணும்போது பேசாதடா... என்றான் திலக். இரண்டு கையால் ஓட்டுறதுக்கே இன்னும் சரியாப் பழகலை. இதுல ஒரு கையில டிரைவிங், இன்னொரு கையில பாக்கிங்கா..? என்று எச்சரித்தாள் ஹரிதா.

சித்து இதுக்கெல்லாம் அசந்துடுவானா என்ன? அப்படியேதான் வீடு வரைக்கும் போனான்.

இது நடந்து நான்கு நாட்களுக்கு அப்புறம் வழக்கமான இடத்தில் நண்பர்கள் டீம் உட்கார்ந்து இருக்க, செல்போனில் பேசிக்கொண்டே அவர்களை நோக்கி வந்தான்.

ஐயாவோட டிரைவிங் திறமை பத்தி உங்களுக்குத் தெரியலை. நின்னு பேசுறதுக்கு எனக்கு டைம் இல்லை என்றான்.

உன் நல்லதுக்குத் தான் சொல்றோம். அண்டர் ஏஜ்ல, பெரியவங்க பாதுகாப்பு இல்லாம இப்படி வண்டி ஓட்டுறதே தப்பு. அதுலயும் செல்போன்ல பேசிட்டே ஓட்டுறது அதை விடத் தப்பு என்றாள் அபிநிதி.

அட்வைஸ்...இங்கிலீஷ்ல யாருக்குமே பிடிக்காத ஒரு வார்த்தை. ஓ.கே, கிளம்பறேன் என்று சொல்லிவிட்டு, திரும்பவும் கழுத்தைச் சாய்த்து, செல்லில் பேசிக்கொண்டே செல்ல முற்பட்டான்.

-தொடரும்-

06.2015
15

## இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்



- கி.மு 763 - மெசொப்பொத்தேமியாவின் வரலாற்றுக் காலக்கோட்டைக் கண்டறிய உதவிய சூரிய கிரகணம் ஒன்றை அசீரியர்கள் பதிந்தார்கள்.
- 923 - பிரான்சின் முதலாம் ரொபேர்ட் மன்னன் கொல்லப்பட்டான்.
- 1184 - நோர்வேயின் ஐந்தாம் மாக்னஸ் மன்னன் ஃபிம்ரெயிட் என்ற இடத்தில் இடம்பெற்ற போரில் கொல்லப்பட்டான்.
- 1246 - இரண்டாம் பிரெடெரிக்கின் இறப்புடன் ஆஸ்திரியாவின் பாபன்பேர்க் அரச வம்சம் அழிந்தது.
- 1389 - கொசோவோவில் இடம்பெற்ற சமரில் ஓட்டோமான் படைகள் செர்பியர்களையும், பொஸ்னியர்களையும் தோற்கடித்தனர்.
- 1667 - சான் பாப்டிஸ்ட் டெனிஸ் என்ற பிரெஞ்ச் மருத்துவர் முதன் முதலில் மனித இரத்த மாற்றீட்டை செயற்படுத்தினார்.
- 1752 - மின்னல் ஒரு மின்சாரம் என்பதை பெஞ்சமின் பிராங்கிளின் நிறுவினார்.
- 1775- அமெரிக்கப் புரட்சிப் போர்: ஜோர்ஜ் வாஷிங்டன் அமெரிக்கத் தரைப்படைத் தளபதியாக நியமனம் பெற்றார்.
- 1808 - ஜோசப் பொனபார்ட் ஸ்பெயின் மன்னனாக முடி சூடினான்.
- 1836 - ஆர்கன்சா ஐக்கிய அமெரிக்காவின் 25 ஆவது மாநிலமானது.
- 1844 - இறப்பர் பதப்படுத்தும் முறை (vulcanization) சார்ல்ஸ் குடியர் என்பவரால் காப்புரிமம் பெறப்பட்டது.
- 1846 - இலங்கையின் ரோயல் ஏசியாட்டிக் சபை என்ற அமைப்பு தனது முதலாவது இதழை வெளியிட்டது.
- 1864 - அமெரிக்க உள்நாட்டுப் போர்: வேர்ஜீனியாவின் பீட்டர்ஸ்பேர்க் நகர் அமெரிக்கப் படைகளின் முற்றுகைக்குள்ளானது.
- 1911 - ஐபிஎம் நிறுவனம் அமைக்கப்பட்டது.
- 1938 - பிரித்தானியாவில் லாஸ்லோ பைரோ குமிழ் முனைப் பேனாக்களைக் கண்டுபிடித்தார்.
- 1944 - இரண்டாம் உலகப் போர்: அமெரிக்கப் படைகள் சாய்ப்பான் தீவை கைப்பற்றின.
- 1954 - ஐரோப்பிய உதைபந்தாட்டக் கூட்டமைப்பு யூஏஃபா சுவிட்சர்லாந்தில் அமைக்கப்பட்டது.
- 2007 - உலகின் மிகவும் நீளமான 34 கி.மீ நீள தொடரூந்து சுரங்கப் பாதை சுவிட்சர்லாந்தில் ஆல்ப்ஸ் மலைக்குக் கீழாக அமைக்கப்பட்டது.
- 2009 - ரிச்மண்ட் ஹில் முருகன் கோவில் கொடியேற்றம்.
- 2009 - ஸ்காபோரோ பெரிய சிவன் கோவில் தீர்த்தம்.

### பிறப்புகள்

- 1914 - யூரி அந்திரோப்பொவ், சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளர் (இ. 1984)
- 1950 - லக்ஸ்மி மிட்டால், லண்டனைச் சேர்ந்த உலகச் செல்வந்தர்களில் ஒருவர்.
- 1953 - உமர் தம்பி, தமிழ்க் கணிமைக்கு சிறந்த பங்களிப்புக்களை வழங்கியவர் (இ. 2006)

### இறப்புகள்

- 1838 - ரோணியஸ், ஜேர்மனியத் தமிழறிஞர் (பி. 1790)
- 1849 - ஜேம்ஸ் போக், ஐக்கிய அமெரிக்காவின் 11ஆவது ஜனாதிபதி (பி. 1795)
- 1948 - ராஜா சர் அண்ணாமலை செட்டியார், (பி. 1881)
- 1971 - வெண்டல் ஸ்டான்லி, நோபல் பரிசு பெற்றவர் (பி. 1904)
- 2008 - தங்கம்மா அப்பாக்குட்டி, ஈழத்தின் ஆன்மிகவாதி (பி. 1925)

### சிறப்பு நாள்

உலகக் காற்று தினம் (World Wind Day)

## "சிவத்தமிழ்ச்செல்வி" தங்கம்மா அப்பாக்குட்டி



1925 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 7 ஆம் திகதி யாழ்ப்பாண மாவட்டம், தெல்லிப்பழையில் அப்பாக்குட்டி- தையற்பிள்ளை தம்பதிகளுக்குப் பிறந்த, சமூக சேவையாளரும், சமயச் சொற்பொழிவாளரும், சைவதுக்கும் தமிழுக்கும் பெரும் தொண்டாற்றியவரும், ஏழை மக்களுக்கும் அநாதைப் பிள்ளைகளுக்கும் ஆதரவு இல்லங்கள் அமைத்து சேவையாற்றியவரும், யாழ்ப்பாணம் தெல்லிப்பழை ஸ்ரீதுர்க்காதேவி தேவஸ்தானத்தின் தலைவராகவும் செயற்பட்டு வந்த **சிவத்தமிழ்ச்செல்வி"** என்று அழைக்கப்படுபவர் தங்கம்மா அப்பாக்குட்டி.

யாழ்ப்பாணத்தில் ஒரு சமய மறுமலர்ச்சியை ஏற்படுத்தியதில் தங்கம்மா அப்பாக்குட்டிக்கு முதன்மையான பங்குண்டு.

1970 களில் சிறிய கோயிலாக இருந்த தெல்லிப்பழை துர்க்கை அம்மன் திருத்தலத்தைக் கட்டியெழுப்பி ஆலயப் பணியுடன் மக்கள் தொண்டும் ஆற்றி வந்தார்.

ஈழத்துச் சிதம்பரம் என்றழைக்கப்படும் காரைநகர் சிவன் கோயிலில் ஆற்றிய சிறப்புச் சொற்பொழிவுக்காக **'சிவத்தமிழ்ச் செல்வி'** என்ற பட்டம் இவருக்கு வழங்கப்பட்டது. மேலும் **'திருவாசகக் கொண்டல்'**, **'செஞ்சொற் செம்மணி'**, **'சிவஞான வித்தகி'**, **'துர்க்கா புரந்தரி'** போன்ற பதினைந்திற்கும் மேற்பட்ட பட்டங்களையும் பதக்கங்களையும் பெற்றுக் கொண்டார்.

ஆலய வளாகத்தில் ஆதரவற்ற சிறுமிகளுக்கென **'துர்க்காபுரம் மகளிர் இல்லம்'** என்ற பெயரில் ஆதரவு நிலையம் ஒன்றை நிறுவி சேவையாற்றி வந்ததோடு, பசித்துவரும் ஏழைகளின் பசி தீர்க்கவும், தொண்டர்தம் பசியாற்றவும் **'அன்னபூரணி அன்னதான மண்டபம்'** அமைத்தார். அத்துடன் கல்யாண மண்டபம், நல்லூரில் துர்க்காதேவி மணிமண்டபம் என்பனவற்றை ஆரம்பித்தார்.

2008 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 15 ஆம் திகதி காலமானார். பல்லாயிரக்கணக்கான மக்கள் மத்தியில் இவரது இறுதி நிகழ்வுகள் இடம்பெற்றன. இவரின் மறைவுக்கு தமிழ்நாடு முதல்வர் கலைஞர் மு. கருணாநிதி இரங்கல் தெரிவித்திருந்தார்.

இலங்கை அரசினால் **கலாசூரி** என்ற பட்டமும் வழங்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்த்

## வாழ்க்கை வரலாறு

155

…'கதையின் கதை

**கோவிலுக்கு வந்த நல்ல செய்தி**

இயல்பில் நடனக் கலைஞராக இல்லா விட்டாலும், ஜோதிகா தனது ஆர்வத்தில் அந்த சந்திரமுகி கேரக்டரோடு கலந்து போனார் என்பதே உண்மை.

ரஜினி சாரை பற்றி சொல்ல வேண்டுமானால், தனது கேரக்டர் என்னவென்று உறுதியானதுமே, அந்த கேரக்டரை தனது மனதுக்குள் 'டிசைன்' பண்ணத் தொடங்கிவிடுவார்.

சரவணன் கேரக்டர், வேட்டையன் கேரக்டர் இந்த இரண்டும் எப்படி எப்படி இருக்க வேண்டும் என்பது பற்றி என்னிடம் விவாதித்துக் கொள்வார்.


இந்தப் படத்தில் ரஜினி சாருக்கே உரிய பஞ்ச் டயலாக்குகள் கிடையாது என்பதை முதலிலேயே முடிவு செய்து கொண்டோம். இருந்தாலும், படத்தில் என்னென்ன செய்யலாம் என்பதை அவர் மனதுக்குள் 'டிசைன்' செய்துவிட்டார்.

ஒருநாள் என்னை அழைத்த ரஜினி, 'படத்தில் வேட்டையன் வரும்போது ஏதாவது புதுமையாக இருந்தால் நல்லது' என்றார். அதோடு நில்லாமல், 'இப்போ நான் ஒரு சீன் பண்ணிக் காட்டுகிறேன். எப்படியிருக்கிறது என்று சொல்லுங்கள்' என்றவர், ஒரு பத்து அடி தூரம் நடந்து போனார்.

அடுத்த கணம் அதே வேகத்தில் திரும்பினார். என்னை நெருங்கியதும் முகத்தில் ஆக்ரோஷமான பாவனையுடன் 'லகலகலகலக' என்று செய்து காட்டினார்.

நான் என்னையும் அறியாமல் 'சூப்பர்'











என்றேன்.

என்றாலும் அவருக்கு சந்தேகம். 'அதெப்படி உடனே 'சூப்பர்'னு சொல்லிட்டீங்க…?' என்று கேட்டார்.

பதிலுக்கு நான் அவரிடம், 'ஒரு தடவை சொன்னா நூறு தடவை சொன்னது மாதிரி' என்று நீங்கள் முன்பு கூறிய வசனம் ரசிகர்களிடம் எப்படி 'ரீச்' ஆனதோ, அதுமாதிரி இந்த 'லகலகலகலக'வும் பிரபலம் ஆகும்.

முதலில் நான் ஒரு ரசிகனா உங்களைப் பார்க்கிறேன். பார்த்ததும் பிடித்துப் போய் விட்டது. இதையே வேட்டையனுக்கான கெட்டப்பில் நீங்கள் செய்யும்போது இன்னும் பிரமாதமாய் இருக்கும்' என்றேன்.

**தெலுங்கிலும் சாதனை**

இந்தப்படம் தமிழில் ரிலீசான 14-4-2005 அன்றே தெலுங்கிலும் 'டப்' செய்து வெளியிடப்பட்டது. 280 நாட்கள் ஓடி பெரிய 'ஹிட்'.


அந்த ஆண்டு தெலுங்கில் நேரடிப் படமாக வந்த தெலுங்கு ஹீரோக்கள் நடித்த படங்களைவிட, இந்தப்படம் அதிகம் வசூல் செய்தது.

இந்தப்படத்தின் பெயரை சொல்லத் தெரியாத சிறுவர்கள்கூட தங்கள் பெற்றோர்களிடம் 'லகலகலகலக படத்துக்குப் போவோம்' என்று நச்சரிப்பு செய்து, தங்கள் பெற்றோரை தியேட்டருக்கு அழைத்துப்போனதாக அறிந்த போது, ரஜினிசாரின் 'லகலக' மகத்துவம் தெரிந்தது.

வேட்டையன் கேரக்டருக்குள் ரஜினி சார் எப்படி ஒன்றிப்போனார் என்பது இன்னும் ஆச்சரியம். 'லகலக' சொல்லி விட்டாரே தவிர, வேட்டையன் கெட்டப்பில் எப்படியிருப்பார் என்பது முடிவாகவில்லை. அதற்கும் அவரே விடையாக வந்தார்.

குஷால்தாஸ் கார்டனில் படப்பிடிப்பு நடந்தபோது, வேட்டையன் கேரக்டரை 'ஸ்டில்'' எடுக்கலாமே என்று பேசினோம்.

(தொடரும்)



# கருவாச்சி காவியம்

## வைரமுத்து – 164

…சீரங்கத்துல ரங்கநாதரு ஒருக்களிச்சுப் படுத்த மாதிரி படுத்தவதான்; ஆடல; அசையல. முந்தானையில முடிஞ்ச காச முழுசா எனக்குக் குடுத்திரு; பாதிய உண்டியல்ல போடுறேன்னு பத்திரகாளியம்மனுக்கும் நேந்துக்கிட்டான்.

அது மூணு தலமொற கண்ட கயித்துக் கட்டிலு. உரிச்ச ஆட்டுக் கொடலு சரியும் பாருங்க.. அப்படிக் கயிறு ஒழுகி நிக்கிற கட்டிலு அது. அவன் நேந்தது வீண் போகல; பத்திரகாளிம்மன் பார்வை பட்டிருச்சு. தல காணிய விட்டுத் தப்பிச்சுக் கயித்துக்கட்டில் ஓட்ட வழி இப்பத் தொங்குதய்யா முந்தான முடிச்சு. அது ஆட ஆட அழகுசிங்கம் ஆவியே ஊசலாடுது.

கட்டிலுக்குக் கீழ தலையக் குடுத்து, சுத்திய வச்சு ஆத்தா முந்தானைய அறுத்துப் பாத்தா ரெண்டே ரெண்டு கால்ரூவா ஈன்னு இளிக்குது. ரெண்டு ஒரு ரூவாய எதிர் பார்த்த பய ரெண்டு கால் ரூவாயக் கண்டதும் சீ! பிச்சக்காரச் சிறுக்கின்னு கத்துனானோ இல்லையோ, கண்ணு முழிச்சு எந்திரிச்சுட்டா கருவாச்சி.

பொழப்பா பொழைக்கிற பொழப்பு… இந்தா இத நீயே வச்சுக்க. நீ செத்தா ஒனக்கு ஒரு நெத்திக் காசு. நான் செத்த எனக்கு ஒரு நெத்திக் காசு. அவ மூஞ்சியிலயே விட்டெறிஞ்சிட்டு விறுவிறுவிறுன்னு வெளியேறிட்டான் அழகுசிங்கம்.

நேரா சலலைக்காரி வீட்டுக்குப் போனான். கழுதை கத்துனா நல்ல சகுனம்ன்னு நெனச்சானோ என்னமோ அத ஓங்கி ஒரு எத்து எத்திக் கத்தவிட்டான்.

கரகாட்டம் பாக்கப் போறேன். நல்லாத்தாகிட்டக் காசு வாங்கிட்டு வா அவள ஏவி விட்டுட்டுத் திண்ணையில அவ வாங்கி வச்சிருந்த ஊர்ச்சோறு தின்டு உக்காந்திட்டான்.

தெள்ளக் கடஞ்சவ திம்சு.

ஒரு தீக்குச்சி இருந்தாக் கரடிக்கிட்டத் தப்பிச்சுக்கிர லாம். மரமேறத் தெரிஞ்சா புலிகிட்டத் தப்பிச்சுக்கிரலாம். பள்ளத்துல எறங்கிக்கிட்டா யானகிட்டத் தப்பிச்சுக்கிர லாம். ஓடாமத் திரும்பிப் பாக்காம நின்னு நிதானமாப் போனா நாய்கிட்டத் தப்பிக்கிரலாம். இப்படி எல்லாம் தெரிஞ்சவளுக்கு காசும் கறித்தண்ணியும் குடுத்தாத்தான் இந்த மொரட்டு முட்டாப் பயகிட்டயிருந்து தப்பிக்க முடியும்ன்னு தெரியாதா?

பச்ச அஞ்சுரூவாயப் பாத்தா பகவானப் பாக்குறமாதிரியிருந்த காலத்துல முழு ரெண்டு ரூவாயத் தூக்கிக் கரகாட்டம் பார்ரா மகனேன்னு குடுத்து விட்டுட்டா.

சோத்துல பள்ளம் வெட்டிக் காசுல மூடிப்புட்டா.

காலம் நகர நகர அவ காயும் நகருது.


கட்டையன் கூட்டாளிகள வேரோட வெட்டிவிடத் திட்டம் போட்டா திம்சு. ரெண்டு மூணு வருசத்துல சாதிச்சும்புட்டா. கட்டையன் கண்ணுல எப்பப்பக் கங்கு தெரியுதோ அப்பப்ப எண்ணெய ஊத்தி எரியவிட்டா. (தொடரும்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூற்றாண்டு கடந்து விட்ட எமது சுதந்திர உணர்வுகளும் தற்போதைய நாட்டின் நிலையும்





தற்போது நிகழ்ந்து கொண்டிருக்கும் அரசியல் நாடகங்களுக்கு மத்தியிலும் அண்மைக்கால நிச்சயமற்றநிலைமைகளிலும் எமது நாட்டின் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த சுதந்திர எழுச்சிக்கு வித்திட்ட 1915 ஆம் ஆண்டுக் கலவரங்களின் நினைவுகள் பரிதாபகரமான விதத்தில் எவருடைய கவனத்திற்கும் உட்படாமல் எதுவித சலனமுமில்லாமலேயே கடந்த மாத இறுதி வாரத்தில் கடந்து சென்றிருந்தது.

நூறு வருடங்களுக்கு முன்னர் 1915 ஆம் ஆண்டு மே 28 ஆம் திகதியன்று எமது நாடு தீப்பற்றி எரிந்து கொண்டிருந்தது. அழிவுக்கேதுவான பல்வேறு காரணிகளடங்கிய ஒரு கூட்டுக்கிளர்ச்சிப் பிரவாகமே அப்போது உருவாகிக்கொண்டிருந்தது. இனவாத உணர்வுகள் (ஆங்கிலக் குடியேற்றவாத) தட்டியெழுப்பப்பட்ட அதன் பின்னணியில் நயவஞ்சக சதித் திட்டங்களுடன் கூடிய அந்த நாள் குடியேற்றவாத அரசின் தவறான ஆளுமை மற்றும் அரச உயர்மட்ட அதிகார துஷ்பிரயோகங்களுடன் உள்ளூர் சுதேச மக்களின் வீர தீர நடவடிக்கைகளும் இணைந்த ஓர் கலப்புக்கிளர்ச்சிப் போராட்டமாகவே அது இருந்தது. கண்டி நகரில் ஆரம்பித்து தீவின் தெருக்களூடாக வியாபித்து பல்வேறு மாவட்டங்களுக்கும் பரவி இறுதியில் தலைநகர் கொழும்பையும் எட்டியிருந்தது.

முன்னணி தேசியவாதிகள் பலரும் சாரி சாரியாக கைது செய்யப்பட்டதுடன் அவர்களது தலைவர்கள் பலரும் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டு அவர்களுள் சிலர் சிறைச்சாலைகளில் மரணத்தையும் தழுவிக்கொள்ளும் நிலை கூட அப்போது ஏற்பட்டிருந்தது. சுதேசிகள் மீது திணிக்கப்பட்ட இப்பரிதாபத்திற்குரிய பொறுப்பற்ற நிலைமையே நாட்டின் சுதந்திரப் போராட்டத்திற்கு வித்திட்டு நாடு தழுவிய சுதந்திரக் கனலை மூட்டியதாயிற்று. திகைப்படைந்த பிரித்தானிய அரசு இராணுவச் சட்டத்தைப் பிரகடனப்படுத்தியதுடன் பஞ்சாப்பின் சீக்கிய வீரர்களை இலங்கைக் கலவரங்களை அடக்கும் பொருட்டு இந்தியாவிலிருந்து அனுப்பிவைத்துமிருந்தது.

இதனைத் தொடர்ந்து குறிப்பிடத்தக்க விடயங்கள் இடம்பெற்றன. தமிழ்த்தேச பக்தர்கள் சிங்களத் தேச பக்தர்களின் பாதுகாப்பின் பொருட்டு பகிரங்கமாகவே அவர்கள் சார்பாக பேசுகையில் பறங்கி இன சட்டத்தரணிகள் இளம் பிரித்தானிய இராணுவ அதிகாரி தலைமையில் இயங்கிவந்த இராணுவ நீதிமன்றங்களில் குற்றப்படுத்தப்பட்ட தேசபக்தர்கள் சார்பாக ஆஜராகத் தொடங்கினர். கிறிஸ்தவர்களான சட்டத்தரணிகள் பலரும் சுதேச நாட்டுப் பற்றாளர்கள் சார்பாக பிரித்தானிய குடியேற்றவாத அரச அதிகாரிகளுக்கு எழுதப்பட்ட மனுக்களை தமது பாதணிகளுக்குள் மறைத்துவைத்துக் கொண்டு கடற்கண்ணிகள் விதைக்கப்பட்டிருந்த ஆபத்தான கடல் வழிப் பயணங்களை மேற்கொண்டு லண்டனில் இருக்கும் பிரித்தானியப் பாராளுமன்றப் பிரதிநிதிகளுக்கு அவற்றை இரகசியமாகக் கடத்திச் சென்று கையளித்துமிருந்தனர். இவைகளெல்லாம் முதலாம் உலகப்போர் கடுமையாக இடம்பெற்றுக்கொண்டிருந்த கால கட்டத்திலேயே இடம்பெற்றிருந்தன. நீண்ட காலப்பின்னணியில் வரலாற்று ரீதியாக இடம்பெற்ற இதுபோன்ற வீரதீரச் செயல்கள் பற்பல!



நூற்றாண்டு கடந்து விட்ட எமது சுதந்திர உணர்வுகளும் தற்போதைய நாட்டின் நிலையும் எனும் தலைப்பில் சண்டே ரைம்ஸ் ஆசிரியர் தலையங்கத்தில் வெளியான கட்டுரையின் தமிழாக்கம் இங்கு பிரசுரமாகின்றது.

இதுவேதான் நாட்டின் பல்லினத்தன்மையிலும் அந்நேரங்களில் நிலவியிருந்த உண்மையான ஒருமைப்பாடு- நாடு சுதந்திரமடைவதற்கு முன்னர் எம்மிடையே வாழ்ந்திருந்த எமது நாட்டின் மூத்த தலைவர்களைக் கொண்டிருந்த ஒரு யுகத்தில் நிலவிய உண்மையான ஒருமைப்பாடும் சகோதரத்துவமாக இருந்து வந்தது. அதுதான் நாட்டுப்பற்று என்ற ஒரே சொல்லின் கீழ் அணிவகுத்துச் செல்லும் தீர்மானத்துடன் கூடிய சுயவிருப்பு- அனைத்து மக்களதும் உண்மையான சுதந்திரம்!

1915 ஆம் ஆண்டின் இந்நிகழ்வுகளே லண்டனிலிருந்த அப்போதைய குடியேற்றவாத அரசின் மனச்சாட்சியைத் தொட்டு உலுக்கியிருந்ததுடன் இலங்கையிலிருந்த தமது அரச பிரதிநிதிகளின் நடவடிக்கைகளை ஆய்ந்தறிந்து நடந்திருந்த பெருந்தவறுகளை உணரவைத்திருந்தது. அப்போது இலங்கையின் ஆளுநராக இருந்த றிச்சேர்ட்ச்சாமேஸ் தண்டிக்கப்படாத போதிலும் லண்டனுக்குத் திருப்பி அழைக்கப்பட்டார். பாளி மொழிக் கல்விமானாக இருந்த அவரது நிர்வாகத் திறமை கேள்விக்கிடமான ஒன்றாகவேயிருந்தது. மன்னிப்புக்கோரும் சம்பிரதாய முறையில் மரணித்த மற்றும் தடுத்து வைக்கப்பட்டிருந்த சில நாட்டுப்பற்றாளர்களது குடும்பங்களின் பேரில் அறிக்கையொன்றும் விடுக்கப்பட்டது.

சரித்திர ரீதியான இந்தப்போராட்டத்தில் பங்குபற்றிய டி.எஸ்.சேனநாயக்க போன்ற இளைஞர்கள் பலரும் அதற்குப் பின்னரும் குடியேற்றவாத ஆதிக்கத்திலிருந்து விடுபட்ட இலங்கை 1948 இல் சுதந்திர நாடாக மாற்றங்கண்டது வரையிலான நிகழ்வுகளையும் கடந்து வந்தவர்களாகவேயிருந்தனர். 1915 ஆம் ஆண்டின் ஆரம்பத்திலேயே இந்த விடுதலை இயக்கத்திற்கு மூத்த தலைவர்கள் வழங்கியிருந்த அதே உத்வேகத்துடன் செயலாற்றிய அவர்கள் முதலில் சட்டவாக்கல் சபையையும் அதனூடாக ராஜ்ய சபையையும் அதனைத் தொடர்ந்து மக்கள் பிரதிநிதிகளுக்கான பாராளுமன்றத்தையும் உருவாக்கி நடைமுறைப்படுத்தியிருந்தனர்.

இந்த 1915 ஆம் ஆண்டுக் கலவரமுங்கூட கண்டி இராச்சியம் பிரித்தானியரிடம் வீழ்ச்சியுற்று நமது இலங்கைத்தீவு அந்தக் குடியேற்றவாத ஆதிக்கத்திடம் சரணாகதியடைந்த இதற்கு முந்திய 1815 ஆம் ஆண்டையும் ஓர் நூறாம் ஆண்டாக நினைவுபடுத்தும் விதத்திலேயே அமைந்திருப்பது இதிலுள்ள ஓர் விசேடமாகும். வெற்றிகொள்ளப்பட்டவர் மீதான வெற்றியாளரது கண்டி ஆட்சியுரிமையின் கீழ் பௌத்தமே பெரும்பான்மையினரது மதம் எனவும் அதன் பாதுகாப்பு உத்தரவாதம் கண்டியில் புதிய நிர்வாகத்திடம் பொறுப்பளிக்கும் விதத்தில் இருபகுதியினருக்குமிடையில் அப்போது ஒப்பந்தமும் கைச்சாத்தாகியிருந்தது.

இந்த ஆட்சியுரிமைப்படி குறித்த அந்தச் சரத்து பௌத்தத்திற்கு வழங்கிய வணக்கத்திற்குரிய மத கௌரவம் கண்டியிலிருந்த அப்போதைய பிரித்தானிய அரச அதிபரால் மதிக்கப்படாது புறக்கணிக்கப்பட்டமையே 1915 ஆம் ஆண்டுக் கலவரங்களுக்குக் காரணமாய் அமைந்தது. நிர்வாக மற்றும் நீதிமன்ற ரீதியில் நடைமுறைக்கு வரும் பல்வேறு கட்டளைகள் காரணமாக இந்திய மூர் இனத்தவர்களும் ஒப்பீட்டளவில் இலங்கையர்களான சுதேச முஸ்லிம் மக்கள் வேறு சிங்கள பௌத்தர்களுக்குமிடையில் பகைமை வளரத் தொடங்கியது. இதன் காரணமாக ஏற்பட்ட 1915 ஆம் ஆண்டுக் கலவரங்கள் முஸ்லிம் கலவரங்கள் என்றழைக்கப்பட்டது தவறான ஒன்றேயாகும். ஏனென்றால் உள் ளூர் முஸ் லிம்களுக்கும் அவற்றுக்கும் சம்பந்தமே இருந்ததில்லை. இறுதியில் ஒருவர் சுடப்பட்டதன் காரணமாக பிரச்சினை பூதாகரமாக வெடித்துக்கிளம்பியது.

1915 ஆம் ஆண்டின் தேசிய எழுச்சிக் கலவரங்கள் ஏன் நினைவுகூரப்படுவதில்லை என்ற விடயத்தை உற்று நோக்கும் எவருக்குமே அது புதிரான ஒன்றாகவே தோன்றக் கூடும். ஏனென்றால், தான் ஓர் சுதந்திர நாடாகி தலைநிமிர வேண்டுமென்ற இலங்கையின் தாகத்திற்கு உணர்வூட்டி ஆக்க ஊக்கமும் தலைமைப் பண்பு மூட்டி வளர்த்த தைரியசாலிகளான அந்தத் தலைவர்களைப் பாராட்டிப் போற்றுவதன்மூலம் இளம் தேசப் பற்றாளர்களை உருவாக்குவதற்கான காலத்தின் கடமையும் சந்தர்ப்பமும் அதுவேயாகும். ஆனாலும் மேற்படி புதிருக்கானவிடை தெளிவானதேயாகும். அண்மைக் காலத்தில் முஸ்லிம்களுக்கெதிரான உணர்வுகளுக்குத் தூபமிடுவது போன்ற சில குழுக்களது மூர்க்கமானஆவேசக்கருத்துக்கள் கொண்ட பிரசாரச் செயற்பாடுகள் தேசியம் என்ற போர்வையில் மோசமானநிலைமைகளுக்குவழியமைத்துவிடலாமென்பதே அதுவாகும்.

தடை செய்யப்பட்டிருந்த வீதிப் போராட்டமொன்றில் ஒரு அங்கமாகப் பங்குபற்றியதற்காக அண்மையில் கைது செய்யப்பட்டிருந்த காவியுடை தரித்த ஓர் முன்னணித் தீவிரவாத பகைமைப் பிரசார தலைவர் கடந்த வாரம் பிணையில் விடுதலை செய்யப்பட்டிருந்தமை முரண்பாடான ஒன்றாகும். முந்தைய நிர்வாகத்தின்கீழ் எப்படியோ குற்றவிலக்கு Impunity பெற்ற ஒருவர் போல் சுதந்திரமாகச் செயற்பட அனுமதிக்கப்பட்டவராக சிறுபான்மைச் சமூகமொன்றின் மத்தியில் அச்சத்தையும் பதற்றத்தையும் ஏற்படுத்திவந்தது மட்டுமல்லாமல் அவர்களுக்கெதிராக வன்முறையைத் தூண்டியும் வந்துள்ளார். தொடரும்...

தமிழில்:யோகர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 20 வருடங்களுக்கு தேசிய அரசாங்கம்

## ஐ.தே.கவும்–சு.கவும் இணைந்து ஆட்சி அமைக்கும் என்கிறார் கிரியெல்ல

(கொழும்பு)

**பொதுத் தேர்தலின் பின்னர் ஐக்கிய தேசியக் கட்சியும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் இணைந்து இருபது வருடங்களுக்கு தேசிய அரசாங்கம் என்ற ரீதியில் இந்நாட்டை ஆட்சி செய்யும். இது விடயத்தில் மாற்றுக் கருத்துக்கு இடமில்லையென்று பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சர் லக்ஸ்மன் கிரியெல்ல தெரிவித்துள்ளார்.**



பெலவத்தை சீனித் தொழிற்சாலையில் நேற்று முன்தினம் சீனி உற்பத்தியை ஆரம்பித்து வைத்த பின்னர் நடைபெற்ற நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் அடுத்து வரும் பொதுத் தேர்தலுக்குப் பிறகு இரு கட்சிகளையும் ஒன்றிணைத்து நாட்டின் ஆட்சியை முன்னெடுப்பதற்கு திட சங்கற்பம் பூண்டிருக்கின்றனர். இதுவரை காலமும் நாம் பிரிந்திருந்து செயலபட்டது போதும். தொடர்ந்து அந்நிலை ஏற்படக்கூடாது. நாட்டை துரிதமாக அபிவிருத்தி செய்ய வேண்டிய பாரிய பொறுப்பும் கடப்பாடும் இவ்விருக் கட்சிகளுக்கும் இருந்து வருகின்றன. நோக்கமும் இலக்கும் ஒன்றாக இருக்கும் போது இணைந்து செயற்படுவதில் தவறேதும் இருக்க முடியாது. இவ் இணைவு மூலம் நாடு எதிர்நோக்கும் அனைத்து பிரச்சினைகளுக்கும் தீர்வுகளை இலகுவில் ஏற்படுத்திக் கொள்ள முடியும். அடுத்து வரும் எமது தலைமுறையினருக்கு வளமானதோர் நாட்டை உருவாக்கிக் கொடுக்க வேண்டும்.

1977 ஆம் ஆண்டு காலப் பகுதியில் மகாவலி அபிவிருத்தித் திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. அத்துடன் கட்டுநாயக்க சுதந்திர வர்த்தக வலயம் உருவாக்கப்பட்டது. அவ் வேளையிலேயே ஊவா மாகாணத்தின் பெலவத்தையில் தொழிற்சாலையும் ஆரம்பமானது. கிராம எழுச்சி திட்டமும் முன்னெடுக்கப்பட்டது. இது போன்ற வேலைத்திட்டங்கள் தொடர்ந்து நடைமுறைப்படுத்தப்படும் போது நாடும் துரிதமாக அபிவிருத்தியடையும்.

நாட்டில் சக்தி மிக்க ஸ்திரமானதோர் ஆட்சி இருக்குமேயானால் வெளிநாடுகள் தமது பணத்தை இந்நாட்டில் முதலீடு செய்து வேலைத்திட்டங்களை ஆரம்பிக்கும. அத்தகையதோர் ஆட்சியை ஏற்படுத்தவே இரு தலைவர்களும் கங்கணம் கட்டி செயற்படுகின்றனர் எனவும் தெரிவித்தார். (இ-5)

## நோயாளிகளுக்கு வழங்கப்படும் விலைப்பட்டியலில் மாற்றம் தேவை

நோயாளிகளுக்கு விபரமாக குறிப்பிடப்பட்ட விலைப் பட்டியல் வழங்கப்பட வேண்டுமென அரசாங்கம் அறிவித்துள்ளது. தனியார் வைத்தியசாலைகள் மற்றும் தனியார் சிகிச்சை நிலையங்களுக்கு இவ்வாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

குறிப்பாக தனியார் வைத்தியசாலைகளில் தங்கியிருந்து சிகிச்சை பெற்றுக் கொள்ளும் நோயாளிகளுக்கு முழு விபரங்களும் அடங்கிய விலைப்பட்டியல் வழங்கப்படவுள்ளது.

இந்த நடைமுறை எதிர் வரும் நவம்பர் மாதம் முதல் அமுல்படுத்தப்பட உள்ளதாக நுகர்வோர் பாதுகாப்பு அதிகார சபை அறிவித்துள்ளது.

இவ்வாறு விபரங்களை வழங்காத வைத்தியசாலைகளுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என நுகர்வோர் பாதுகாப்பு அதிகார சபையின் பணிப்பாளர் நாயகம் எம்.ஏ. டக்ளஸ் தெரிவித்துள்ளார்.

வழங்கப்பட்ட மருந்துப் பொருட்கள், பரிசோதனை விபரங்கள், கட்டணங்கள் உள்ளிட்ட சகல விபரங்களும் உள்ளடக்கி விலைப்பட்டியல் வழங்கப்படவுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (இ-5)

## சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி | கிளிநொச்சி | சுன்னாகம் | மருதனார்மடம் |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 60 | 80 | 90 | 80 | 70-100 | 80 |
| உருளைக்கிழங்கு | 100 | 90 | 100 | 100 | 100 | 100 |
| பச்சைமிளகாய் | 160 | 120 | 110 | 120 | 160 | 120 |
| தக்காளி | 80 | 80 | 80 | 80 | 80 | 80 |
| மரவள்ளிக்கிழங்கு | 50 | 50 | 50 | 60 | 60 | 50 |
| கோவா | 120 | 110 | 110 | 120 | 100 | 100 |
| கரட் | 250 | 200 | 180 | 280 | 120 | 250 |
| பூசணி | 30 | 30 | 40 | 40 | 40 | 30 |
| புடோல் | 120 | 80 | 90 | 80 | 80 | 60 |
| வாழைக்காய் | 60 | 60 | 40 | 40 | 50 | 50 |
| சின்ன வெங்காயம் | 160 | 120 | 120 | 160 | 100 | 100 |
| பெரிய வெங்காயம் | 120 | 100 | 100 | 100 | 100 | 100 |
| பாகற்காய் | 250 | 160 | 150 | 120 | 200 | 180 |
| வெண்டிக்காய் | 150 | 140 | 130 | 120 | 70-120 | 120 |
| கருணைக் கிழங்கு | 150 | 60 | 90 | 140 | 80-200 | 100 |
| பயற்றங்காய் | 150 | 180 | 150 | 120 | 120-140 | 140 |
| லீக்ஸ் | 250 | 180 | 250 | 200 | 160 | 120 |
| பீற்றூட் | 150 | 140 | 120 | 140 | 80 | 80 |
| கறிமிளகாய் | 250 | 200 | 180 | 200 | 100 | 240 |
| முருங்கைக்காய் | 200 | 250 | 300 | 300 | 350 | 300 |
| போஞ்சி | 280 | 230 | 240 | 300 | 240 | 150 |
| கத்தரிதம்புள்ள | 30 | 60 | 50 | 60 | — | 60 |
| கீரை - 1 பிடி | 30 | 30 | 30 | 30 | 40 | 10 |
| தேசிக்காய் | 150 | 140 | 170 | 120 | 160 | 140 |
| தேங்காய் (ஒன்று) | 25-70 | 50 | 40-45 | 40-50 | 60 | 50 |
| இராசவள்ளி | 200 | 150 | 180 | 160 | 120 | 120 |
| வெங்காயப்பூ | — | — | — | — | — | — |
| முள்ளங்கி | 150 | 80 | 100 | 120 | 120 | 60 |
| பொன்னாங்காணி | 40 | 20 | 30 | 20 | 30 | 30 |
| வல்லாரை | 10 | 10 | 20 | 20 | 10 | 20 |

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 402

சுஜே செல்வா

நாம் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் எல்லாவற்றையும் மாற்றமுடியாது... எதையும் எதிர்நோக்காவிடில் மாற்றங்களே இருக்காது...

ருக்சி சிவகுமார்





லக்சி லக்சிகா




பிரவின் தாஸ்




சர்மி சர்மிளா




தர்சிகா தாசன்




நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valam.puri.16 எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆதாரபூர்வமாக வெளிக்கொணரப்பட்ட தந்திரிகளின் மறுமுகம்!

முள்ளிவாய்க்காலில் வைத்து கனிமொழியுடன் மேற்கொண்ட பேச்சுவார்த்தைகளிற்கு பின்னரே மே 16 ஆம் திகதி 2009 இல் காலை 8 மணியளவில் எனது கணவர் இராணுவத்திடம் சரணடைந்தார் என்று வடமாகாண சபை உறுப்பினர் அனந்தி சசிதரன் அவர்கள் தெரிவித்திருந்தார். இதனை கனிமொழி அவர்கள் மறுத்துள்ளார்.

2008 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் வன்னி மேற்கின் பெரும்பாலான பகுதிகளை ஆக்கிரமித்திருந்த சிங்களப் படைகள், கிளிநொச்சியை மையப்படுத்தித் தமது வலிந்த தாக்குதல்களை உக்கிரப்படுத்தியிருந்தன. யுத்த விமானங்கள், ஆட்லறி எறிகணைகள், பல்குழல் பீரங்கிக் கணைகள் சகிதம் கிளிநொச்சியையும், அதனை அண்டிய மக்கள் குடியிருப்புக்களையும் இலக்கு வைத்து சிங்களப் படைகள் நிகழ்த்தி வந்த காட்டுமிராண்டித்தனமான தாக்குதல்களில் நாள்தோறும் தமிழ உயிர்கள் நரபலி வேட்டையாடப்பட்டு வந்தன.

மக்களின் இழப்புக்கள் தொடர்பாக ஊடகங்களில் வெளிவந்த செய்திகளும், போர்நிறுத்தத்தை வலியுறுத்தி தமிழ்த் தேசிய அமைப்புக்களால் முன்னெடுக்கப்பட்ட அறவழிக் கவனயீர்ப்பு நடவடிக்கைகளும், தமிழக மக்களிடையே கொந்தளிப்பான சூழலை தோற்றுவித்திருந்தது. இதற்கு ஏறத்தாள ஒரு மாதத்திற்கு முன்னர் 2008 செப்ரம்பர் மாதம் 9 ஆம் திகதி வவுனியாவில் சிங்களப் படைகளின் கட்டளைப்பீடம் மீது கரும்புலிகளும், வான் புலிகளும் இணைந்து நிகழ்த்திய தாக்குதலில் இந்தியப் படை அதிகாரி ஒருவர் காயமடைந்தமை, தமிழின அழிப்பில் இந்தியா உடந்தையாக இருப்பதைப் பட்டவர்த்தனமாக்கியிருந்தது. இதன் எதிரொலியாக தமிழகத்தில் போர்நிறுத்தத்தை வலியுறுத்தும் மக்களின் தார்மீகக் குரல் ஓங்கியொலிக்கத் தொடங்கியிருந்தது.

ஏறத்தாள ஏழு மாதங்களில் இந்திய நாடாளுமன்றத் தேர்தல் நடைபெறவிருந்த நிலையில், காங்கிரஸ் அரசுக்கு எதிராகத் தமிழகத்தில் எழுந்த எதிர்ப்பலைகள் கலைஞர் கருணாநிதிக்கு பெரும் சங்கடத்தைத் தோற்றுவித்திருந்தன. காங்கிரஸ் கூட்டணியின் அச்சாணி என்று சோனியா காந்தியால் வர்ணிக்கப்பட்ட கருணாநிதியின் அரசியல் எதிர்காலம்கூட ஒருவகையில் தமிழகத்தில் எழுநத எதிர்ப்பலைகளால் கேள்விக்குறியாகும் அபாயமும் மேலோங்கத் தொடங்கியிருநதது. இந்நிலையிலேயே போர்நிறுத்தத்தை வலியுறுத்தும் நாடகம் ஒன்றை கருணாநிதி கனக்கச்சிதமாக அரங்கேற்றத் தொடங்கியிருந்தார்.

டில்லிக்கு தந்தி அனுப்புதல், ஆர்ப்பாட்டம் நிகழ்த்துதல், மனிதச் சங்கிலிப் பேரணிகளை முன்னெடுத்தல் என்று நீண்டு விரிந்து செல்லத் தொடங்கிய கருணாநிதியின் போர்நிறுத்த நாடகம், ஒக்ரோபர் மாதம் 14 ஆம் நாளன்று இந்திய மத்திய அரசுக்கு காலக்கெடு விதிக்கும் காட்சியாகக் கட்டவிழத் தொடங்கியது. இதன்படி பதினான்கு நாட்களில் ஈழத்தில் போர்நிறுத்தத்தை ஏற்படுத்துவதற்கு இந்திய மத்திய அரசு நடவடிக்கை எடுக்கத் தவறும் பட்சத்தில், காங்கிரஸ் கூட்டணியில் அங்கம் வகிக்கும் தமிழகம்-புதுச்சேரி மாநிலங்களைச் சேர்ந்த நாற்பது நாடாளுமன்ற உறுப்பினர்களும் கூண்டோடு பதவி விலகுவார்கள் என்று கருணாநிதி அறிவித்திருந்தார். இதற்கு ஒரு வாரத்திற்கு முன்னர் தமிழீழ மக்களின் தன்னாட்சியுரிமையை அங்கீகரித்து முன்னாள் முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா ஜெயராம் அவர்களும் அறிக்கை ஒன்றை வெளியிட்டிருந்தார்.

இந்த வகையில் கருணாநிதியின் கூண்டோடு பதவி விலகும் அறிவிப்பும், ஜெயலலிதாவின் தன்னாட்சியுரிமை அறிக்கையும் போர்நிறுத்தம் ஏற்படுவதற்கான ஏது நிலைகள் தொடர்பான ஓரளவு நம்பிக்கையை வன்னி மக்களிடையே ஏற்படுத்தியிருந்தன.



தமிழகத்தின் கட்சி அரசியலில் எந்தவொரு காலகட்டத்திலும் தமிழீழ விடுதலைப் புலிகள் தலையிடாத பொழுதும்கூட, ஈழத் தமிழர்களின் நலன்களில் ஒத்திசைவான சமிக்ஞைகளை ஏக காலத்தில் கருணாநிதியும், ஜெயலலிதாவும் வெளியிட்டமை, தமிழீழ விடுதலைப் புலிகளைப் பொறுத்தவரை ஒரு ஆரோக்கியமான விடயமாகவே பார்க்கப்பட்டது.

தமிழீழ விடுதலைப் புலிகளுடன் எவ்விதமான தொடர்புகளையும் தாம் பேணுவதில்லை என்ற தோற்றப்பாட்டை கருண்ணாநிதியின் திராவிட முன்னேற்றக் கழகமும், ஜெயலலிதாவின் அண்ணா திராவிட முன்னேறறக் கழகமும் ஊடகங்களில் காண்பித்து வந்த பொழுதும், தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்கும், தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் காலம்காலமாக உறுதுணையாக நற்கும் தமிழ்த் தேசிய உணர்வாளர்கள் ஊடாக, பின்கதவுத் தொடர்புகளை இவர்கள் பேணியே வந்திருந்தனர்.

இந்த வகையில் தமிழீழ விடுதலைப் புலிகளுடனான பின்கதவுத் தொடர்பாடல்களை 2006 ஆம் ஆண்டிலிருந்து பேராசிரியர் சுப.வீரபாண்டியன் போன்ற தமிழ்த் தேசிய உணர்வாளர்கள் ஊடாகக் கருணாநிதி பேணி வந்திருந்தார். கருணாநிதியின் சந்தர்ப்பவாத அரசியல் தொடர்பாக ஏறத்தாள மூன்று தசாப்த காலப் பட்டறிவைக் கொண்டவர்கள் தமிழீழ விடுதலைப் புலிகள்.

1980களில் எம்.ஜி.ஆர் அவர்களுடன் நெருங்கிய உறவைப் பேணிய ஒரேயொரு காரணத்திற்காக தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு விரோதமான போக்கைக் கையாண்டவர் கருணாநிதி. எம்.ஜி.ஆர் அவர்களின் ஆட்சியில் தமிழகத்தில் கருணாநிதியுடனும் நல்லுறவைத் தமிழீழ விடுதலைப் புலிகள் பேணிய பொழுதும்கூட, விடுதலைப் புலிகளின் விடயத்தில் காழ்ப்புணர்ச்சியுடனேயே கருணாநிதி நடந்துகொண்டார்.

தனது புலிவிரோதப் போக்கின் உச்சகட்டமாக 1994 ஆம் ஆண்டு மே மாதம் வைகோ அவர்களை திராவிட முன்னேற்றக் கழகத்தில் இருந்து வெளியேற்றிய கருணாநிதி, வைகோவைப் பயன்படுத்தித் தன்னைப் படுகொலை செய்வதற்கு தமிழீழ விடுதலைப் புலிகள் முற்பட்டதாகவும் அப்பட்டமான பொய்யையும் அவிழ்த்து விட்டிருந்தார்.

இவ்வாறாக கருணாநிதியின் புலிவிரோதப் போக்கை தமிழீழ விடுதலைப் புலிகள் நன்கு அறிந்திருந்த பொழுதும்கூட, தமிழகத்தின் மூத்த அரசியல் தலைவர் என்ற வகையில் அவருடன நல்லுறவைப் பேணுவதற்கே தமிழீழ விடுதலைப் புலிகள் விரும்பியிருந்தார்கள். இந்த வகையில் போர்நிறுத்தத்தை வலியுறுத்தும் அறிக்கைகளை 2008 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் கருணாநிதி வெளியிடத் தொடங்கிய பொழுது, அவருக்கு தமது நேசக்கரத்தை நீட்டிய தமிழீழ விடுதலைப் புலிகள், ஈழத் தமிழர்களின் துயர்துடைப்பதில் அவரால் ஆற்றக்கூடிய பணிகளையிட்டு நம்பிக்கை வெளியிட்டிருந்தார்கள்.. இதன் ஓர் அங்கமாக ஒக்ரோபர் மாதம் 14 ஆம் திகதி காலையில் கருணாநிதிக்கான அந்தரங்க மடல் ஒன்றை, நேரடியாக அவரது மின்னஞ்சல் முகவரிக்கும், சுப.வீரபாண்டியன் ஊடாகவும் தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர் பா.நடேசன் அவர்கள் அனுப்பி வைத்திருந்தார். அந்த மின்மடல் பின்வருமாறு அமைந்திருந்தது:-

"மாண்புமிகு டாக்டர் மு.கருணாநிதி
முதலமைச்சர்,
தமிழ்நாடு,
இந்தியா.
அன்புடன் அண்ணா,

ஈழத்தமிழ் மக்களின் இன்னல் கண்டு துயர் துடைக்க உங்களால் உங்கள் தலைமையில் ஒழுங்கு செய்யப்பட்டிருக்கும் அனைத்துக்கட்சி மாநாடு சிறப்புடன் நடைபெற என் வாழ்த்துக்களையும் நன்றிகளையும் தெரிவித்துக்கொள்கின்றேன். இம்மாநாடு தொடர் நடவடிக்கைகளின் ஊடாக ஈழத்தமிழ் மக்களின் சுபீட்சமான சுதந்திரமான வாழ்விற்கு வழிசமைக்கும் என எதிர்பார்க்கிறோம்.

நன்றி
புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்
பா. நடேசன்,
பொறுப்பாளர்,
அரசியற்துறை,
தமிழீழ விடுதலைப்புலிகள்,
தமிழீழம்."

எனினும் பதில் எதனையும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு கருணாநிதி அனுப்பவில்லை. இருந்த பொழுதும், மறுநாள் 15 ஆம் திகதியன்று ஈழத்தமிழர்களுக்காக தனது நாடாளுமன்றப் பதவியைத் துறப்பதற்கு தயாராக இருப்பதாகக் தனது தந்தையிடம் கடிதம் ஒன்றை கனிமொழி கையளித்திருந்தார்.

இந்திய நாடாளுமன்றத்தின் மாநிலங்களவையில் (ராஜ்ய சபா) உறுப்பினராக அங்கம் வகித்து வந்த கனிமொழியால் கையளிக்கப்பட்ட இந்தக் கடிதம் ஊடகங்களில் பரபரப்பாக வெளியிடப்பட்டதோடு, கனிமொழியின் தமிழிணப் பற்றுத் தொடர்பாக ஈழத்தமிழர்களிடையே நம்பிக்கையையும் தோற்றுவித்திருந்தது.

ஒரு கவிஞராகவும், கருணாநிதியின் இலக்கிய வாரிசாகவும் ஈழத்தமிழர்களால் அறியப்பட்ட கனிமொழியின் பதவி விலகல் அறிவிப்பு கருணாநிதி மீதான ஈழத்தமிழர்களின் நம்பிக்கையை மேலும் அதிகரித்திருந்தது. இந்நிலையில் ஒக்ரோபர் மாதம் 16 ஆம் திகதியன்று, நேரடியாகவும், சுப.வீரபாண்டியன் ஊடாகவும் கனிமொழிக்கு தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளரால் வாழ்த்துச் செய்தி ஒன்று அனுப்பி வைக்கப்பட்டது. அந்தச் செய்தி பின்வருமாறு அமைந்திருந்தது:-

"அன்பின் சகோதரி கனிமொழிக்கு,

ஈழத்தமிழ் மக்களின் இன்னல் கண்டு இந்த மக்களின் துயர் துடைக்கும் நோக்குடன் உங்கள் இராஜசபா அங்கத்தினர் பதவியைத் துறந்து முன்மாதிரியாக நடந்துகொண்டமை முழுத்தமிழ் மக்களையும் மகிழ்ச்சியிலும் உற்சாகத்திலும் ஆழ்த்தியுள்ளது. இதற்காக நான் எமது இயக்கத்தின் நன்றியினையும் மக்களின் நன்றியினையும் தங்களுக்குத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

நன்றி
புலிகளின் தாகம் தமிழீழத்தாயகம்
பா.நடேசன்,
பொறுப்பாளர்,
அரசியல்துறை,
தமிழீழ விடுதலைப் புலிகள்,
தமிழீழம்."

எனினும் இதற்குப் பின்னரான இரண்டு வார காலப்பகுதியில் கருணாநிதி பிரகடனம் செய்த கூண்டோடு பதவி விலகும் அறிவிப்பு செயல்வடிவம் பெறவேயில்லை. இதேபோன்று தனது தந்தையிடம் கையளித்த பதவி விலகல் கடிதத்தையும் கனிமொழி மீளப்பெற்று தனது ஆசனத்தைப் பாதுகாத்துக் கொண்டார்.

கருணாநிதியினதும், அவரது புதல்வி கனிமொழியினதும் 'தமிழ்ப்பற்று' மீது நம்பிக்கை வைத்திருந்த ஈழத்தமிழர்களுக்கு ஏமாற்றமே மிஞ்சியிருந்தது.

கருணாநிதியின் கூண்டோடு பதவி விலகும் அறிவிப்பு ஒரு நாடகம் என்பது வெட்ட வெளிச்சமாகிப் போக, தமது பதவியைப் பாதுகாப்பதற்காக இந்திய மத்திய அரசின் கூட்டுச் சதிக்கு திரைமறைவில் கருணாநிதி உடந்தையாக நிற்பது பட்டவர்த்தனமாகத் தொடங்கியிருந்தது.

இருந்தபொழுதும் தமது நம்பிக்கையை ஈழத்தமிழினம் தளரவிடவில்லை. இதன் வெளிப்பாடாக போர்நிறுத்தத்தை ஏற்படுத்து வதற்கு நடவடிக்கை எடுக்குமாறு வலியுறுத்தி, 31.10.2008 அன்று தமிழீழ தேசிய போரெழுச்சிக் குழுவின் செயலாளர் சே.முகுந்தன் அவர்களால் சுப.வீரபாண்டியன் ஊடாக கருணாநிதிக்கான மனு ஒன்று அனுப்பி வைக்கப்பட்டது. இதற்கு செவிசாய்த்து எவ்வித நடவடிக்கைகளையும் கருணாநிதி எடுக்காத நிலையில் 02.12.2008 அன்று கருணாநிதிக்கான மற்றுமொரு மனுவொன்று வன்னியிலிருந்து தமிழ் மாணவர் ஒன்றியத்தின் தலைவர் க.ஆதித்தன் அவர்களால் அனுப்பி வைக்கப் படடது. இதன் படியொன்று மீண்டும் 07.12.2008 அன்று தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர் அவர்களால் கருணாநிதியின் நேரடி மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

இருந்த பொழுதும் கருணாநிதியின் மனம் நெகிழவேயில்லை. 02.01.2009 அன்று கிளிநொச்சியை சிங்களப் படைகள் ஆக்கிரமித்த பொழுது தமிழகத்தில் நடைபெற்ற இலக்கிய விழா ஒன்றில் உரையாற்றிய கருணாநிதியின் புதல்வி கனிமொழி, "கிளிநொச்சி வீழ்ச்சியடைந்த செய்தி கிடைத்த பின்னர் இனியும் தமிழினம் பொறுமை காக்க முடியாது" என்ற தொனியில் உரையாற்றியிருந்தார். அவரது உரை இவ்வாறு அமைந்திருந்ததே தவிர அவரது செயல் சிங்கள-இந்திய கூட்டுச்சதியை ஆமோதிக்கும் வகையிலேயே அமைந்திருந்தது. எல்லாவற்றுக்கும் மேலாக புதுடில்லியில் காங்கிரஸ் ஆட்சிபீடத்தின் எண்ணத்தைப் பிரதிபலிக்கும் வகையிலேயே கருணாநிதியினதும், அவரது புதல்வி கனிமொழியினதும் செய்கைகள் அமைந்திருந்தன.

(சேரமான்) (தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேர்தல் மட்டுமே எதிர்பார்ப்பாகும்

## சோபித தேரர் தெரிவிப்பு

(கொழும்பு)

**அரசியல் கட்சிகள் மாத்திரமல்லாது முழு நாடும் தற்போது தேர்தல் ஒன்றை நடத்த வேண்டும் எனக் கோருவதாக நியாயமான சமூகத்திற்கான மக்கள் அமைப்பின் ஒருங்கிணைப்பாளர் மாதுலுவாவே சோபித தேரர் தெரிவித்துள்ளார்.**

நாட்டில் நடைமுறையில் உள்ள அரசியலமைப்பில் பஞ்சர் போடுவதால் எந்த பயனுமில்லை எனவும் அவர் தெரிவித்தார்.

தனியார் தொலைக்காட்சியில் நேற்று முன்தினம் இரவு ஒளிபரப்பான அரசியல் விவாத நிகழ்ச்சியில் கலந்து கொண்டு பேசும் போதே அவர் இதனை தெரிவித்தார்.

அரசியல் கட்சிகள் மாத்திர மல்ல தேர்தல் ஒன்றுக்கு செல்லுமாறு முழு நாடும் கோருகிறது.

நாட்டின் தற்போதைய அரசியலமைப்பில் ஜனாதிபதி ஆட்சி முறையை சரியாக இரத்துச் செய்து கொள்ள முடியவில்லை.

தேர்தல் ஒன்றுக்கு சென்று புதிய அரசாங்கம் ஒன்றை ஏற்படுத்தி, முழு நாடாளுமன்றத்தையும் தெரிவுக் குழுவாக மாற்றி புதிய அரசியலமைப்பை உருவாக்கும் வரை செல்ல வேண்டும் எனவும் மாதுளுவாவே சோபித தேரர் தெரிவித்தார். (இ-5)

# மகிந்த குறித்த கைநூலின் இரண்டாம் பகுதி விரைவில்

"இதைப் பற்றியும் சிந்திக்கவும்" என்ற சர்ச்சைக்குரிய கைநூலின் இரண்டாம் பகுதி விரைவில் வெளியிடப்படவுள்ளது.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தோல்வி, மகிந்த ராஜபக்ஷவின் நடவடிக்கைகள் உள்ளிட்ட பல்வேறு விடயங்களை கடுமையான விமர்சனம் செய்து இந்த கைநூலின் முதல் பகுதி வெளியிடப்பட்டிருந்து.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் ஊடகப் பிரிவு இதனை வெளியிடுவதாகவே கூறப்பட்டிருந்தது.

எனினும், இவ்வாறான எந்தவொரு கைநூல் பற்றியும் தமக்கு தெரியாது எனவும் இவ்வாறான கைநூல்கள் வெளியிட்டால் தாம் அவ்வாறான ஊடக சந்திப்புக்களில் எதிர்காலத்தில் பங்கேற்கப் போவதில்லை எனவும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தேசிய அமைப்பாளர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.

"வெற்றி பெற ஒன்றிணைந்து ஆயத்தமாவோம், வெற்றி தோல்விகளை சரியாக புரிந்து கொள்வோம்" என்ற தலைப்பில் இந்த கைநூலின் இரண்டாம் பகுதி விரைவில் வெளியிடப்படவுள்ளது.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் உருவப்படத்தை அட்டைப் படமாகக் கொண்டு வெளியிடப்பட்ட இதைப் பற்றியும் சிந்திக்கவும் கைநூல், கட்சியில் மட்டுமன்றி அரசியல் வட்டாரத்தில் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியிருந்தது.

இந்த இரண்டு கைநூல்களையும் முன்னாள் அமைச்சர் எஸ்.பி. திஸாநாயக்க எழுதியுள்ளதாக கட்சித் தகவல்கள் தெரிவிக்கின்றன. (இ-5)

# அரசியலில் ஈடுபடப் போவதில்லை கோத்தபாய ராஜபக்ஷ அறிவிப்பு

அரசியலில் ஈடுபடப் போவதில்லை என முன்னாள் பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். பாதுக்க உடுமுல்ல கல்லென் மஹா விகாரையில் நேற்று முன்தினம் நடைபெற்ற போதி பூஜை வழிபாடுகளின் பின்னர், ஊடகவியலாளர்களை சந்தித்த போது இதனைத் தெரிவிததுள்ளார்.

புலனாய்வுப் பிரிவினர் எனக்குத் தகவல்களை வழங்குவதில்லை. இதனால் நாட்டின் தற்போதைய பாதுகாப்பு நிலைமை குறித்து எனக்குத் தெரியாது.

எனது காலத்தில் ஆரம்பிக்கப்பட்ட பாதுகாப்பு ஏற்பாடுகள் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்படும் என எதிர்பார்க்கின்றேன்.



கோத்தபாய அரசியலில் ஈடுபடும் மனிதரல்ல என விஹாராதிபதி தெரிவித்திருந்தார்.

பாதுகாப்புச் செயலாளராக கடமையாற்றிய காலத்தில் நாட்டுக்கு சிறந்த பாதுகாப்பை ஏற்படுத்திக் கொடுத்தே விலகினேன்.

போரின் இறுதிக் கட்டத்தில் மட்டுமல்ல அதன் பின்னரான ஐந்து ஆண்டுகளாகவும் சிறந்த பாதுகாப்பு ஏற்படுத்தப்பட்டது.

எந்தவொரு இன சமூகமும், எந்தவொரு இடத்திற்கும் சுதந்திரமாக செல்லக்கூடிய சூழ்நிலை ஏற்படுத்தப்பட்டிருந்தது. அன்று ஏற்படுத்திய நிலைமை தொடர்ந்தும் நீடிக்கும் என எதிர்பார்க்கின்றேன்.

புலனாய்வுப் பிரிவினர் நிலைமைகளை எனக்குத்தெரிவிப்பதில்லை எனவும் இதனால் நாட்டின் தற்போதைய பாதுகாப்பு குறித்து எனக்குத் தெரியாது எனவும் முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். (இ-5)

# மகிந்தவுக்கு ஆதரவு தெரிவித்து நாவலப்பிட்டியில் பொதுக்கூட்டம்

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு ஆதரவு தெரிவித்து நாவலப்பிட்டியில் நேற்று முன்தினம் பொதுக் கூட்டம் ஒன்று இடம் பெற்றுள்ளது.

'மகிந்தவுடன் மீளெழுவோம் மகிந்த காற்று, நில்வளா போராட்டம்" என்ற தொனிப்பொருளின் கீழ் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை, பிரதமருக்கான வேட்பாளராக அறிவிக்குமாறு கோரியே பொதுக்கூட்டம் நடைபெற்றது.

முன்னாள் அமைச்சர் மகிந்தானந்தே அலுத்கமகே தலைமையில் இந்த கூட்டம் நடைபெற்றது.

ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் உறுப்பினர்கள் சிலருடன், முன்னாள் அமைச்சர்களான பந்துல குணவர்தன, ரோஹித்த அபேகுணவர்தன, மகிந்தானந்தே அலுத்கமகே மற்றும் பாராளுமன்ற உறுப்பினர் மாலினி பொன்சேகா ஆகியோர் கலந்து கொண்டனர்.

இதன்போது பெருந்திரளான மக்கள் கலந்து கொண்டனர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-5)

## இன்று ஒரு தகவல்

### கடவுளையே பதறவைத்த கண்ணப்பன்

உடம்பு வேறு நான் வேறு என்பர் ஞானிகள். அதெப்படி ? என்கிறீர்களா? சொல்கிறேன். திருவண்ணாமலையில் உயிர் விளக்கேற்றிய ரமணமுனிவர் உடல் பற்றிய சிந்தனையே இல்லாமல் பலகாலம் தவம் செய்தவர். ஒரு சமயம் அவர் உடம்பில் ஒரு ரணசிகிச்சை. மயக்க மருந்து கொடுக்காமல் வைத்தியம் செய்ய மருத்துவர் தயங்கினர். ஆனால் ரமணரோ மயக்க மருந்து தேவையில்லை என்றார்.

வலியின் கொடுமை தெரியாதவராக ரமணர் விளங்கினார். ரணத்தைத் தொட்டு அறுத்து சிகிச்சை செய்த போது துடிக்கவும் இல்லை வருந்தவும் இல்லை. வலிக்கவில்லையா என்று கேட்ட போது வலி உடம்புக்குத்தான் எனக்கல்ல என்றார். மேலும் வினவியதும் நான் வேறு என் உடம்பு வேறு என்றார். உடம்பிலிருந்து தன்னை விலக்கிக் கொண்டு உணரும் தெளிவு ரமணரின் அனுபவம்.

எல்லோராலும் இது முடியும். முயற்சி செய்ய நாம் தயங்குகிறோம். எப்படி ? பள்ளிக்குப் போகும் பையனுக்குத் திங்கட்கிழமை காலையில் அப்படி ஒரு வயிற்றுவலி. புழுவாகத்துடிக்கிறான். ஐயோ அம்மா என்று கூச்சல் வேறு. ரேடியோவில் அவனுக்குப் பிடித்த சினிமாப் பாடல் ஒலிபரப்பானது. அவன் மனம் பாட்டுக்குத் தாவியது. தலையை அசைத்துக் கேட்டுக் கொண்டிருந்தான். பாட்டு முடிந்து விளம்பரம் வந்ததும் வயிற்றுவலி மறுபடி தெரிந்தது!

**உடம்பிலிருந்து மனத்தை விலக்கி வேறு ஒன்றின் மேல் வைத்து விட்டால் உடம்பின் உபாதைகள் தெரிவதில்லை. ஞானிகள் பிரம்மத்தில் லயித்து உடம்பில் இருந்து விலகுகிறார்கள். படிப்பு, பயிற்சி, குரு உபதேசம் இவற்றின் மூலம் இந்த ஞானம் பெறுவதுதான் முறையான வழி. ஆனால் இவற்றுள் எந்த ஒன்றின் தொடர்பும் அல்லாமல் ஞானம் பெற்ற உயிர்களும் உண்டு.**

காட்டில் பிறந்து, இரக்கமற்ற வேடுவர்களோடு வளர்ந்து, வேடர் தலைவனாகி வேட்டைக்குப் போனான் திண்ணன். இவர்கள் விரித்த வலையில் சிக்கிய கொழுத்த காட்டுப் பன்றி திடீரென்று தப்பி ஓடியது. வேட்டை நாய்கள் அதைத் துரத்திக் கொண்டு ஓடியது. காடன், நாணன் என்ற நண்பர்கள் உடன் வரத் திண்ணனும் ஓடிப் போய்ப் பன்றியைக் கொன்றான். காடன் தீ மூட்டி பன்றிக் கறி சமைத்தான். தண்ணீர் தாகத்தால் பக்கத்திலிருந்த பொன்முகலி ஆற்றின் கரை சென்றான் திண்ணன். முகத்தைக் கழுவி நிமிர்ந்து பார்த்தால் எதிரில் காளத்தி மலை!

நல்ல காலம் பிறந்து விட்டது. மலைக்கு மேலே என்ன இருக்கு? என்று அறிவு ஆராய்ந்தது. உடன் வந்த நாணனைக் கேட்டான். மேலே உள்ளவர் சிவபெருமான். குடுமித்தேவர் அவர் பெயர். கும்பிடலாம் என்று நாணன் அழைக்க மலைக்கு மேல் பாய்ந்தான் திண்ணன். மலையேறுதல் என்றால்...? பஞ்சபூதங்கள், ஐம்பொறிகள், புலன் உணர்ச்சி போன்ற படிகளைக் கடந்து இறைவனை நோக்கி ஆன்மா பயணப்படுகிறது என்று அர்த்தம்!

கோவிலுக்குள் இருந்து சிவலிங்கமூர்த்தியை ஆர்வத்துடன், ஆச்சர்யத்துடன் பார்த்தான் திண்ணன். ஓடிப் போய்க் கட்டிப் பிடித்துக் கொண்டு அழுதான். முற்றிய நல்லன்பு வெளிப்பட்டது. அழுதால் உன்னைப் பெறலாமே என்ற திருவாசக வரிகள் தெரியாமலேயே அழுதான்... அழுதான்...அப்படி அழுதான். காட்டில் இவர் தனியாக இருக்கிறாரே என்ற அதிசயமான கவலை அவனுக்கு. இவருக்குப் பசிக்குமே என்று தாய்மனம் கொண்டு தட்டழிந்தான். கீழே போய் உணவு கொண்டு வர முடிவெடுத்தான்.

காடன் சுட்டு வைத்திருந்த பன்றிக் கறியை ஒரு கையிலும் வில்லை மறுகையிலும் எடுத்துக் கொண்டு மீண்டும் மலை ஏறினான் திண்ணன். பூவும் தண்ணீரும் அவருக்கு இட்டு வழிபடும் வழக்கத்தை நண்பன் நாணன் சொல்லி இருந்தான். பூவும் தண்ணீரும் எப்படிச் சுமப்பது? சடை விழுந்த பிசுக்குத் தலையில் பூக்களைச் செருகி எச்சில் வாய்க்குள் தண்ணீர் சுமந்து வந்தான். சிவபெருமான் தலையில் இருந்த பழைய பூவை எப்படி எடுப்பது? செருப்புக் காலால் தள்ளியபடி தன் தலையில் இருந்த பூக்களை உதிர்த்தான். இதற்கு நடுவில் எச்சில் நீரால் அபிஷேகம்.

பதம் பார்த்துச் சுட்ட பன்றிக் கறியை ருசி பார்த்து எடுத்து வைத்து பிள்ளைக்குச் சோறூட்டும் தாயாக உணவூட்டி நின்றான் அவன். மாமிசத்தை மறைத்தார் சிவபெருமான். ரொம்பப் பசி என்று நினைத்து மறுபடி கொண்டு வரக் கீழே சென்றான். மறையாலும் முறையாலும் பூசிக்கும் பண்பாளர் சிவகோசாரியார் கோவில் பூசைக்கு வந்தபோது செருப்படியும் நாயடியும் கோவிலுக்குள் தெரிந்தன. நெஞ்சு நொந்தார். மாமிசமும் தெரிந்தது. உயிரோடு நொந்தார்.

ஆறுநாட்கள் அவனுக்கும் இரவுக்கும் இந்த ஞானக் கண்ணாமூச்சி நடந்து கொண்டிருந்தது. அழுது முறையிட்டார் சிவகோசாரியார். அடுக்குமா என்று அரற்றினார். ஆண்டவனோ அவனைக் கை, கால் முளைத்த அன்பு என்று கோடி காட்டினார்.

எச்சில் கடவுளுக்கு ஆகாது என்போம். அன்பு முற்றினால் எச்சில் பார்க்கும் வழக்கம் இல்லை என்பதும் உண்மை தானே. திண்ணன் காலையில் உணவு கொண்டு வரும்போதெல்லாம் உடம்பு இளைத்து மெலிதாகத் தெரிவார் சிவபெருமான். இளைத்தனர் நாயனார் என்று கட்டித் தழுவிக்கொண்டு கண்ணீர் விடுவான் திண்ணன்.

அன்புப் பரீட்சைக்கு அன்று முழுப்பரீட்சை. சிவகோசாரியார் சிலைக்குப் பின்னால் வந்தான் திண்ணன். சிவபெருமான் கண்ணில் இருந்து இரத்தம். பாமர அறிவு படபடத்தது. யார் செய்தார்கள் இந்த அநியாயத்தை என்று சண்டை போட ஆள் தேடியது அந்த வேட்டுவப் புத்தி. அடுத்த விநாடி அன்பு விழித்தது. மருந்து தேடி பச்சிலைகளைப் பறித்துப் பிழிந்து பார்த்தான். இரத்தம் நிற்கவில்லை. ஊனுக்கு ஊன் என்று தன் கண்ணை அம்பால் பெயர்த்து அந்தக் கண்ணில் அப்பினான். இரத்தம் நின்றது. ஆனந்தக் கூத்தாடினான். தான் என்ற தன் முனைப்பு அழிந்தது. சரீரப் பிரக்ஞை செத்தது. ஆனந்தம் தானே மிச்சம்.

அடுத்த விநாடி அடுத்த கண்ணில் இரத்தம். கவலையில்லை திண்ணனுக்கு. வைத்தியம்தான் தெரிந்துவிட்டதே. அடுத்த கண்ணைத் தோண்ட அம்பை எடுத்துக் கண்ணில் வைத்தான். பிறகு பார்வை தெரியாமல் போய் விடுமே என்பதால் அடையாளம் தெரிய சிவபெருமான் முகத்திலேயே காலை வைத்துக்கொண்டான்.

நில்லு கண்ணப்ப நில்லு கண்ணப்ப என்று அலறினார் சிவபெருமான். முதல் கண்ணைத் தோண்டும் போது இதே பரபரப்பு, பதற்றம் அல்லது இரக்கம் சிவனுக்கு இல்லையே. இப்போது மட்டும் எப்படி வந்தது? முதல் கண்ணைத் திண்ணன் தோண்டும் போது பார்த்துக் கொண்டிருந்த கண் சிவனுடைய கண். இப்போது பார்ப்பது கண்ணப்பன் கண்ணல்லவா? பிறர் துயர் தெரிந்த கண்ணோட்டம் உள்ள கண்ணப்பன் கண் கடவுளையே பதற வைத்தது. சிவஞான போதமும் சிவஞான சித்தியாரும் படிக்காமல் சிவஞானம் பெற்றான் கண்ணப்பன். எப்படி தன்னை இழக்கத் தெரிந்து கடவுளை அடையத் தடையாக இருந்த தன்மீது தான் வைக்கும் பற்று என்பதை அறவே இழந்திருந்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாருக்கு ஆப்பு வைக்க முனைகிறார் ரணில்?



கடந்த திங்கட்கிழமை மாலை அவசரமாக கூட்டப்பட்ட அமைச்சரவை, தேர்தல் முறையை மாற்றியமைப்பதற்கான 20 ஆவது திருத்த யோசனைக்கு அங்கீகாரத்தை அளித்திருக்கிறது. ஆனால், பலரும் நினைப்பதுபோன்று, இது வர்த்தமானியில் வெளியிடப்படுவதற்கும் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படுவதற்குமான இறுதியான வரைவு அல்ல. இது ஒரு யோசனை மட்டுமே.

20 ஆவது திருத்தச்சட்டம் நிறைவேற்றப்பட்ட பின்னரே, நாடாளுமன்றத்தை கலைப்பேன் என்பதில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பிடிவாதமாக இருந்துவரும் நிலையில், பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இந்த திருத்த யோசனையை அமைச்சரவையில் சமர்ப்பித்திருந்தார்.

இதற்கு முன்னர், அமைச்சரவையில் 20ஆவது திருத்தச்சட்டம் தொடர்பான இரண்டு யோசனைகள் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. எனினும், அவற்றுக்கு எதிர்ப்புகள் எழுந்திருந்த நிலையில், இது பற்றி ஆராய்ந்து திருத்தங்களை முன்வைப்பதற்கு அமைச்சரவை உபகுழுவொன்றும் நியமிக்கப்பட்டது.

இப்போது திடீரென பிரதமர் ரணில் விக்கிரமசிங்க முன்வைத்துள்ள தேர்தல் முறை மாற்ற யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரத்தை அளித்திருக்கிறது. 20ஆவது திருத்தச்சட்டம் என்பது தற்போதுள்ள தேர்தல் முறையை மாற்றியமைப்பதற்காக மேற்கொள்ளப்படும் முயற்சியாகும்.

தற்போதுள்ள விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறையில் இருக்கும் விருப்பு வாக்கு முறை கடுமையான விமர்சனங்களுக்குள்ளான ஒன்றாக இருந்து வருகிறது. வாக்காளர்களின் விருப்பத் தெரிவைத் தீர்மானிக்கும் ஒன்றாக இது இருந்தாலும், பண பலமே விருப்பத் தெரிவைத் தீர்மானிக்கும் ஒன்றாக மாறியிருப்பதும் விருப்பு வாக்குகளுக்காக ஒரே கட்சி வேட்பாளர்கள் மோதிக்கொள்ளும் சம்பவங்கள் அதிகமாக இடம்பெறுவதாலுமே, பெரும்பாலான கட்சிகள் இதனை வெறுக்கின்றன. அதைவிட, விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறையில் உள்ள மிகப்பெரிய குறைபாடு மாவட்ட ரீதியாகவே தெரிவு இடம்பெறுவதால், தமக்கான பிரதிநிதி யார் என்று பொது மக்களுக்கு தெரியாதுள்ளது. அதுபோல, நாடாளுமன்ற உறுப்பினர்களும் இலகுவாக பொறுப்பை தட்டிக்கழிக்கின்ற நிலை உள்ளது.

விருப்பு வாக்கு மற்றும் பொறுப்புக்கூறலை உறுதிப்படுத்தாமை ஆகிய இரண்டு காரணங்களுமே, விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறையின் முக்கியமான குறைபாடாக கருதப்படுகிறது. ஆனால், இந்த தேர்தல் முறை சிறுபான்மையினர் மற்றும் சிறிய கட்சிகளுக்குச் சாதகமான ஒன்றாக இருக்கிறது என்பதில் மாற்றுக் கருத்துக்கு இடமில்லை.

பெரும்பான்மை மக்களுடன் இணைந்து வாழ்கின்ற சிறுபான்மையினருக்கு அதிக பிரதிநிதித்துவத்தை வழங்கியது இந்த தேர்தல் முறைமையே. அதுபோலவே, இரண்டு பிரதான கட்சிகள் மற்றும் பிரதான தமிழ், முஸ்லிம் கட்சிகள் தவிர்ந்த, தொகுதிவாரியாக வெற்றி பெறும் வாய்ப்பில்லாத சிறிய கட்சிகளையும் நாடாளுமன்றத்தில் பிரதிநிதித்துவம் செய்ய வைத்ததும் இந்த தேர்தல் முறையே.

தனியே தொகுதிவாரியான தேர்தல் முறையின் மூலம் தென்னிலங்கையில் மூன்றாவது அரசியல் சக்தியாக ஒன்று உருவெடுக்க முடியாது. தென்பகுதியில் பிரதான அரசியல் கட்சிகளை தோற்கடித்து தொகுதி ஒன்றில் தனித்து வெற்றி பெறக்கூடிய நிலையில் எந்தவொரு சிறிய அரசியல் கட்சியும் இல்லை.

மக்கள் விடுதலை முன்னணி (ஜே.வி.பி.), ஜாதிக ஹெல உறுமய, மக்கள் ஐக்கிய முன்னணி, இடதுசாரிக் கட்சிகள், தேசிய சுதந்திர முன்னணி என்று எந்தக் கட்சியை எடுத்துக் கொண்டாலும் இதேநிலை உள்ளது. அதுபோலவே, தென்பகுதியில் வாழும் தமிழர்களும் முஸ்லிம்களும்கூட தனியாக போட்டியிட்டு வெற்றி பெறமுடியாது. தொகுதிவாரிப் பிரதிநிதித்துவ முறையின் முக்கியமான குறைபாடு இது.

இதன் காரணமாக, சிறிய அரசியல் கட்சிகளால் சுதந்திரமாக அரசியல் நடத்த முடியாத, தமது கொள்கைகளை முன்னிறுத்த முடியாத நிலை ஏற்படும். குறிப்பாக, கூட்டணிகளில் இணைந்துகொள்ள வேண்டிய நிர்ப்பந்தம் ஒன்று ஏற் படும. ஆனால், மாவட்ட அடிப்படையிலான விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறையின் காரணமாக சிறிய கட்சி களும்கூட தனித்துப் போட்டியிட்டு வெற்றி பெறலாம் என்பதற்கு உத்தரவாதம் அளிக்கப்பட்டுள்ளது.

ஜே.வி.பி., ஜாதிக ஹெல உறுமய போன்ற கட்சிகளால் நாடாளுமன்றத்துக்கு தமது பிரதி நிதிகளை அனுப்ப வழி செய்தது இந்த தேர்தல் முறையே. ஆனாலும், விருப்புவாக்கு முறைமையின் மீதுள்ள வெறுப்பினால்தான் அரசியல் கட்சிகள் இந்த முறையை மாற்றியமைக்க வேண்டும் என்று கங்கணம் கட்டி நிற்கின் றன. இந்த முறை மாற்றப்படுவதால் பாதிக்கப்படப்போவது தமிழ், முஸ்லிம் அரசியல் கட்சிகளும் சிறிய கட்சிகளுமே. இதனால், தேர்தல் முறை மாற்றம் குறித்த யோசனை சமர்ப்பிக்கப்பட்ட போதெல்லாம் தமிழ், முஸ்லிம் கட்சிகளும் சிறு கட்சிகளும் அதற்கு எதிராகவே குரல் கொடுத்துவந்தன. அல்லது தமது பிரதிநிதித்துவத்தை உறுதிப்படுத்தும் மாற்று யோசனைகளை முன்வைக்க வலியுறுத்தின.

20ஆவது திருத்தச்சட்டம் தொடர்பான இதற்கு முன்னர் முன்வைக்கப்பட்ட யோசனைகள் சிலவற்றில் சிறிய மற்றும் சிறுபான்மைக் கட்சிகளின் நலன்களை பாதிக்காத வகையிலான விடயங்கள் உள்ளடக்கப்பட்டன. ஆனால், இப்போது சமர்ப்பிக்கப்பட்டுள்ள யோசனை அவற்றுக்கு நேர் முரணானது. நேரடியாகவே சிறிய மற்றும் சிறுபான்மையினர் கட்சிகளை நாடாளுமன்றத்துக்குள் நுழைய முடியாமல் வெட்டித் தடுக்கும் நோக்கம் கொண்டது.

கடந்த திங்கட்கிழமை அமைச்சரவையால் ஏற்றுக்கொள்ளப்பட்ட யோசனையின்படி, 125 உறுப்பினர்கள் மட்டுமே நேரடியாக தொகுதிவாரி முறைப்படி தெரிவு செய்யப்படுவர். எஞ்சிய 75 பேர் மாவட்ட விகிதாசார அடிப்படையிலும் ஏனைய 25 பேர் நியமன அடிப்படையிலும் தெரிவு செய்யப்படுவர் என்று கூறப்பட்டுள்ளது. இந்த முறையின்படி, தேர்தல் தொகுதிகளின் எண்ணிக்கை 125 ஆக குறைக்கப்பட வேண்டும்.

தற்போது இலங்கையில் மொத்தம் 160 தேர்தல் தொகுதிகள் இருக்கின்றன. இவற்றில் பல உறுப்பினர் தேர்தல் தொகுதிகளும் உள்ளன. இவற்றிலிருந்து இரண்டு அல்லது மூன்று உறுப்பினர்கள் தெரிவாக முடியும். தொகுதிவாரி தேர்தல் முறை மீளவும் கொண்டுவரப்படும்போது மலையகம், கொழும்பு மற்றும் கிழக்கில் தமிழர்களினதும் மலையகம், கொழும்பு, கிழக்கில் முஸ்லிம்களினதும் பிரதிநிதித்துவங்களை உறுதிப்படுத்தும் வகையில் பல உறுப்பினர் தொகுதிகளை உருவாக்க வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டது. அதற்கேற்பவே, நாடாளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கையை 255 வரை அதிகரிக்கலாம் என்று யோசனையும் முன்னர் முன்வைக்கப்பட்டது. ஆனால், தற்போது சமர்ப்பிக்கப்பட்டுள்ள யோசனையின் படி தொகுதிவாரியாக தெரிவுசெய்யப்படும் உறுப்பினர்களின் தொகை 125 ஆக குறைக்கப்படும்போது, ஏற்கனவே இருந்த பல தொகுதிகளே காணாமற்போகும் நிலை ஏற்பட்டுள்ளது. இத்தகைய நிலையில், பல உறுப்பினர் தொகுதிகள் குறித்து சிந்திக்கவே முடியாத நிலை ஏற்படும்.

கடந்த வாரம் அமைச்சரவை அங்கிகரித்த தேர்தல் முறை நடைமுறைக்கு வருமானால், 11 தேர்தல் தொகுதிகளைக் கொண்ட யாழ். மாவட்டத்திலிருந்து 5 அல்லது 6 உறுப்பினர்கள் மாத்திரமே தெரிவுசெய்யப்படும் நிலை ஏற்படும். இதே நிலை, ஏனைய மாவட்டங்களிலும் ஏற்படும். பதுளை யில் உள்ள 9 தொகுதிகள் 6 தொகுதிகளாக குறைக்கப்படும். காலியில் 10 தொகுதிகள் 7 ஆக குறையும். தற்போது 7 தொகுதிகளை கொண்டுள்ள மாத்தறையில் இரண்டு தொகுதகள் இல்லாமல் போகும். 14தொகுதிகளைக் கொண்ட குருநாகல் மாவட்டத்தில, 3 அல்லது 4தொகுதிகளைக் குறைகக நேரிடும். 9 தொகுதிகளைக் கொண்ட கேகாலை, 8 தொகுதிகளைக் கொண்ட இரத்தினபுரி, 7தொகுதிகளைக் கொண்ட அநுராதபுரம், 8 தொகுதிகளைக் கொண்ட களுத்துறை மாவட்டங்களிலும் 2 தொடக்கம் 4 தொகுதிகள்வரை குறைக்க வேண்டிவரும். இது தமிழர், மலையகத் தமிழர், முஸ்லிம்களின் பிரதிநிதித்துவங்களுக்கு மட்டும் ஆப்பு வைக் காது. ஜே.வி.பி., ஜாதிக ஹெல உறுமய போன்ற கட்சிகளுக்கும் பாதகமான விடயமாகும்.

125 உறுப்பினர்கள் மட்டுமே தொகுதி வாரியாகத் தெரிவாகுவர் - மாவட்ட விகிதாசாரப்படி 75 உறுப்பினர்கள் தெரிவாக இடமுள்ளதால் சிறுபான்மையினர் மற்றும் சிறுகட்சிகளின் நலன் பாதகாக்கப்படும் என்ற வாதம் தவறானது. ஏனென்றால், 225 உறுப்பினர்களில் 196 பேர் விகிதாசார முறைப்படி தெரிவாகும்போது, சிறுபான்மையினர் சிறுகட்சிகளுக்கு கிடைத்த வாய்ப்புக்கும் 75 பேரை மட்டும் அந்த முறையில் தெரிவு செய்யும்போது கிடைக்கும் வாய் ப்புக்கும் இடையில் மிகப்பெரிய இடைவெளி இருக்கும்.

விகிதாசார முறைப்படி தெரிவாகும் 75 பேரும் கட்சிகள் பெற்ற வாக்குகளின் அடிப்படையிலேயே தெரிவாகுவர் என்பதால், அங்கேயும் பலம் வாய்ந்த கட்சிகளுக்குத்தான் முன்னுரிமை கிடைக்கும். பிரதிநித்துவம் உறுதியாகும். எனவே, 75 உறுப்பினர்களை மாவட்ட விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறையின் கீழ் தெரிவு செய்வதன் மூலம் சிறுபான்மையினரின் நலன்களை உறுப்படுத்த முடியாது. அதுபோலவே நியமன உறுப்பினர் விடயத்திலும் பெரிய கட்சிகளே ஆதிக்கம் செலுத்தும் நிலையே காணப்படும். இதனால், இந்த தேர்தல் முறை நடைமுறைப்படுத்தப்பட்டால் நிச்சயமாக தமிழ், முஸ்லிம்களின் பிரதிநிதித்துவம் நாடாளுமன்றத்தில் வீழ்ச்சியடையும்.

இந்த நோக்கத்தை அடிப்படையாக கொண்டே இந்த யோசனை சமர்ப்பிக்கப்பட்டுள்ளதா என்ற சந்தேகமும் இருக்கிறது. ஏனென்றால், கடந்த செவ்வாயன்று கொழும்பில் நடத்திய செய்தியாளர் மாநாட்டில் அமைச்சர் அகில விராஜ் காரியவசம், இம்முறை நாடாளுமன்றத் தேர்தலில் சிங்கள பௌத்த மக்களின் வாக்குகளின் மூலம் 125 தொகுதிகளை ஐ.தே.க. கைப்பற்றும் என்று தெரிவித்திருக்கிறார். இதிலிருந்து ஐ.தே.க.வின் இப்போதைய குறி சிங்கள பௌத்த வாக்குகளா என்ற கேள்வியை எழுப்பியிருக்கிறது.

ஏற்கனவே, தேர்தல் முறை மாற்றம் குறித்து சமர்ப்பிக்கப்பட்ட யோசனைகளில் தொகுதிகளின் எண்ணிக்கையை அதிகரிப்பது குறித்து கூறப்பட்டுள்ளபோதிலும், பிரதமர் ரணில் விக்கிரமசிங்க சமர்ப்பித்துள்ள யோசனை அதற்கு எதிர்மாறானதாக அமைந்திருக்கிறது. இது, ரணில் விக்கிரமசிங்கவின் அரசாங்கம் இந்த 20 ஆவது திருத்தச் சட்டத்தை அவசரமாக நிறைவேற்ற எத்தனிக்கிறதா அல்லது அரசாங்கம் மீதுள்ள அழுத்தங்களை குறைக்கவோ அல்லது திசை திருப்பவோ இதனைப் பயன்படுத்த எத்தனிக்கிறதா என்ற கேள்வியை எழுப்பியிருக்கிறது.

20ஆவது திருத்தச்சட்டத்தை நிறைவேற்றவதற்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மை பலம் தேவை. சாதாரண பெரும்பான்மை பலத்தையே கொண்டிராத ரணில் விக்ரமசிங்க அரசாங்கத்திடம் மூன்றில் இரண்டு பெரும்பான்மை பலம் என்பது நினைத்துப் பார்க்க முடியாத விடயம். எனவே எதிர்க்கட்சியினதும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, ஜாதிக ஹெல உறுமய உள்ளிட்ட கட்சிகளினதும் ஆதரவு அரசாங்கத்துக்குத் தேவை.

அமைச்சரவையில் தமக்குள்ள பெரும்பான்மை பலத்தைக் கொண்டு இந்த யோசனையை நிறைவேற்றியிருக்கின்ற அரசாங்கம், இதனை நாடாளுமன்றத்தில் நிறைவேற்ற முடியாது. ஏற்கனவே சிறிய மற்றும் சிறுபான்மைக் கட்சிகள் இதற்கு எதிர்ப்பை வெளியிட்டுள்ளன. எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியிலும் இதற்கு எதிர்ப்புத் தெரிவித்துள்ளது.

இந்த நிலையில், இந்த யோசனை திருத்தப்பட வேண்டும் அல்லது நாடாளுமன்றத்தில் தோற்கடிக்கப்படும். இது ஐ.தே.க. வுக்கு ஒன்றும் தெரியாத விடயமல்ல. ஆனாலும், இப்படியான யோசனையை சமர்ப்பித்து அமைச்சரவையில் அரசாங்கம் நிறைவேற்றியிருக்கிறது என்றால், இதன் பின்னால் ஏதோ ஒரு நரித்தந்திரம் இருப்பதாகவே சந்தேகிக்க வேண்டியுள்ளது. இந்த திருத்த யோசனையின் ஊடாக அரசாங்கம் அடைய நினைக்கும் இலக்கு என்ன? ஆனால் ஒன்றை மட்டும் புரிந்து கொள்ள முடிகிறது. சிறுபான்மையினரின் ஆதரவின் மூலம் ஆட்சியைப் பிடித்துள்ள இப்போதைய அரசாங்கம், அதனையே பணயம் வைத்து அரசியல் ஆட்டத்தை ஆடத்தொடங்கியுள்ளது என்பதே அதுவாகும்.

-கே.சஞ்சயன்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சு.கவின் அரசு அமைக்கும் தேவை ஜனாதிபதி மைத்திரிக்கு இல்லை!

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமையிலான அரசாங்கம் ஒன்றை அமைக்க ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு உண்மையான தேவை இருப்பதை காண முடியவில்லை என ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் மனுஷ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

முன்னாள் தென் மாகாண சபை உறுப்பிரன் கே.பி. அமரபாலவின் வீட்டில் நேற்று முன்தினம்நடைபெற்ற ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் அக்மீமன தொகுதி அதிகார சபைக் கூட்டத்தில் பேசும் போதே அவர் இதனை தெரிவித்தார். தற்போதைய அரசாங்கம் புத்தர் ஆசிர்வதிக்கட்டும் என்ற பெயர் பலகையை மாட்டிக்கொண்டு மாடுகளை கொல்கிறது எனவும் அவர் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, அமைச்சர் ரவி கருணாநாயக்க ஆகியோருக்கு எதிராக கொண்டு வரப்பட்டுள்ள நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு பல்வேறு தடைகள் ஏற்படுத்தப்பட்டு வருகின்றன.20 ஆவது திருத்தச் சட்டத்தை ஐக்கிய தேசியக் கட்சி விரும்பவில்லை. அதற்கும் அந்த கட்சி தடைகளை ஏற்படுத்தி வருகிறது.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பிரதமர் ஒருவரை நியமித்து 20 ஆவது திருத்தச் சட்டத்தை நிறைவேற்றுமாறு நாங்கள் கூறுகிறோம். நாட்டுக்குள் பாரியளவில் கொள்ளைகள் நடந்து வருகின்றன.ஊடக சுதந்திரம் என்பது வார்த்தைகளுக்குள் வரையறுக்கப்பட்டுள்ளது. அனைத்து துறைகளிலும் அழுத்தங்கள் பிரயோகிக்கப்படுகின்றன. அழகான சர்வாதிகாரமே நாட்டில் அமுலில் உள்ளது.

மத்திய வங்கி, காப்புறுதிக் கூட்டுத்தாபனம், சமையல் எரிவாயு நிறுவனங்களில் ஊழல், மோசடி அரசாள்கிறது என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-5)



# பலாலி விமான நிலையத்தை கடலுக்குள் விஸ்தரிக்க திட்டம்

## பிரதியமைச்சர் விஜயகலா தகவல்

(யாழ்ப்பாணம்)

**பலாலி விமான நிலையம் கடலுக்குள் விஸ்தரிக்கப்பட்டு தமிழ் மக்களின் காணிகளில் உள்ள இராணுவத்தையும் வெளியேற்றி இடம்பெயர்ந்த நிலையில் நலன்புரி நிலையங்களில் வாழ்ந்துவரும் மக்களை மீள்குடியேற்றக்கூடிய பெரிய திட்டமொன்றை ஆராயுமாறு அரசாங்கம் தன்னிடம் திட்ட முன்மொழிவு ஒன்றை சமர்ப்பித்துள்ளதாக மகளிர் விவகாரப் பிரதியமைச்சர் திருமதி விஜயகலா மகேஸ்வரன் தெரிவித்துள்ளார்.**

இத்திட்டம் குறித்து பிரதியமைச்சர் விஜயகலா மேலும் தெரிவிக்கையில்,

வலிகாமம் வடக்கு பகுதியில் 25 வருடங்களுக்கு மேலாக எமது மக்கள் மீள்குடியேற்றம் செய்யப்படாமல் பல துன்பங்களை எதிர் நோக்கி வந்துள்ளார்கள்.

நாம் மக்களுக்கு வாக்குறுதி அளித்ததற்கு அமைய முதற்கட்டமாக அவர்களின் சொந்த நிலங்களான ஆயிரத்துக்கு மேற்பட்ட காணிகளை மக்களிடம் கையளித்துள்ளோம்.

38 நலன்புரி நிலையங்களில் மக்கள் உள்ளார்கள். கடந்த கால அரசு நலன்புரி நிலைய மக்களுக்கு எந்த உதவியையும் செய்யவில்லை. அவர்களின் அடிப்படைத்தேவைகள் பூர்த்தி செய்யப்படவில்லை.

தற்போது மீள்குடியேற்றம் செய்யப்பட்ட மக்களுக்கு முழுமையான அடிப்படைவசதிகள் செய்யப்படவில்லை என்பதும் நாம் அறிந்துள்ளோம்.

ஆனால் அவர் களுக்குரிய மாற்று நடவ டிக்கை களுக்கு இந்தியா, அமெரிக்கா, இங்கிலாந்து போன்ற நாடுகள் உதவி செய்வதற்கு முன் வந்துள்ளார்கள். அவர்களின் உதவி களை பெற்று மீள்குடியேற றப்பட்ட மக்களுக்கு அடிப்படை வசதிகள் பூர்த்தி செய்யப்படும்.

நலன்புரி நிலையத்தில் உள்ள மக்களில் அதிகளவானவர்கள் மீனவக் குடும்பங்களாக உள்ளனர்.அவர்களின் முக்கியமான கோரிக்கையாக தம்மை உடனடியாக மீள் குடியேற்ற வேண்டும் என்றும் தமது சுய தொழிலை செய்வதற்கு உதவி செய்ய வேண்டும் என்பதாகும்.

இவர்களின் கோரிக்கையை நாம் மறுகக முடியாது.மீனவ குடும்பங்கள் கடற்கரையோரங்களில் தான் குடியேறவேண்டும். இவர்களை நாம் வேறு இடங்களில் குடியேற்ற முடியாது.

எதிர் வரும் காலங் களில் இவர்களை எமது அரசின் ஊடாக மீள்குடியேற்றி அவர்களுக்குரிய தொழில்வாய்ப்பையும் வழங்குவோம்.

மயிலிட்டிபிரதேசம் முன்னைய காலங்களில் பாரிய மீன் ஏற்றுமதி செய்து வந்த ஒரு பிரதேசம். அதை மிகவிரைவில் பழைய நிலைக்கு கொண்டுவருவதாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க உறுதியளித்துள்ளார்.

பலாலி விமான நிலையம் கடலுக்குள் விஸ்தரிப்பு செய்யப்படும் நடவடிக்கையால் நன்னீர் உவர் நீராக மாற்றம் அடையுமா என நிபுணர்களால் ஆலோசிக்கப்பட்டு வருகின்றது.

இந்த விமான நிலையம் கடலுக்குள் விஸ்தரிக்கப்படும் சந்தர்ப்பத்தில் முழுநிலப்பரப்பும் மக்களிடம் கையளிக்கப்படும். அத்துடன் மக்களின் காணிகளில் இருந்து இராணுவமும் வெளியேற்றப்படும் எனஅவர்மேலும் தெரிவித்தார். (இ-9)

# அரசால் குற்றங்களை நிரூபிக்கவே முடியாது

## மஹிந்தானந்த தெரிவிப்பு



(கொழும்பு)

தற்போதைய அரசாங்கம் கடந்த ஆட்சியின் அமைச்சர்களை திருடர்கள் என குற்றம் சுமத்தினாலும் அந்த குற்றங்களை இதுவரை நிரூபிக்க முடியாத நிலை காணப்படுவதாக முன்னாள் அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே தெரிவித்துள்ளார்.

நாவலபிட்டி ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி அலுவலகத்தில் கட்சி செயற்பாட்டாளர்களுடன் இடம்பெற்ற சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

கடந்த காலத்தில் இருந்த அனைத்து அமைச்சர்களும் திருடர்கள் என குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

முன்னாள் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ சதொசவில் கடன் பெற்று கொண்டார் என தெரிவித்து கைது செய்தனர் என பசில் ராஜபக்ஷ மீதும் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

ஆனால் இன்று அந்த குற்றச்சாட்டுக்களை நிரூபிக்க முடியாத நிலை தற்போதைய அரசாங்கத்திற்கு தோன்றியுள்ளது.

அவை அனைத்தும் அரசியல் பழிவாங்கல்களாகவே காணப்படுகின்றன.

ரணில் விக்கிரமசிங்கவிற்கு இந்த நாட்டு மக்கள் ஆதரவு கொடுக்கவில்லை. ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிற்கு நாட்டு மக்கள் வாக்களித்தனர்.

ஆனால் ஐக்கிய தேசிய கட்சிக்கு ஆட்சியமைப்பதற்கோ, ரணில் விக்கிரமசிங்கவிற்கு பிரதமராவதற்கோ இந்நாட்டு மக்கள் வாக்களிக்கவில்லை. எதிர்வரும் பொது தேர்தலில் மகிந்த ராஜபக்ஷ பிரதமராக முன்வநதால், எமது அரசாங்கமொன்றை நிறுவ முடியும்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன முன்வைத்த 100 நாள் வேலைத்திட்டத்திற்கு நாம் அனைவரும் ஒத்துழைப்பு வழங்கினோம்.

தற்போது அந்த 100 நாளும் முடிவடைந்து விட்டது.

கிராமம், நகரம் இரண்டையும் அபிவிருத்தி செய்ய வேண்டுமெனில், எதிர்வரும் பொது தேர்தலில் ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பு அரசாங்கமொன்றை அமைப்பதற்கு முடியும்.

அதற்காக ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி, ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பின் ஏனைய கட்சிகள் இணைந்து எதிர்வரும் பொது தேர்தலில் இணைந்து செயற்படுதல் வெற்றிக்கான அடித்தளமாக அமையும் என முன்னாள் அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே சுட்டிக்காட்டியுள்ளார். (இ-5)



இலக்கியத்திற்கான நோபல் பரிசு பெற்றவரும் இந்தியாவின் தேசிய கீதமான ஜனகணமன பாடலை இயற்றியவருமான குருதேவ் ரவீந்திரநாத் தாகூரின் 154 ஆவது பிறந்த தின நினைவு தினமும் 1934 ஆம் ஆண்டு காலப்பகுதியில் யாழ்ப்பாணத்திற்கு அவர் வருகை தந்த நாளை நினைவு கூரும் நிகழ்வும் நேற்றுமுன்தினம் யாழ். பொதுநூலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்ற போது..

(படங்கள்:- பொ.சோபிகா)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





யாழ்.பல்கலைக்கழக விலங்கியல் மாணவர் ஒன்றியத்தினால் உலக சுற்றுச்சூழல் தினத்தை முன்னிட்டு கடந்த வியாழனன்று யாழ்.நெல்லியடி மத்திய கல்லூரியில் தொண்டைமானாறு கடல் நீரேரி பிரதேசத்தை அண்டிய பாடசாலை மாணவர்களுக்கு கருத்தரங்கு நடத்தப்பட்டது. இக்கருத்தரங்கில் செல்வி ருபீனா, கண்டல் தாவரத்தின் முக்கியத்துவமும் அதன் பாதுகாப்பு முறைகள் பற்றியும், செல்வி ஜெயசுதா கரையோரச் சூழலின் மாசடைவும் அதன் விளைவுகளும் பாதுகாப்பு முறைகள் பற்றியும், செல்வி டொரின் விவசாய இரசாயனங்களின் விளைவுகள் பற்றியும் கலந்துரையாடினர். இதில் யாழ்.பல்கலைக்கழக விஞ்ஞானபீட விலங்கியல் துறை தலைவர் கலாநிதி திருமதி ஞானேஸ்வரன், நெல்லியடி மத்திய கல்லூலியின் பிரதி அதிபர், வடமராட்சி வலய பாடசாலை ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் இதில் கலந்து கொண்டனர். இந்த நிகழ்வின் நினைவாக ஒவ்வொரு பாடசாலைக்கும் கமுகு கன்று வழங்கப்பட்டது.

# லண்டன் பேச்சுவார்த்தை குறித்த அறிக்கையை வெளியிட வேண்டும்

## நாடுகடந்த தமிழீழ அரசு வலியுறுத்து

(கொழும்பு)

**தமிழ் மக்களின் உடனடி தேவைகள் மற்றும் தமிழர் பிரச்சினை குறித்து உத்தியோகபூர்வமாக அல்லது உத்தியோக பூர்வமற்ற முறையில் பேச்சு நடத்துவது புதிய ஒன்றல்ல எனவும் லண்டன் பேச்சுவார்த்தை குறித்த அறிக்கையை தமிழ் தரப்பு வெளியிட வேண்டும் எனவும் நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தின் பிரதமர் வி.உருத்திரகுமாரன் தெரிவித்துள்ளார்.**

கடந்த காலங்களில் நடத்தப்பட்ட பல சந்திப்புக்களில் பங்கேற்ற வகையில் இலங்கை அரசாங்கங்கள் அரங்கேற்றும் நாடகங்கள் தொடர்பில் நன்கு அறிந்துள்ளதாக தெரிவித்தார்.

ஒரு பேச்சுவார்த்தை ஆரம்பிக்கும் போது விடயங்கள் மாத்திரமன்றி அது காலவரையறைக்குள் அமையவேண்டும். இந்தநிலையில் தமிழர் பிரச்சினை தொடர்பில் யார் பேசினாலும் அவர்கள் தமிழர் நலனில் அக்கறை கொண்டவர்களாக இருக்கவேண்டும். இந்த நிலையில் இந்தவாரம் இலங்கை அரசாங்கத்துக்கும் உலக தமிழர் பேரவைக்கும் இடையில் இடம் பெற்ற பேச்சுக்கள் தொடர்பில் பல கேள்விகள் எழுந்துள்ளன.

சர்வதேச ஆதரவுடன் பேச்சுவார்த்தைக்கான காலவரையறை மற்றும் போர்க்குற்றங்கள் தொடர்பில் சர்வதேச விசாரணை இலங்கை அரசாங்கத்தினால் சர்வதேச உதவியுடனான உள்ளக விசாரணையாக மாற்றப்படும் முயற்சி என்பன தொடர்பில் இந்த கேள்விகள் எழுந்துள்ளன.

குறித்த பேச்சுவார்த்தையின் போது பங்கேற்பாளர்கள் யார் என்ற மறைக்கப்பட்ட நிலையில் அந்த சந்திப்பில் பேசப்பட்ட விடயங்களின் உண்மை குறித்து சந்தேகம் எழுந்துள்ளது என்றும் உருத்திரகுமாரன் குறிப்பிட்டுள்ளார்.

இந்த பேச்சுவார்த்தையை பொறுத்தவரை தமிழ் புலம்பெயர்வாளர்களின் பரப்புரைகளை கட்டுப்படுத்தும் நடவடிக்கையாகவே கருத வேண்டியுள்ளது.

தமிழர்களின் உடனடி தேவைகள் குறித்து பேச வேண்டுமானால் தமிழர் பிரதிநிதிகள் இலங்கையிலேயே பேசமுடியும். நடைமுறை அரசாங்கம், குறுகிய ஆயுளையே கொண்டிருக்கிறது

எனவே இந்த அரசாங்கத்துடன் நடத்தும் பேச்சுவார்த்தை தமிழர் நலனில் எந்தளவு அக்கறை செலுத்தும் என்று அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

இந்த பேச்சுவார்த்தையில் உத்தியோகபூர்வமாக அமையாமல் தமிழ் தேசியக் கூட்டமைப்பு மற்றும் உலக தமிழர் பேரவையின் தனிப்பட்டவர்கள் பங்கேற்றமையானது மேலும் சந்தேகத்தை ஏற்படுத்துகிறது.

எனவே தமிழ் தேசியக் கூட்டமைப்பும் உலக தமிழர் பேரவையும் இந்த பேச்சுவார்த்தை தொடர்பில் உத்தியோகபூர்வ நிலைப்பாட்டையும், அதில் பேசப்பட்ட விடயங்களையும் வெளிக்கொணர கடமைப்பட்டுள்ளனர்.

இது உத்தியோகபூர்வ பேச்சுவார்த்தையாக இருக்குமானால், தமிழ் தேசியக் கூட்டமைப்பும் உலக தமிழர் பேரவையும் பேசப்பட்ட விடயங்கள் தொடர்பில் உத்தியோகபூர்வ அறிக்கையை வெளியிடவேண்டும்.

இதேவேளை சுயஆட்சிக்கான தொடர்பான சர்வஜன வாக்கெடுப்பு, போர்க்குற்ற விசாரணை, தமிழ் புலம்பெயர்வாளர்களின் உதவியுடன் இலங்கை தமிழர்களின் வாழ்வாதாரத்துக்கு உதவும் பொறிமுறை என்பவற்றை வலியுறுத்தி வருவதன் காரணமாகவே நாடு கடந்த தமிழீழ அரசாங்கம் இந்த பேச்சுவார்த்தைக்கு அழைக்கப்படவில்லை என்றும் உருத்திரகுமாரன் மேலும் சுட்டிக்காட்டியுள்ளார். (இ-5)

# 20ம் திருத்தம் நிறைவேறும்வரை உண்ணாவிரதப் போராட்டம்

20ம் திருத்தச் சட்டத்தை நிறைவேற்றிக்கொள்ள சாகும் வரையில் உண்ணாவிரதப் போராட்டமொன்றை நடத்த தேசிய சங்க சம்மேளனம் தீர்மானித்துள்ளது.

20ம் திருத்தச் சட்டத்தை உடனடியாக அமுல்படுத்துமாறு அரசாங்கத்தை வலியுறுத்தும் வகையில் தொடர் சத்தியாக் கிரக போராட்டத்தையும், சாகும் வரையிலான உண்ணாவிரதப் போராட்டமொன்றையும் மேற்கொள்ளத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

தற்போதைய அரசாங்கம் 20ம் திருத்தச் சட்டத்தை நிறைவேற்ற தேவையான நடவடிக்கைகளை இந்த வாரத்தில் மேற்கொள்ளத் தவறினால், போராட்டங்கள் முன்னெடுக்கப்படும் என தேசிய சங்க சம்மேளனத்தின் பொதுச் செயலாளர் ஆனந்த சாகர தேரர் சிங்கள பத்திரிகையொன்றுக்குத் தெரிவித்துள்ளார்.

20ம் திருத்தச் சட்டத்தை அமுல்படுத்துவது மேலும் தாமதிக்கப்படக் கூடாது, அதனை உடனடியாக அமுல்படுத்த வேண்டும்.

நாடாளுமன்றைக் கலைத்து பொதுத் தேர்தல் நடத்த எவ்வித அவசியமும் கிடையாது.

அரசாங்கம் தொடர்ந்தும் இதே விதமாக நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென ஆனந்த தேரர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-5)

## பிரிவுத்துயர் பகிர்வு

### திருமதி கந்தசாமி புஸ்பராணி



ஏழாலை மேற்கைப் பிறப்பிடமாகவும் கனடா ரொரன்ரோவை வதிவிடமாகவும் கொண்ட கந்தசாமி புஸ்பராணி நேற்று முன்தினம் 13 ஆம் திகதி சனிக்கிழமையன்று காலமானார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று திங்கட்கிழமை காலை 9 மணி தொடக்கம் நண்பகல் 12 மணிவரை Chapel Ridge Funeral Home, 8911 Woodbine Ave, Markham ON L3R 5G1, Canada என்னும் முகவரியில் நடைபெற்று பின்னர் பூதவுடல் தகனம் செய்யப்படும்.

### கனகசபாபதி குலநாயகம்



புங்குடுதீவு 12ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் கிளிநொச்சி வட்டக்கச்சி, பிரான்சை வதிவிடமாகவும் கொண்ட கனகசபாபதி குலநாயகம் கடந்த 12 ஆம் திகதி வெள்ளிக்கிழமையன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் எதிர்வரும் வியாழக்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் நண்பகல் 12 மணிவரை Crematorium Pere Lachaise, 71 Rue Des Rondeaux, 75020 Paris, France (Metro gambetta) என்னும் முகவரியில் நடைபெற்று பின்னர் பூதவுடல் தகனம் செய்யப்படும்.

### ஞானேஸ்வரன் கோகிலவதனன்



தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகவும் சங்கானையை வசிப்பிடமாக வும் கொண்ட ஞானேஸ்வரன் கோகிலவதனன் கடந்த 12ஆம் திகதி வெள்ளிக்கிழமையன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று அவரது இல்லத்தில் நடைபெற்று பின்னர் பூதவுடல் பிற்பகல் 3 மணியளவில் கரைச்சி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

### திருமதி இராமலிங்கம் தங்கம்மா



குப்பிளானைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட இராமலிங்கம் தங்கம்மா நேற்று முன்தினம் 13 ஆம் திகதி சனிக் கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று திங்கட்கிழமை நடைபெற்று பின்னர் பூதவுடல் குப் பிளான் மயானத்தில் தகனம் செய்யப்படும்.

### திருமதி தம்பிஜயா கைலேஸ்வரி



கொக்குவில் தாவடி வடக்கைப் பிறப்பிடமாகவும் பிரான்ஸ் Longjumeau ஐ வதிவிடமாகவும் கொண்ட தம்பிஜயா கைலேஸ்வரி கடந்த 11 ஆம் திகதி வியாழக்கிழமையன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை மறுதினம் புதன்கிழமை காலை 9 மணி தொடக்கம் முற்பகல் 11 மணிவரை A la Chambre funeraire situee, Rue des Sapeurs Pompiers de Paris, 94190 villeneuve- Saint- Georges, France எனும் முகவரியில் நடைபெற்று பின்னர் பூதவுடல் தகனம் செய்யப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாதுகாப்புப் படையினரின் தாக்குதலில் பயங்கரவாதிகள் 2,763 பேர் உயிரிழப்பு!

(இஸ்லாமாபாத்)

**பாகிஸ்தான் பாதுகாப்புப் படையினர் கடந்த ஜூன் மாதம் முதல் பயங்கரவாதிகளுக்கு எதிராக நிகழ்த்தி வரும் "ஜரப்-இ-அஸப்" என்னும் தொடர் தாக்குதல் நடவடிக்கையில் இதுவரை 2,763 பயங்கரவாதிகள் கொல்லப்பட்டதாக அந்நாட்டு இராணுவம் நேற்று முன்தினம் சனிக்கிழமை தெரிவித்துள்ளது.**



பாகிஸ்தான் இராணுவம் சார்பில் வெளியிடப்பட்ட செய்திக்குறிப்பில் மேலும் தெரிவித்திருப்பதாவது,

கடந்த ஆண்டு ஜூன் மாதம், கராச்சி விமான நிலையத்தில் பயங்கரவாதிகள் நிகழ்த்திய தாக்குதலில் காவலர்கள் உட்பட 26 பேர் உயிரிழந்தனர்.

இதையடுத்து, பாகிஸ்தானில் செயற்பட்டு வரும் உள்நாட்டைச் சேர்ந்த மற்றும் வெளிநாட்டு பயங்கரவாதிகளை ஒழித்துக்கட்ட "ஜரப்-இ-அஸப்" என்னும் தாக்குதல் நடவடிக்கை திட்டமிடப்பட்டது. இராணுவத்தினர், விமானப் படையினர் ஒருங்கிணைந்து, கடந்த ஆண்டு ஜூன் மாதம் முதல் இந்த தாக்குதல் நடவடிக்கையை மேற்கொண்டு வருகின்றனர். இந்த ஓராண்டில் 2,763 பயங்கரவாதிகள் கொல்லப்பட்டனர். அவர்கள் பயன்படுத்தி வந்த 837 மறைவிடங்கள் அழிக்கப்பட்டுள்ளன. 253 தொன் அளவிலான வெடிபொருட்கள் கைப்பற்றப்பட்டன.

வடக்கு வசிரிஸ்தான் மாகாணத்தில் மட்டும் பெரிய வகை இயந்திரத் துப்பாக்கிகள், இலகு ரக இயந்திரத் துப்பாக்கிகள், ஏ.கே.47 உள்ளிட்ட பல்வேறு ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டன.

நாடு முழுவதும் பல்வேறு நகரப் பகுதிகளில் 9ஆயிரத்திற்கும் மேற்பட்ட தேடுதல் வேட்டைகள் நடைபெறுள்ளன. ஆயிரத்துக்கும் மேற்பட்ட பயங்கரவாதிகள் கைது செய்யப்பட்டனர்.

அதிபயங்கரவாதிகள் என்று கருதப்படும் 218 பேர் கொல்லப்பட்டனர். ஓராண்டாகத் தொடர்ந்து வரும இந்த தாக்குதல் நடவடிக்கைகளின்போது நாட்டின் பாதுகாப்புப் படைகளைச் சேர்ந்த 347 அதிகாரிகளும் வீரர்களும் பலியாகினர்.

நாட்டின் அனைத்துப் பகுதிகளிலும் உள்ள பயங்கரவாதிகள் முற்றிலும் அழிக்கப்படும் வரை "ஜரப்-இ-அஸப்" தாக்குதல்நடவடிக்கை தொடரும் என்று பாகிஸ்தான இராணுவம் தெரிவித்துள்ளது. (இ-5)

## சூடான் ஜனாதிபதியைக் கைதுசெய்யுமாறு தென்னாபிரிக்காவிடம் ஐ.சி.சி.கோரிக்கை

சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தின் (ஐ.சி.சி) முன்னால் நிறுத்தப்பட வேண்டியவர் என்று அறிவிக் கப்பட்ட சூடான் ஜனாதிபதி ஒமர் அல் பஷிர், ஆபிரிக்க யூனியன் மாநாட்டில் கலந்துகொள்வதற்காக தென்னாபிரிக்கா சென்றுள்ளார்.

மனித குலத்துக்கு எதிரான குற்றங்கள், போர்க்குற்றங்கள் மற்றும் இனப்படுகொலை ஆகிய குற்றச்சாட்டுக்கள் ஒமர் அல் பஷிர் மீது சுமத்தப்பட்டுள்ளன.

அவரைக் கைதுசெய்யுமாறு தென்னாபிரிக்க அரசாங்கத்திடம் சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் கோரியுள்ளது.

சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தை ஏற்றுக்கொண்டுள்ள உறுப்பு நாடுகளில் ஒன்றான தென்னாபிரிக்கா சூடான் ஜனாதிபதி கைதுசெய்வதற்கு கடமைப்பட்டுள்ளது.

சர்வதேச நீதிமன்றத்தின் இந்த கோரிக்கைக்கு உடன்படுவதற்கு ஆபிரிக்க யூனியன் முன்னதாக மறுத்திருந்தது குறிப்பிடத்தக்கது.(இ)




## விமானத் தாக்குதலில் சிக்கி 20 பயங்கரவாதிகள் பலி!

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தானின் வடக்கு வசிரிஸ்தான் பகுதியில் விமானப் படையினர் நேற்று முன்தினம் சனிக்கிழமை நடத்திய தாக்குதலில் 20 பயங்கரவாதிகள் கொல்லப்படடுள்ளனர்.

தலைநகர் இஸ்லாமாபாதில் இது குறித்து இராணுவத்தின் சார்பில் வெளியிடப்பட்ட செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

ஆப்கானிஸ்தானையொட்டிய வடக்கு வசிரிஸ்தான் பழங்குடியினப் பகுதியில் பயங்கரவாதிகள் பதுங்கியிருந்த இடங்களில் விமானப் படையினர் நேற்று முன்தினம் சனிக்கிழமை காலையில் தாக்குதல் மேற்கொண்டனர்.

வடக்கு வசிரிஸ்தானின் தத்தா கேல் பகுதியில் நிகழ்த்தப்பட்ட இந்தத் தாக்குதலில் இருபதுக்கும் மேற்பட்ட பயங்கரவாதிகள் கொல்லப்படடனர் என்று பாகிஸ்தான் இராணுவம் வெளியிட்ட அந்தச் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனினும், உயிரிழந்தோர் எண்ணிக்கை மற்றும் காயமுற்றோர் உள்ளிட்ட விபரங்களை உறுதி செய்யும் விதமாகப் பிற தரப்புகளிலிருந்து தகவல்கள் எதையும் பெற முடியவில்லை.

பதற்றம் மிகுந்த வடக்கு வசிரிஸ்தான் பகுதியில் கடந்த ஆண்டு ஜூன் மாதம் முதல் பாகிஸ்தான் இராணுவமும் விமானப் படையும் கூட்டாக தாக்குதல் நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றன.

'ஸரப்-ஏ-அஸப்" என்னும் இந்த தாக்குதல் நடவடிக்கையால் இது வரை 2ஆயிரத்து 763 பயங்கரவாதிகள் கொல்லப்பட்டதாக பாகிஸ்தான் அரசு தெரிவித்துள்ளது. ஆபகானை யொட்டிய எல்லைப் பகுதியில் ஏராளமான பயங்கரவாதிகள் பதுங்கியுள்ளனர் என பாகிஸ்தான் அரசு கூறி வருகிறது. (இ-5)

## மெர்ஸ் வைரஸால் 14பேர் உயிரிழப்பு

(சியோல்)

தென் கொரியாவில் "மெர்ஸ்" வைரஸ் தாக்கி நேற்று முன்தினம் 68 வயதான பெண்ணொருவர் உயிரிழந்ததையடுத்து பலி எண்ணிக்கை 14 ஆக உயர்ந்துள்ளது.

கடந்த மே 20ஆம் திகதி சவுதி அரேபியா சென்று திரும்பிய தென் கொரியாவை சேர்ந்த நபருக்கு முதன் முதலில் "மெர்ஸ்" வைரஸ் தாக்கியது கண்டுபிடிக்கப்பட்டது.

அதுமுதல், இந்நோய் தென்கொரியாவில் வேகமாக பரவி வருகிறது. இந்நோய் தாக்கி, இதுவரை 13 பேர் பலியான நிலையில் நேற்று முன்தினம் தலைநகர் சியோலிலிருந்து, 65 கி.மீ., தொலைவில் உள்ள பியாங்டீ நகரை சேர்ந்த, 68 வயது பெண் மெர்ஸ் வைரஸ் தாக்கி பரிதாபமாக உயிரிழந்தார்.


இதையடுத்து,இவ்வைரஸால் இறநதோர் எண்ணிக்கை 14 ஆக உயர்ந்தது.

இதற்கிடையில் "மெர்ஸ் வைரஸ்" க்கு புதிதாக மேலும், 12 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

இவ்வைரஸால் பாதிக்கப்பட்டோரை அம்புலன்ஸில் கொண்டு சென்ற சாரதியும், இவர்களில் ஒருவர்.

சியோல் நகரின் பெரிய வைத்தியசாலைகளில் ஒன்றான சாம்சங் வைத்தியசாலையில் மட்டும், 60 பேர், இவ்வைரஸால் பாதிக்கப்பட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. (இ-5)

## கப்பல் விபத்தில் 442பேர் மரணம்



சீன சொகுசு கப்பல் விபத்தில் பலியானவர்களின் இறுதி எண்ணிக்கை 442 ஐ எட்டியதாக அந்நாட்டு ஊடகங்கள் அறிவித்துள்ளது

கடந்த முதலாம் திகதி சீனாவின் யாங்ஸி நதியில் ஜியான்லி பகுதியில் சென்று கொண்டிருந்த 'ஈஸ்டன் ஸ்டார்' என்ற சொகுசு கப்பல் புயலில் சிக்கி தண்ணீரில் மூழ்கியது. அந்த கப்பலில் ஊழியர்கள் உட்பட மொத்தம் 456 பேர் இருந்தனர். அவர்களில் கப்பல் கப்டன், தலைமை பொறியாளர் உட்பட 14 பேர் மட்டுமே உயிர் தப்பினர்.

இதைத் தொடர்ந்து இழுவை கப்பல்களில் பொருத்தப்பட்ட இராட்சத கிரேன்கள் மூலம் 'ஈஸ்டன் ஸ்டார்' கப்பல் நதியின் மேற்பரப்பில் தூக்கி நிலை நிறுத்தப்பட்டது. அதன்பின் நடத்தப்பட்ட தேடுதல் பணியில் ஏராளமான உடல்கள் கண்டுபிடிக்கப்பட்டன. இதுவரை மொத்தம் 442 உடல்கள் மீட்கப்பட்டுள்ளன. இதில் 426 உடல்கள் சீன குடியுரிமை அதிகாரிகளால் தகனம் செய்யப்பட்டது.

மீதமுள்ள உடல்களை அடையாளம் காணும் பணி நடைபெற்று வருகிறது. இதற்காக உயிரிழந்த பயணிகளின் உறவினர்களுக்கு டி.என்.ஏ. பரிசோதனை நடத்தப்படுகிறது என்பது குறிப்பிடத்தக்கது (இ-5)

## தற்கொலைத் தாக்குதலால் 13 அரச படையினர் மரணம்

(பக்தாத்)

ஈராக்கில் இராணுவச் சாவடிகளில் இஸ்லாமிய தேச (ஐ.எஸ். ஐ.எஸ்.) பயங்கரவாதிகள் நேற்று முன்தினம் சனிக்கிழமை நிகழ்த்திய தற்கொலைத் தாக்குதல்களில் 13 அரசுப் படையினர் உயிரிழந்ததாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

அந்த நாட்டின் சலாஹுதீன் மாகாணத்தில் இந்தத் தாக்குதல்கள் நிகழ்த்தப்பட்டன.

அல்-ஹஜாஜ் என்னும் பகுதியில் அமைந்துள்ள இரு இராணுவச் சாவடிகளில், தற்கொலைப் படை பயங்கரவாதிகள் 4 பேர் வெடிபொருள் நிரம்பிய கார்களில் அடுத்தடுத்து மோதி வெடிக்கச் செய்தனர். இதில், அரசுக்கு ஆதரவான ஷியா பிரிவுப் படை, இராணுவத்தைச் சேர்ந்த 13 வீரர்கள் உயிரிழந்தனர். 24 பேர் காயமடைந்தனர்.

தாக்குதல் நிகழ்த்தப்பட்ட அல்-ஹஜாஜ் பகுதி, பெய்ஜி நகரிலிருந்து திக்ரித் நகருக்குச் செல்லும் வழியில் அமைந்துள்ளது. (இ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 20 ஐ விடவும் கலைப்பதே நல்லது

(தொடர்ச்சி)

ஸ்ரீல.சு.க. தமது பிடியிலிருந்து முற்றாக நழுவிச் செல்லாதிருக்க ஜனாதிபதிக்கு இரண்டு வழிகள் தான் இருக்கின்றன. ஒன்று, அவரே இரத்துச் செய்ய வேண்டும் என்று கூறிய நிறைவேற்று ஜனாதிபதி முறையின் அதிகாரங்களை பாவித்து பலரை மடக்குவது.

இரண்டாவது தான் உடனடியாக நாடாளுமன்றத்தை கலைத்து கூடிய வரை தமக்கு கட்டுப்படக் கூடியவர்களை தமது கட்சியின் சார்பில் நாடாளுமன்ற தேர்தல் களத்தில் இறக்குவதாகும்.

ஜனாதிபதியின் 100 நாட்கள் வேலைத்திட்டத்தின் படி ஏப்ரல் மாதம் 23ஆம் திகதி நாடாளுமன்றம் கலைக்கப்பட வேண்டும். ஆனால், அதற்குள் நிறைவேற்று ஜனாதிபதி முறையில் மாற்றங்களை கொண்டு வருவதற்கான 19 ஆவது அரசியலமைப்புத் திருத்தத்தையும் தேர்தல் முறையில் மாற்றங்களை கொண்டு வருவதற்கான 20ஆவது அரசியலமைப்புத் திருத்தத்தையும் நிறைவேற்றிக் கொள்ள வேண்டும் என்பதால், நாடாளுமன்றத்தை ஜனாதிபதி கலைக்கவில்லை.

19 ஆவது திருத்தம் ஒருவாறு இழுபறி நிலையிலாயினும் நிறைவேற்றப்பட்டது. ஆனால், 20 ஆவது திருத்தம் அவ்வாறு நிறைவேற்றப்படக் கூடியதல்ல. அதைப் பற்றி அரசியல் கட்சிகளுக்கிடையே உண்மையிலேயே இணக்கம் காணப்படுவதில்லை.

சிறுபான்மை கட்சிகள் அதைப் பற்றி அச்சத்தையே தெரிவித்து வருகிறார்கள். எனவே அந்த திருத்தம் நிறைவேறும் வரை காத்திருப்பது தற்போதைய நிலையில் அர்த்தமற்றதாகும்.

நாடாளுமன்றத்தில் பெரும்பான்மை பலமில்லாத கட்சியொன்று அரசாங்கத்தை அமைப்பது ஜனநாயகமல்ல என்பது உண்மை. ஆனால், ஜனவரி மாதம் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் அவ்வாறானதொரு அரசாங்கத்துக்கு மக்கள் ஆணை வழங்கினார்கள் என்ற அடிப்படையிலேயே, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கத்துக்கு நியாயம் கற்பிக்கப்பட்டது. ஆனால், அதை ஏற்பதாக இருந்தால் அந்த மக்கள் ஆணை, 100 நாட்கள் திட்டத்துக்கு மட்டுமே செல்லுபடியாகும்.

அந்த வகையிலும் இப்போது நாடாளுமன்றத்தை கலைப்பது சரியே. ஜனாதிபதித் தேர்தலின் போது மக்கள் வழங்கிய ஆணையின் பிரகாரம் ரணில் விக்கிரமசிங்கவின் அரசாங்கத்தை ஏற்பதாக இருந்தால், அதே ஆணையின் பிரகாரம் ஸ்ரீ.ல.சு.க.வுக்கும் ஆட்சி அமைக்க முடியாது. ஏனெனில், மக்கள், ஜனாதிபதித் தேர்தலின் போது ஸ்ரீல.சு.க.வின் வேட்பாளரையே தோற்கடித்தனர். பெரும்பான்மையான மக்கள் அக்கட்சிக்கு எதிராகவே வாக்களித்தனர்.

எனவே, பிரதமருக்கு எதிரான நம்பிக்கையில்லா பிரேரணை வெற்றி பெற்றாலும் ஸ்ரீல.சு.க. ஆட்சி அமைப்பது மக்கள் ஆணைக்கு எதிரானதாகும்.

அந்த வகையிலும் நாடாளுமன்றத்தை கலைப்பதே சரியான முடிவாகும். சட்டப்படி, பிரதமருக்கு எதிரான நம்பிக்கையில்லா பிரேரணை வெற்றி பெற்றாலும் நாடாளுமன்றத்தின் பெரும்பான்மை பலம் கொண்ட ஸ்ரீ.ல.சு.க.வுக்கு அதிகாரத்தை வழங்க வேண்டும் என்று வாதிட முடியாது.

ஏனெனில், அரசியலமைப்பின் பிரகாரம், நம்பிக்கையில்லா பிரேரணையொன்றின் மூலம் பிரதமர் பதவி விலக்கப்பட்டால் அமைச்சரவை கலைந்துவிடுகிறது. அதே போல், "நாடாளுமன்றத்தை அத்தோடு ஜனாதிபதி கலைக்கா விட்டால் அவர் புதிய அரசாங்கமொன்றை நியமிக்க வேண்டும் என்றே அரசியலமைப்பு கூறுகிறது.

அதாவது, அரசியலமைப்பு முதலில் நாடாளுமன்றத்தை கலைக்கும் தெரிவை ஜனாதிபதிக்கு வழங்குகிறது. அவ்வாறில்லாவிட்டால் தான் அவர் புதிய அரசாங்கமொன்றை நியமிக்க வேண்டும். எனவே, ஜனாதிபதி தற்போது நாடாளுமன்றத்தைக் கலைத்தால் அது சட்டவிரோதமானது என எவரும் வாதிட முடியாது.

நம்பிக்கையில்லா பிரேரணையில் பிரதமர் தோல்வியடைந்தால், தமது கட்சிக்கு அரசாங்கத்தை கையளிக்க வேண்டும் என ஸ்ரீல.சு.க. தலைவர்கள் கூறுகின்றனர். அவ்வாறு வழங்குவது சட்டவிரோ தமானது அல்ல தான். ஆனால், ஜனவரி மாதம் 8ஆம் திகதி மக்கள் நிராகரித்த ஒரு கட்சிக்கு மீண்டும் அதிகாரத்தை வழங்குவது நாகரி கமா என்ற கேள்வி எழுகிறது.

அதேவேளை, அவ்வாறு ஸ்ரீல.சு.க.விடம் மீண்டும் அரசாங்கத்தை கையளித்தால் கோடிக்கணக்கான ரூபாய் பெறுமதியான அரச வளங்களை சூறையாடியவர் மீது நடவடிக்கை எடுக்க முடியாது போய்விடும். மீண்டும் நாட்டில் மதவாத கும்பல்கள் தலைதூக்கும். வெள்ளை வான்கள் மீண்டும் நடமாடும்.

எனவே, 20ஆவது திருத்தத்தை நிறைவேற்றிக் கொள்வதை விட நாட்டில் தற்போது ஓரளவாவது ஏற்பட்டுள்ள சுதந்திரமான நிலை மையை பாதுகாப்பதற்கே ஜனாதி பதி முன்னுரிமை வழங்க வேண் டும். இல்லாவிட்டால் அவர் உயிரை பணயமாக வைத்து ஜனாதிபதித் தேர்தலில் குதித்ததில் அர்த்தம் இல்லாமல் போய்விடும்.

எனவே, மகிந்த மீண்டும் மறைமுகமாகவேனும் அதிகாரத்தை கைப்பற்றும் நிலை ஏற்பட்டால் உடனடியாக நாடாளுமன்றத்தை கலைப்பதே புத்திசாலித்தனமாகும். தற்போது நாடாளுமன்றத்தை கலைத்தால் சிறுபான் மையினரின் உதவியில்லாமல் எந்தக் கட்சிக்கும் ஆட்சி அமைக்கவும் முடியாமல் போய்விடும். அது மதவாத கும்பல்களை கட்டுப்படுத்த உதவலாம். (முற்றும்)

## அவுஸ்.அகதிக்கொள்கை மாற்றப்படல் வேண்டும்!

### இந்தோனேசியா சுட்டிக்காட்டு

(கொழும்பு)

இலங்கை அகதிகளை படகில் அழைத்துச்சென்ற கடத்தல்காரர்களுக்கு அவுஸ்திரேலிய கடற்படையினர் கப்பம் வழங்கியமை உண்மையானால், அவுஸ்திரேலியா தமது புதிய குடிவரவு கொள்கையை நிறுத்த வேண்டும் என்று இந்தோனேசியா தெரிவித்துள்ளது.

அவுஸ்திரேலியாவுக்கு செல்லும் அகதிகள் படகுகளை தமது கடலில் இருந்து இந்தோனேசியாவுக்கு திருப்பி அனுப்பியதுடன் அகதிகள், பப்புவா நியூகினி மற்றும் நவுறு தீவுக்கு அனுப்பி வைக்கப்படும் நடைமுறையே பின்பற்றப்பட்டு வருகிறது. இதற்காக அவுஸ்திரேலியாவுக்கும் இந்தோனேசியாவுக்கும் இடையில் உடன்பாடும் உள்ளது.

எனினும் இறுதியாக வந்த படகை இந்தோனேசிய கடலுக்குள் திருப்பியனுப்பிய அவுஸ்திரேலிய கடற்படையினர், படகில் இருந்த கடத்தல்காரர்களுக்கு கப்பம் வழங்கியதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இது நிரூபிக்கப்படுமானால், தமது நாட்டுடன் அவுஸ்திரேலிய செய்து கொண்ட உடன்படிக்கையை சீரமைக்க வேண்டியேற்படும் என்று இந்தோனேசிய வெளியுறவு பேச்சாளர் ஆர்மந்தா நாசிர் தெரிவித்துள்ளார்.

எனினும் மனித கடத்தல் காரர்களுக்கு கப்பம் வழங்கியமையை அவுஸ்திரேலியா தொடர்ந்தும் மறுத்து வருகிறது என்பது குறிப்பிடத்தக்கது. (இ-5)

## செல்ஃபி




உங்கள் செல்ஃபிகளை
photosofvalampurii@gmail.com
என்னும் முகவரிக்கு உங்கள் பெயர், முகவரியுடன் அனுப்பிவையுங்கள்.
சிறந்த செல்ஃபிக்கு பரிசில்கள் உண்டு

உங்கள் செல்பிக்கள் ஏதும் பொருள் கூறுவதாயோ அல்லது வித்தியாசமான பின்புலத்திலோ இருக்குமாறு அனுப்பி வையுங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கீழ்த்தரமான சிந்தனைகளை எந்தச் சூழ்நிலையிலும் நினைக்க வேண்டாம்.
- கன்பூசியஸ்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## பொதுத் தேர்தல் நெருங்க புலிகளைத் தூக்குகிறார் மகிந்த

புதிய அரசின் வேலைத்திட்டத்தால் விடுதலைப் புலிகள் மீண்டும் எழுச்சி பெறுவர் என முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ கூறியுள்ளார்.

புலம்பெயர் தமிழர்கள் புலிகள் அல்ல என வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர அண்மையில் கூறியிருந்ததுடன்; புலம்பெயர் தமிழ் மக்களுடனான சந்திப்புக்களை, கலந்துரையாடல்களை மேற்கொள்வதற்கான திட்டங்களும் புதிய அரசினால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

புலம்பெயர் தமிழர்கள் இலங்கையில்-தமிழ் மண்ணில் வாழ முடியாமல் இந்த நாட்டில் இருந்து வெளியேறியவர்கள்.

தமிழ் இளைஞர்கள் என்றால் அவர்களைச் சுடு, கடத்து, கைது செய் என்ற கட்டளைகளை இந்த நாட்டின் முன்னைய ஆட்சியாளர்கள் காலத்துக்குக் காலம் படைத்தரப்புக்கு பிறப்பித்திருந்தனர்.

இதன் காரணமாக தாங்கள் எவ்வளவு கஷ்டப்பட்டாலும் தங்கள் பிள்ளைகளை பாதுகாக்க வேண்டும் என்ற ஒரே நோக்குடன் பெற்றோர் தங்கள் பிள்ளைகளை வெளிநாடுகளுக்கு அனுப்பி வைத்தனர்.

எனது தாயை, தந்தையை, உறவுகளை விட்டு வெளிநாட்டுக்குப் போக மாட்டேன் என்று அழுத எத்தனையோ இளைஞர்கள் தங்கள் பெற்றோர்களின் வலுக்கட்டாயத்தால் புலம்பெயர்ந்தனர்.

பிள்ளைகளை வெளிநாடுகளுக்கு அனுப்பினால் மட்டுமே அந்தப் பிள்ளைகளின் உயிருக்கு உத்தரவாதம் என்ற அடிப்படையில் புலம்பெயர்வு நடக்கலாயிற்று. எனினும் இலங்கையில் தமிழர்களை வஞ்சித்து அரசும் படைத்தரப்பும் நடத்திய கொடூரங்களுக்கு எதிராக புலம்பெயர் தமிழர்கள் தாம் வாழுகின்ற நாடுகளில் பேரணிகள் நடத்தி கண்டனம் தெரிவித்தனர். இந்தக் கண்டனம் இனம் சார்ந்த-மனிதநேயம் சார்ந்த விடயம்.

இந்த உண்மையை ஜனாதிபதி மைத்திரிபால தலைமையிலான அரசு உணர்ந்து கொண்டுள்ளது.

எனவே, உண்மைகள் உணரப்பட்ட நிலையில், புலம்பெயர் தமிழர்கள் விடுதலைப் புலிகள் அல்ல என்ற உண்மையை சிங்கள அமைச்சர் ஒருவர் பகிரங்கப்படுத்தியுள்ளார்.

இந்நிலையில் இவற்றை பொறுத்துக் கொள்ள முடியாத முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, புதிய அரசின் வேலைத்திட்டத்தில் விடுதலைப் புலிகள் மீண்டும் எழுச்சி பெறுவர் எனக் கோஷம் எழுப்பத் தலைப்பட்டுள்ளார்.

நடைபெற்று முடிந்த ஜனாதிபதித் தேர்தலில் விடுதலைப்புலிகள் பற்றிய மகிந்தவின் பயமுறுத்தல்கள், பிரசாரங்கள் தென்பகுதியில் எடுபடாமல் போக, இப்போது பொதுத் தேர்தலை இலக்காக வைத்து, விடுதலைப் புலிகள் எழுச்சி பெறுவர் என்று பிரசாரப்படுத்த வியூகம் அமைத்துள்ளார்.

புலம்பெயர் தமிழர்கள் தமது தாய் நாட்டுக்கு வருவதை விடுதலைப் புலிகளின் மீள் எழுச்சியுடன் தொடர்புபடுத்துகின்ற மகிந்த ராஜபக்ஷ இந்த நாட்டில் இன ஒற்றுமை ஏற்படக் கூடாது என்பதில் மிகவும் உறுதியாக உள்ளார் என்பது தெளிவாகிறது.

எதுவாயினும், இலங்கையின் எதிர்கால அபிவிருத்தி என்பது புலம்பெயர் மக்களை விலத்தியதாக இருக்க முடியாது.

புலம்பெயர் இலங்கையர், அதிலும் குறிப்பாக புலம்பெயர் தமிழர்கள் வெளிநாடுகளில் குறிப்பிடத்தக்க பொருளாதாரபலத்தைக் கொண்டுள்ளனர்.

எனவே அவர்களின் பொருளாதார பலத்தை இலங்கை பயன்படுத்திக் கொள்வதன் ஊடாக இலங்கையில் அபிவிருத்தி ஏற்படுவதோடு அபிவிருத்தியின் ஊடாக இன ஒற்றுமை என்பதை உருவாக்க முடியும்.

ஆக, புலம்பெயர் தமிழர்களை தாய் நாட்டுக்கு வரவழைப்பதன் ஊடாக இலங்கையில் இன வேற்றுமை அறுபட வாய்ப்பு உண்டென்பதே உண்மை. இருந்தும் முன்னாள் மன்னர் மகிந்தனார் புலிகள் மீண்டும் எழுச்சி பெறுவர் என ஒரு மோசமான கருத்தை நாட்டில் விதைக்கிறார். இதை வெட்டிச் சரிப்பது ஒவ்வொரு இலங்கையர்களினதும் தலையாய கடமையாகும்.

# தமிழ்-முஸ்லிம் மக்களின் உறவில் பாரிய இடைவெளி தோன்றலாம்

## கிழக்கு மாகாண சபை உறுப்பினர் அச்சம்

(மட்டக்களப்பு)

முஸ்லிம் அரசியல் தலைமைகள் தமிழ்மக்கள் விடயத்தில் அக்கறை இன்மையாக செயற்படுவார்களாக இருந்தால், இரண்டு சமூகங்களுக்குமிடையில் எதிர்காலத்தில் பாரிய விளைவுகளையும், இடைவெளிகளையும் தோற்றுவிக்கும் என கிழக்கு மாகாணசபை உறுப்பினர் தவராசா கலையரசன் கூறினார்.

நாவிதன்வெளி பிரதேச சபைக்கு உட்பட்ட சாலம்பக்கேணியில் இருப்பதற்கு இருப்பிடம் இல்லாமல் இருந்த குடும்பத்திற்கு கனடாவில் புலம்பெயர்ந்து வாழும் முருகேசு விசாகன் மூலம் அவர்களுக்கான தற்காலிக இருப்பிட வசதி செய்து கொடுக்கப்பட்டது.

இந்நிகழ்வில் கலந்து கொண்டு அதனை அவர்களிடம் கையளிக்கும் நிகழ்வானது நேற்று முன்தினம் மாலை சாலம்பக்கேணியில் நடைபெற்றது. அதில் உரையாற்றும் போதே அவர் இதனைக் கூறினார்.

அவர் மேலும் கூறியதாவது,

வடகிழக்கில் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட எத்தனையோ எமது உறவுகள் இன்றும் பல இன்னல்களை அனுபவித்து வருகின்றார்கள் இவர்களுக்கான எந்த உதவிகளையும் அரசாங்கம் செய்து கொடுக்க முன்வராமையினால் அவர்களது வாழ்க்கையில் பாரிய பின்னடைவுகளை தோற்றுவித்து இருக்கின்றது.

மக்களுக்கான அடிப்படை வசதிகளை அரசாங்கம் செய்து கொடுக்கத் தவறினாலும் வடகிழக்கிலுள்ள தமிழர் பிரதேசங்களில் மதுபான சாலைகளை அமைப்பதற்கான அனுமதியினை கொடுக்கத்தவறவில்லை என்பது மிகவும் மனவேதனை தரும் விடயமாகும்.

2009 மே மாதம் யுத்தம் மௌனிக்கப்பட்டதற்கு பின்னர் வடகிழக்கு பிரதேசங்களில் பாரியளவிலான திட்டமிட்ட மதுபான சாலைகள் அமைக்கப்பட்டதோடு, போதைவஸ்து பாவனையும் அதிகரித்து காணப்படுகின்றது. இதற்கான காரணத்தினை ஆராய்வோமானால் எவ்வாறாவது தமிழர்களின் பொருளாதாரத்தை முடக்கி அவர்களது செயற்பாட்டினை மட்டுப்படுத்தும் நோக்கம் கொண்டதோடு எதிர்கால சமூகத்தை நன்கு திட்டமிட்டு அழிக்கும் செயற்பாடாகவும் இதனை பார்க்கவேண்டியுள்ளது.

இந்த நாட்டில் ஏற்பட்ட யுத்தத்தினால் பெரிதும் பாதிக்கப்பட்டவர்கள் தமிழ்மக்களே. அவர்கள் அன்று இருந்து இன்று வரைக்கும் ஒரு நிரந்தரமான இடத்தில் வாழாது அங்குமிங்குமாக அலைந்து ஏதிலிகளாக வாழ்ந்த வரலாறே இன்றும் இருந்து கொண்டு இருக்கின்றது.

இந்த நாட்டிலே ஆட்சி செய்த முன்னைய அரசாங்கமாக இருந்தாலும் சரி, தற்போதைய நல்லாட்சிக்குரிய அரசாங்கமாக இருந்தாலும் சரி, தமிழர்களுக்கான நீண்டநாள் பிரச்சினையினை தீர்த்து வைப்பதற்கு முன்வரவில்லை.

அனைத்து அரசாங்கங்களும் தங்களுடைய நிலைப்பாடுகளில் இருந்து சற்றும் மாறாத ஒரு மனப்பாங்கினையே கொண்டிருப்பதனையே காணமுடிகின்றது.

கிழக்கு மாகாணத்தில் முஸ்லிம்களுடன் சேர்ந்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நல்லெண்ண சமிஞ்ஞையுடன் ஒன்றிணைந்து ஆட்சியில் பங்காளிகளாக செயற்பட்டு வந்தாலும் அங்கும் மாற்றான் விரோத மனப்பாங்குடன் செயற்படுகின்ற விதத்தினை அவர்களது செயற்பாடுகள் மூலம் அவதானிக்க முடிகின்றது.

த.தே.கூட்டமைப்பை தமிழ் மக்களிடமிருந்து வேறுபடுத்த வேண்டும் என்பதில் பலர் திரைமறைவில் பல சூழ்ச்சிகளை செய்து வருகின்றார்கள்.

அதனொரு கட்டமாகத்தான் இன்று முஸ்லிம் அரசியல் தலைமைகள் தமிழ் மக்களுக்கு கிடைக்க வேண்டிய பல அபிவிருத்தி செயற்பாடுகளில் தடைகளை ஏற்படுத்துவதுடன்,

தமிழர் பிரதேசங்களுக்கு வரும் அபிவிருத்தி வேலைப்பாடுகளை தங்கள் பிரதேசங்களுக்கு மாற்றும் கைங்கரியங்களில் ஈடுபட்டு வருவது ஒட்டுமொத்த தமிழ் மக்களையும் ஏமாற்றி அவர்களுக்கிடையில் மனக்கிலேசத்தினை உண்டுபண்ணும் விடயமாக காணப்படுகின்றது என்றார். (எ-1)

## ஆண்டுவிழா

பிரபல்யமான சுற்றுலா மற்றும் பயண ஒழுங்குகளை மேற்கொள்ளும் நிறுவனமான Nation இன் நான்காவது ஆண்டு விழா இன்று பிற்பகல் 4.30 மணிமுதல் மாலை 6மணி வரை இல.128, பிறவுண்வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் இடம் பெறவுள்ளது. (இ-3)

## பதிவுகள் இடம்பெறும்

இலங்கைத் திறந்த பல்கலைக் கழகத்தினால் நடத்தப்படும் சட்டமாணி கற்கை நெறியை தொடரும் மாணவர்களுள் தமது மீள் பதிவினை தவறவிட்டவர்களுக்கான பதிவுகள் நாளை காலை 9 மணி தொடக்கம் பிற்பகல் 4 மணிவரை பிறவுண்வீதி, கொக்குவிலில் அமைந்துள்ள யாழ். பிராந்திய நிலையத்தில் நடைபெறும் என யாழ். பிராந்திய நிலைய உதவிப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார். (இ)

## புதிய அரசியல்கட்சி இம்மாத இறுதியில்

இந்த மாத இறுதியில் தாம் புதிய அரசியல் கட்சி ஒன்றை ஆரம்பிக்கவுள்ளமையை ஜே.வி.பியின் தலைவர் சோமவன்ச அமரசிங்க உறுதிப்படுத்தியுள்ளார்.

ஒற்றுமையான முன்னணி எனபதுடன் நாட்டின் முன்னிலையான கட்சியாக தமது கட்சி விளங்கும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஜே.வி.பியை பொறுத்தவரை யில் இது முற்போக்கு கட்சி என்ற அடையாளத்தை மாத்திரமே கொண்டுள்ளதாக சோமவன்ச தெரிவித்துள்ளார்.

இதேவேளை நாட்டை நாசப்படுத்த முயலும் ஒரு பிரிவினரால் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு ஆபத்து இருப்பதாகவும் அவர் எச்சரிக்கை விடுத்துள்ளார். (இ-5)

# வேதாத்திரி மகரிஷியின் நற்சிந்தனை

## மனதின் மூன்று நிலைகள்



உயிரின் படர்க்கை நிலையில் மனம் இயங்கும் நிலைகளை மூன்றாகப் பிரித்துக் காணலாம். அதாவது மேல்மனம் அல்லது புறமனம், நடுமனம், அடிமனம் என்றமூன்று நிலைகளாகும். இதில் அடிமனத்திற்கும், புறமனத்திற்கும் தொடர்புபடுத்தி இருப்பது நடுமனமாகும். இதில் நடுமனம் தான் மிகவும் முக்கியமானது.

உணர்தல், துய்த்தல், கணித்தல், சிந்தித்தல், பதிவு கொள்ளல் என்ற ஐவகைச் செயல்களைக் கொண்ட மனமானது தேவை, பழக்கம், சூழ்நிலை, சந்தர்ப்பம் இவற்றால் புலன்கள் வாயிலாகத் தொடர்பு கொண்டு செயல்புரியும்போது அச்செயல் பதிவுகள் அதனதன் அழுத்தத்திற்கேற்ப மேல்மனம் அல்லது புறமனம் (Conscious mind) நடுமனம் (Sub-Conscious mind) அடிமனம் (Super Conscious mind) என்றமூன்றிலும் பதிவுகள் ஏற்படுகின்றன.

தொழில் செய்வதால் உடல் கருவிகளுக்கு ஏற்படும் திறனே இந்திரியப் பதிவு (ஞானகர்மேந்திரியப் பதிவுகள்). இப்பதிவுகளை ஒட்டிய மன இயக்கம் மேல் மனம்அல்லது புறமனமாகும்.

தொழில் செய்வதால் ஏற்பட்ட அறிவின் அனுபவம் மூளையில் பதிவாகிறது. இதுதான்நடுமனம்.

இவைகள் அனைத்தும் சூக்குமமாக வித்து அணுத்திரளில் பதிவாகி விடுகின்றன. இதுவே அடிமனம்.

இறைநிலையினது நெடும் பயணத் திருவிளையாடல்கள் அனைத் தும் முழுமையாகஅலை வடிவில் சுருக்கி வைத்துள்ள கருவூலம் தான் உயிரினங்களின் உடலின்மையத்தில் அமைந்துள்ள கருமையம்.

ஒரு பெரிய ஆலமரம் அதன் சிறுவித்தில் அலை வடிவில் சுருங்கி யுள்ளது போல. இயற்கையின் பரிணாமச் சரித்திரமானது வான்காந்த அலையில் பதிவாகி, மேலும்மனிதனுடைய சீவகாந்தக் கருமையத்தில் சுருங்கி இருப்பதாக உள்ளது. இந்தக்காலத்தின் விஞ்ஞானப் பேரறிஞர் கள் கண்டுபிடித்து, வழக்கில் வந்துள்ள கம்ப்யூட்டர் கருவியைப் போல, இறை ஆற்றலால் வடிவமைக்கப்பட்டது கருமையம் எனும் Organic Computer காந்த மையம். இயற்கை வளச் சரித்திரத் திரட்டான மனித வளக்கம்ப்யூட்டர் என்னும் கருமையம் காந்த ஆற்றலின் திணிவு பெற்ற பிரபஞ்சப்பிரதிபலிப்பு, கண்ணாடி ஆகும். இத்தகைய இயற்கைச் சுரங் கத்தைத் தன்னகத்தேஅடக்கப் பெற்றுள்ள பாக்கியசாலியே மனிதன் என்ற திருஉருவம்.

இறைத் [illegible] தூய்மை கெடாமலும் காத்து வரவேண்டியதுஆறாவது அறிவின் நிலையில் வாழும் மனிதனுடைய கடமையாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முரளி விஜயின் இரட்டை சத கனவு




பாதுல்லா டெஸ்டில் இந்திய தொடக்க ஆட்டக்காரர் முரளிவிஜய் 150 ஓட்டங்கள் குவித்து எல்.பி. டபிள்யூ. ஆனார். இது அவரது 6ஆவது சதமாகும். இதற்கு முந்தைய சதங்களில் 139, 167, 153, 146, 144 ஓட்டங்களில் ஆட்டம் இழந்திருக்கிறார். தமிழகத்தை சேர்ந்த 31 வயதான முரளிவிஜய் இதுவரை 32 டெஸ்டுகளில் ஆடியுள்ளார்.

அவர் இணையதளத்திற்கு அளித்த பேட்டியில், 'நான் நன்றாக பேட்டிங் செய்கிறேன். 140, 150 ஓட்டங்கள் எடுக்கிறேன். இப்போது அடுத்த கட்டத்திற்கு செல்ல வேண்டிய நேரம் இது. இரட்டை சதம் அடிப்பதே எனது அடுத்த இலக்கு. அதை அடைவதற்கு உடல்தகுதியில் கூடுதல் கவனம் செலுத்துகிறேன்' என்றார்.

மேலும் அவர் கூறுகையில், 'தொடக்க ஜோடி வெற்றிகரமாக சாதிப்பதற்கு அவர்கள் களத்திலும், வெளியிலும் நல்ல நண்பர்களாக இருக்க வேண்டியது முக்கியம் என்று சொல்வார்கள். அது உண்மைதான். அந்த வகையில் நானும், ஷிகர் தவானும் நட்புறவுடன் பழகி, அனுபவங்களை பகிர்ந்து கொள்கிறோம். அது மைதானத்தில் ஜொலிப்பதற்கு உதவிகரமாக இருக்கிறது. இருப்பினும் எங்களது ஆட்ட அணுகு முறை வித்தியாசமானது. நாங்கள் மற்றவர்களின் ஆட்டங்களை நன்கு அறிந்து வைத்துள்ளோம்' என்றார். (க)

# இரட்டை சதத்தை தவறவிட்ட ஆஸியின் ஸ்ரீபன் சுமித்



அவுஸ்திரேலியா-மேற்கிந்திய தீவுகள் அணிகள் மோதும் 2வது டெஸ்ட் போட்டி கிங்ஸ்டனில் நடந்து வருகிறது.

முதல் நாள் ஆட்டநேர முடிவில் அவுஸ்திரேலியா 4 விக்கெட்டுக்கு 258 ஓட்டங்கள் எடுத்து இருந்தது.

இதில் ஸ்ரீவன் சுமித் 135 ஓட்டங்களும், வோட்சன் 20 ஓட்டங்களும் எடுத்து ஆட்டமிழக்காமல் இருந்தனர். நேற்று 2வது நாள் ஆட்டம் நடந்தது.


தொடர்ந்து சிறப்பாக விளையாடிய சுமித் இரட்டை சதம் அடிப்பார் என்று எதிர்பார்த்த நிலையில், 199 ஓட்டங்களில் டெய்லர் பந்தில் எல்.பி.டபிள்யூ ஆகி வெளியேறினார்.

இதன் மூலம் 199 ஓட்டங்களில் ஆட்டமிழந்தவர்கள் வரிசையில் சுமித் 8 ஆவதாக இணைந்துள்ளார்.

இதற்கு முன் முடாசர் நாசர் (பாகிஸ்தான்), முகமது அசாரூதின் (இந்தியா), மத்யூ எலியட் (அவுஸ்திரேலியா), சனத் ஜெயசூரியா (இலங்கை), ஸ்டீவ் வோக் (அவுஸ்திரேலியா), யூனிஸ்கான் (பாகிஸ்தான்), இயான் பெல் (இங்கிலாந்து) ஆகியோர் டெஸ்ட் போட்டியில் 199 ஓட்டங்களில் பரிதாபமாக ஆட்டமிழந்துள்ளனர்.

அவுஸ்திரேலிய அணி முதல் இன்னிங்சில் 399 ஓட்டங்களுக்கு அனைத்து விக்கெட்டுகளையும் இழந்தது. (க)

# இன்றைய தாச்சிப் போட்டி



யாழ்.மாவட்ட தாச்சி விளையாட்டு சங்கத்தின் 2015 ஆம் ஆண்டு தாச்சி சுற்றுப்போட்டி இன்று திங்கட்கிழமை பண்டத்தரிப்பு அறிவொளி விளையாட்டுக்கழக மைதானத்தில் மாலை 6.30 மணிக்கு நடை பெற வுள்ள போட் டியில் கைதடி வளர்மதி விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து பண்டத்தரிப்பு அறிவொளி விளையாட்டுக்கழகமும் இரவு 7.15 மணியளவில் இடம்பெறவுள்ள போட்டியில் உடுவில் உதயசூரியன் விளை யாட்டுக் கழகத்தை எதிர்த்து தாவடி காளி அம்பாள் விளையாட்டுக் கழகமும் மோதவுள்ளது. (க)

# தங்கராஜா ஞாபகார்த்த உதைபந்தாட்ட சுற்றுப்போட்டி

மு/வித்தியானந்தக் கல்லூரியின் முன்னாள் அதிபர் அமரர் இ.தங்கராஜாவின் ஞாபகார்த்தமாக கல்லூரியின் பழைய மாணவர் சங்கத்தினரால் வித்தியா விளையாட்டுக்கழக அனுசரணையுடனும் முல்லைத்தீவு மாவட்ட உதைபந்தாட்ட சம்மேளனத்தின் ஆதரவுடனும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டி நடத்தப்படவுள்ளது.

மேற்படி சுற்றுப் போட்டியானது அணிக்கு 11 பேர் கொண்டதான விலகல் முறையில் நடத்தப்படவுள்ளதாகவும் போட்டிகள் யாவும் எதிர்வரும் 17 ஆம் திகதி முதல் 26 ஆம் திகதிவரை பாடசாலை நேரம் தவிர்ந்த ஏனைய நேரங்களில் வித்தியானந்தக் கல்லூரி விளையாட்டு மைதானத்தில் நடைபெறும் இறுதிப் போட்டியானது எதிர்வரும் 26 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் நடைபெறும். அத்துடன் வெற்றி பெறும் முதல் இரண்டு அணிகளுக்கும் பெறுமதிமிக்க கவர்சிகரமான பரிசில்கள் வழங்கப்படும் எனவும் அவர் தெரிவித்தார. (க-302)

# எனது ஏற்ற, இறக்கத்திற்கு அனுஷ்காவை குறை சொல்கிறார்கள்

## விராட்கோலி



டெஸ்ட் அணியின் புதிய அணித்தலைவர் விராட்கோலி, இந்திய அணியின் சிறப்பான எதிர்காலம் குறித்து நம்பிக்கை தெரி வித்துள்ளார்.

விராட் கோலி தலைமையிலான இந்திய அணி வங்கதேசத்தில் டெஸ்ட் போட்டியில் அசத்தி வருகிறது.

இந்நிலையில் டெஸ்ட் போட்டியில் இந்தியாவின் எதிர்காலம் குறித்து கோலி பேசுகையில், சர்வதேச அரங்கில் இந்திய அணி ஆதிக்கம் செலுத்த வேண்டும் என்று நான் விரும்புகிறேன்.

டெஸ்ட் போட்டிகளில் நமது வீரர்களை எந்தச் சந்தேகமும் இன்றி, எந்த அச்சமும் இன்றி ஆடவைக்க வேண்டும். அவுஸ்திரேலிய பயணம் தொடங்குவதற்கு இரண்டு மாதங்களுக்கு முன்பே நான் என் மனதை தயார்ப்படுத்தி விட்டேன்.


என் மனதில் பதித்து வைத்திருந்ததை, அவுஸ்திரேலியா சென்ற போது என் உடம்பு கேட்டது. இதனால் தான் சிறப்பாக செயற்பட முடிந்தது என்று கூறியுள்ளார்.

மேலும், மோசமாக விளையாடும் போது அனுஷ்காவின் மீது குற்றம் சாட்டப்படுவது பற்றிய நிருபர்களின் கேள்விக்கு பதிலளித்த கோலி, எல்லாவற்றுக்கும் அனுஷ்காவையே குறை சொல்கிறார்கள்.

அனைவருக்கும் ஏற்றம், இறக்கம் வரும். எனது உயர்வு, தாழ்வுக்கெல்லாம் ஒரு பெண் தான் காரணம் என்று சொல்வது சரியல்ல என்று பதிலளித்துள்ளார். (க)

வலம்புரி SPORTS விளையாட்டுச் செய்திகள்

# காற்பந்தாட்ட முடிவுகள்



மாதகல் புனிததோமையார் விளையாட்டுக்கழகம் 11 ஆம் ஆண்டு நிறைவை முன்னிட்டு நடத்திய காற்பந்தாட்ட போட்டி முடிவுகள்.

இளவாலை யங்கென்றிஸ் விளையாட்டுக்கழக அணியும் தெல்லிப்பழை நாகம்பாள் விளையாட்டுக் கழக அணியும் மோதிய போட்டியில் நாகம்பாள் விளையாட்டுக்கழக அணி 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

சென். லூட்ஸ் விளையாட்டுக் கழக அணியும் சென்.சேவியர் விளையாட்டுக்கழக அணியும் மோதிய மற்றுமொரு போட்டியில் சென்.லூட்ஸ் விளையாட்டுக்கழக அணி 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரெய்லர், வில்லியம்சனின் அதிரடி துடுப்பாட்டத்தால் கடின வெற்றியிலக்கை அடைந்தது நியூசிலாந்து







ரோஸ் ரெய்லர் - கேன் வில்லியம்சன் இணை 3ஆவது விக் கெட்டுக்காக பகிர்ந்த 206 ஓட்ட சாதனை இணைப்பாட்டத்தின் மூலம் நியூசிலாந்து அணி, 6 பந்துகள் மீத மிருக்கையில் 3 விக்கெட்டுக்களால் அபாரமான வெற்றியைப் பதிவு செய்தது.

இங்கிலாந்து- நியூசிலாந்து அணிகளுக்கு இடையிலான 3-வது ஒருநாள் போட்டி சவுதாம்ப்டனில் நேற்று நடைபெற்றது.

நாணயச்சுழற்சியில் வென்ற இங்கிலாந்து அணியின் தலைவர் ஓய்ன் மோர்கன் முதலில் துடுப்பாட்டத்தை தேர்வு செய்தார்.

அதன்படி களமிறங்கிய இங்கிலாந்து அணிக்கு ஜேசன் ரோய் - அலெக்ஸ் ஹேல்ஸ் இணை ஆரம்பம் கொடுத்தது.

இந்த இணை தமக்கிடையில் 34 ஓட்டங்களை இணைப்பாட்டமாகப் பகிர்ந்திருந்த போது ஹேல்ஸ் 23 ஓட்டங்களில் பென் வீலர் என்ற அறிமுகப்பந்துவீச்சாளரின்பந்திலும், ரோய் 9 ஓட்டங்களுடன் ரிம் சௌதி யின் பந்திலும் அடுத்தடுத்து ஆட்டமிழந்து அதிர்ச்சியளித்தனர்.

எனினும் 3ஆவது விக்கெட்டுக்காக இணை சேர்ந்த ஜோ ரூட் - மோர்கன் அதிரடியாக விளையாடி ஓட்டங்களை சேர்த்ததுடன் அணியின் சரிவை தடுத்து நிறுத்தியது.

இதனால் இங்கிலாந்தின் ஓட்ட விகிதம் ஜெட் வேகத்தில் உயர்ந்



தது. இந்த ஜோடி 3ஆவது விக்கெட்டுக்கு 105 ஓட்டங்களை இணைப் பாட் டமாகப் பகிர்ந்திருந்த வேளையில், சிறப்பாக துடுப்பெடுத்தாடிக் கொண்டிருந்த ரூட் 54 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார்.

தொடர்ந்து களமிறங்கிய பென் ஸ்ரோக்ஸ் களத்தில் மோர்கனுடன் இணைந்தார்.

இவ் ஜோடியும் அதிரடியாக ஆட இங்கிலாந்தின் ஓட்ட எண்ணிக்கை சடுதியாக உயர்ந்தது.

இந்நிலையில் அணியின் ஓட்ட எண்ணிக்கை 194 ஓட்டங்களை எட்டியபோது மோர்கன் 71 ஓட்டங்களுடன் வில்லியம்ஸன் பந்தில் ஆட்டமிழந்தார்.

தொடர்ந்து வந்த வீரர்களும் அதிரடியான ஆட்டத்தை வெளிப்படுத்த இங்கிலாந்து அணியின் ஓட்ட எண்ணிக்கை அதிகரித்ததுடன், விக்கெட்டுக்களும் சரிந்தன.

ஸ்ரோக்ஸ் 47 பந்துகளில் 68 ஓட்டங்கள் எடுத்து 8-வது விக்கெட்டாக ஆட்டமிழக்கும்போது, இங்கிலாந்து 44 ஓவர்களில் 298 ஓட்டங்கள் எடுத்திருந்தது.

மேலும் 4 ஓட்டங்கள் எடுப்பதற்குள் மீதமுள்ள இரண்டு விக்கெட்டுக்களையும் இழந்த இங்கிலாந்து அணி 45.2 ஓவரில் சகல விக் கெட்டுக்களையும் இழந்து 302 ஓட்டங்களை குவித்தது.

மீதி 28 பந்துகள் இருக்கும் நிலையில் நிலைத்து நின்று விளையாடி இருந்தால் இங்கிலாந்து 350 ரன்களுக்கு மேல் குவித்திருக்கலாம்.

நியூசிலாந்து அணியின் பந்துவச்சில் வீலர், சௌதி ஆகியோர் தலா 3 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

303 ரன்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் தமது துடுப்பாட்டத்தை தொடர்ந்த நியூசிலாந்து அணியின் ஆரம்ப இரு விக்கெட்டுக்களும் (கப்ரில் 2, மக்கலம 34) ஓட்டங்களுக்குள் இழக்கப்பட்டாலும்,

3ஆவது விக்கெட்டுக்காக இணை சேர்ந்த ரெய்லர் - வில்லியம்சன் இணை தமக்கிடையில் 206 ஓட்டங்களை இணைப்பாட்டமாகப் பகிர்ந்தது.

இதில் இருவரும் சதங்களை (வில்லியம்சன் 118, ரெய்லர் 110) பகிர்ந்து அசத்தியதுடன் நியூசிலாந்தின் வெற்றியையும் உறுதி செய்தனர்.

இறுதியில் நியூசிலாந்து அணி 49 ஓவர்கள் நிறைவில் 7 விக்கெட்டுக்களை இழந்து வெற்றியிலக்கை அடைந்தது.

இப்போட்டியில் 3ஆவது விக்கெட்டுக்காக பகிரப்பட்ட 206 ஓட்டங்கள் இங்கிலாந்து - நியூசிலாந்து அணிகளுக்கு இடையிலான போட்டியொன்றில் நியூசிலாந்து அணி சார்பில் 3ஆவது விக்கெட்டுக்காக பகிரப்பட்ட சாதனை இணைப் பாட்ட ஓட்டங்களாகும்.

இதற்கு முன்பு நியூசிலாந்தின் மார்ட்டின் குரே - கௌரத் இணை 1984இல் இடம்பெற்ற போட்டியொன்றில் 164 ஓட்டங்களை பகிர்ந்திருந்திருந்தனர்.

போட்டியின் ஆட்டநாயகனாக நியூசிலாந்து அணியின் வில்லியம்ஸ் தெரிவானார்.

# யாழ்ப்பாண வங்கி விரைவில் உதயம்

யாழ்ப்பாண வங்கி என்ற பெயரில் வணிக வங்கியொன்றை நிறுவும் முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

பாங்க் ஒப் ஜப்னா என்னும் பெயரில் இந்த வங்கி இயங்க உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

வர்த்தகர்கள்சிலர் இந்த வங்கியை அமைப்பது குறித்து மத்திய வங்கியுடன் விண்ணப்பித்துள்ளனர்.

பிரிட்டன் மற்றும் ஜேர்மனியில் வர்த்தக நடவடிக்கைளில் ஈடுபட்டு வரும் வர்த்தகர்களே இவ்வாறு வங்கி ஆரம்பிக்கும் முனைப்புக்களில் ஈடுபட்டுள்ளனர்.

வடக்கு மக்களுக்கு தேவையான வியாபார மற்றும் அபிவிருத்திக் கடன்களை வழங்குவது இந்த வங்கியின் பிரதான நோக்கமாகும்.

இலங்கையின் தற்போதைய சட்டத்தின் அடிப்படையில் வணிக வங்கியொன்று ஆரம்பிக்க 500 மில லியன் பங்கு மூலதனம் இருக்க வேண்டும்.

வங்கிக்கு மத்திய வங்கி அனுமதியளித்தால் எதிர்வரும் மாத ங்களில் வங்கியை நிறுவும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படும் என கொழும்பு ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது. (எ-1)

மழையினால் பாதிக்கப்பட்ட

# இந்தியா-பங்களாதேஷ் டெஸ்ட் சமனிலையில் முடிவுற்றது

வருணபகவானின்கடுமையான விடாப்பிடிக்குள் நடைபெற்ற இந்தியா - பங்களாதேஷ் அணிகளுக்கு இடையிலான பதுல்லா டெஸ்ட் சமனிலையில் முடிவுற்றது.

இந்தியா - பங்காளதேஷ் அணிகளுக்கு இடையிலான ஒரேயொரு போட்டியைக் கொண்ட டெஸ்ட் போட்டி பதுல்லாவில் நடைபெற்றது.

நாணயச்சுழற்சியில் வென்று முதலில் துடுப்பெடுத்தாடிய இந்திய அணி முதல் இன்னிங்சில் 6 விக்கெட்டுக்கள் இழப்பிற்கு 462 ஓட்டங்கள் எடுத்த நிலையில் ஆட்டத்தை இடைநிறுத்தியது.

இதில் தவான் (173), விஜய் (150) சதம் அடித்து அசத்தினர்.

தொடர்ந்து தமது முதல் இன்னிங்ஸை 4ஆம் நாளில் ஆரம்பித்த பங்களாதேஷ் அணி. முதல் நாளில இருந்தே மழை குறுக்கிட்டதால் ஆட்டத்தின் பெரும்பகுதி மழையால் பாதிக்கப்பட்டது. இதனால் பங்காளதேஷ் முதல் இன்னிங்சை முடிக்குமா என்ற சந்தேகம் கிரிக்கெட் ரசிகர்கள் மத்தியில் எழுந்தது.

4ஆவது நாள் ஆட்டநேர முடிவில் 3 விக்கெட்டுக்கள் இழப்புக்கு 111 ஓட்டங்கள் எடுத்திருந்த நிலையில நேற்று ஐந்தாவது நாள் ஆட்டத்தை தொடர்ந்தது பங்களாதேஷ்,

எனினும் 5ஆவதும் இறுதியுமான நாளாட்டமும் மழையால் தாமதமாக தொடங்கியது. தமது முதல் இன்னிங்ஸை தொடர்ந்த பங்களாதேஷ் அணி 256 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுக்களையும் இழந்து பொலோ-ஒன் ஆனது.

பொலோ-ஒன்னின் படி 2-வது இன்னிங்சுக்காக துடுப்பெடுத்தாட களமிறங்கிய பங்களாதேஷின் துடுப்பாட்டம் 27 ஓவர்களுக்கு மட்



டுப்படுத்தப்பட்டது.

தமீம்இக்பால், இம்ருல்கெய்ஸ்தொடக்க வீரர்களாக களம் இறங்கி னர்.

பங்களாதேஷ் 15 ஓவர்கள் முடிவில் விக்கெட் இழப்பின்றி 23 ஓட்டங்கள் எடுத்திருந்து.

இதனால் போட்டி எந்த பாதிப்பையும் ஏற்படுத்தாததால் இரண்டு அணியின் தலைவர்களும் போட்டியை முடித்துக்கொள்ள சம்மதித்தனர். இதனால் போட்டி சமனிலையானது.







மக்கள் வங்கியின் 54ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு குருதிக் கொடையாளர் தினமான நேற்று நடைபெற்ற இரத்ததான முகாமில் இரத்ததானம் வழங்கிய குருதிக் கொடையாளிக்கு சான்றிதழ் வழங்கப்படுவதையும் மக்கள் வங்கியின் ஆண்டு நிறைவை முன்னிட்டு மரம் வழங்கப்படுவதையும் குருதிக் கொடையாளர்களையும் படங்களில் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஐக்கிய தேசி...

நேற்று இடம்பெற்ற கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே ஜனாதிபதி இவ்வாறு தெரிவித்துள்ளார்.

நாட்டுக்குத் தேவையான அரசியல் மற்றும் சமூக மாற்றத்துக்காக உயிரைக் கொடுதது உழைப்பதற்கு தான் தயார் எனவும் ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

சமூக மாற்றமொன்றுக்காக உழைத்த எஸ்.டபிள்யு.ஆர்.டீ. பண்டாரநாயக்க போன்றவர்களின் தியாகம் நாட்டிற்கு மீண்டும் தேவைப்படுகின்றது.

சமூக மாற்றங்களுக்காக உழைத்த உலக தலைவர்கள் பல்வேறு சவால்களுக்கு முகம் கொடுத்தனர், சிலர் தமது உயிரையும் தியாகம் செய்தனர்.

இருந்த போதிலும், எந்தவொரு சவாலின் முன்னாலும் பின்வாங்காமல் சகல சமூக மற்றும் அரசியல் சக்திகளையும் ஒன்றிணைத்துக் கொண்டு நாட்டுக்குத் தேவையான சமூக, அரசியல், பொருளாதார மாற்றத்தை நோக்கி தான் அர்ப்பணிப்புடன் செயற்படுவேன் எனவும் ஜனாதிபதி மேலும் தெரிவித்துள்ளார். (எ-1)


### தவறிவிட்டது

பருத்தித்துறையில் இருந்து யாழ்ப்பாணம் செல்லும் 750 இலக்கமுடைய இ.போ.ச. பேருந்தில் 08.06.2015 அன்று தனபாலசிங்கம் வைஷ்ணவியின் 926522736V எனும் இலக்கமுடைய தே.அ.அட்டை தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து கீழ்க்காணும் தொலைபேசி இலக்கத்திற்கு தொடர்புகொள்ளவும்.

கண்டெடுத்து தருபவர்க்கு தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

(C-1277)

தொடர்புகளுக்கு : 077 60 34 513

### விற்பனைக்கு

15 அடி நீளம் 4 அடி அகலம் கொண்ட புததம் புதய விளம்பரப் பலகை விற்பனைக்குண்டு. புதிதாக ஸ்தாபனம் திறப்பவர்களுக்கு உகந்தது. மிகவும் குறைந்த விலையில் பெற்றுக் கொள்ளலாம்.

### தேவை

மூக்கு கண்ணாடியகத்திற்கு பெண் உதவியாளர் தேவை. மாநகர சபைக் குட்பட்டவர்கள் மட்டும் விண்ணப்பிக்கவும்.

தொடர்புகளுக்கு : 077 31 18 354
எனும் இலக்கத்துடன்
தொடர்பு கொள்ளவும்

(C-1274)


## ஒக்ரோபர் மாதம் வரையும்...

பேரணி மேடைகளில் அவர் ஏறாமைக்கு காரணமும் இதுவென தெரிவிக்கப்படுகின்றது.

ஏற்பாடு செய்யப்படுகின்ற அனைத்து பேரணிகளிலும் மகிந்த கலந்து கொள்வார் என அறிவித்த போதிலும் அவர் எந்த ஒரு பேரணி மேடைகளிலும் ஏறுவதில்லை.

மாத்தறையில் இடம்பெற்ற பேரணியில் மக்களை சேர்த்துக் கொள்வதற்காக மகிந்த மேடை ஏறுவார் என பேரணி அமைப்பாளர்கள் அறிவித்த போதிலும், அவர சிறிது நேரம் மக்கள் மத்தியில் இருந்து விட்டு சென்றுவிட்டார்.

கடந்த ஜனாதிபதி தேர்தலின் போது மகிந்த தோல்வியடைவார் என கூறிய இச் சோதிடர் மகிந்த ராஜபக்ஷவின் கிரகநிலை குறித்து மேற்கொள்ள வேண்டிய யாகம் பற்றி அறிவுரை வழங்கியுள்ளார்.

மகிந்த ராஜபக்ஷவும் அவரின் அறிவுரைக்கமைய செயற்படுவதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

சோதிடரின் அறிவுரைக்கமைய தற்போது சிறப்பு மந்திர தாயத்துகள் தயாரிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது.

விகாரைகளில் சென்று மத வழிபாடுகளில் தொடர்ந்து ஈடுபட வேண்டும் எனவும் சோதிடர் குறிப்பிட்டுள்ளார்.

இப் பிரபல சோதிடரின் கருத்திற்கமைய மகிந்த மீண்டும் 21 வருடத்திற்கு பிறகே அதிகாரத்திற்கு வரமுடியும். அதன் போது அவரது வயது 90ஐ நெருங்கியிருக்...

அதுவரை தன்னுடைய...
...ரைக்கமைய செயற்பட்டால் ...
வெறுப்புக்கு ஆளாகாம...
கலாம் என சோதிடர் கூறி...

எனவே சோதிடரின்...
ரைக்கு தலையசைத்த...
ராஜபக்ஷ அதிகாரத்திற்...
கனவை தகர்த்து விட்...
மகன் நாமல் ராஜபக்ஷ...
காரத்திற்கு கொண்டுவ...
சிப்பதாக தகவல் வெளிய...
ளது.

## 48 மணி...

இருக்கின்றனர்.

இதனால், ரணில் விக்கிர மசிங்கவை வீட்டுக்கு அனுப்பி விட்டு மகிந்த ராஜபக்ஷவின் ஆசீர்வாதத்துடன் அரசாங்கத்தை ஏற்படுத்த முடியும் எனவும் தினேஷ் குணவர்தன குறிப்பிட்டுள்ளார்.

தினேஷ் குணவர்தன தனது மக்கள் ஐக்கிய முன்னணியின் ஊடாக தனித்து பல வருடங்களாக தேர்தலில் போட்டியிட்ட போதிலும் அவரால் ஒரு நாடாளுமன்ற ஆசனத்தைக் கூட கைப்பற்ற முடியவில்லை.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் இணைந்ததன் காரணமாகவே அவரால், நாடாளுமன்ற உறுப்பினராகி அமைச்சர் பதவியையும் வகிக்க முடிந்தது.

மகிந்த ராஜபக்ஷ ஆதரவாளரான தினேஷ் குணவர்தன கடும் போக்கு சிங்கள தேசியவாதியாவார்.

எதிர்வரும் தேர்தலில் இவருக்கு தேர்தலில்போட்டியிட வாய்ப்பு கிடைக்காது எனக் கூறப்படுகிறது.

இதனால், தோல்வியடைந்த மகிந்த ராஜபக்ஷ தோளில் ஏறி நாடாளுமன்றத்திற்குவர தினேஷ் குணவர்தன முயற்சித்து வருவதாக அரசியல் அவதானிகள் சுட்டிக்காட்டியுள்ளனர். (எ-1)

## 100 நாட்களுக்குப்பின்...

தற்போதைய அரசாங்கத்தில் அமைச்சர் பதவி பெற்றுக்கொண்டுள்ளதனால் எதிர்க்கட்சி தலைவர் பதவியில் செயற்பட முடியாதென அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இவை அனைத்தையும் கவனத்தில் கொண்டு எதிர்க்கட்சி தலைவர் வெகு விரைவில் அப்பதவியில் இருநது விலக வேண்டும் என அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (எ-1)

## பிரதமருக்கு எதிரான...

இந்த நம்பிக்கையில்லாப் பிரேரணையை உடனடியாக விவாதத்துக்கு எடுத்துக் கொள்ள வேண்டும் என ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியைச் சேர்ந்த சிலர் வலியுறுத்தி வருகின்றனர்.

அதேவேளை, புதிய தேர்தல் முறைமை தொடர்பிலான 20-வது திருத்தச் சட்டத்தை நாடாளுமன்றத்தில் நிறைவேற்றியதன் பின்னர், பிரதமருக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையை விவாதத்துக்கு எடுத்துக் கொள்ள வேண்டும் என ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியைச் சேர்ந்த மற்றுமொரு சாரார் வலியுறுத்தியுள்ளதாலேயே இந்த கருத்து முரணபாடுகள் உக்கிரமடைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இச்சந்தர்ப்பத்தில் புதிய தேர்தல் முறைமை தொடர்பிலான 20-வது திருத்தச் சட்டத்தை நிறைவேற்றிக் கொள்வதே மிக முக்கிய விடயம் என ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் சிரேஷ்ட உறுப்பினர்கள் பலர் தெரிவித்துள்ளனர்.

இதனடிப்படையில் பார்க்கின்ற பொழுது 20-வது திருத்தச் சட்டத்தை நிறைவேற்றிய தன் பின்னர், பிரதமருக்கு எதிரான நம்பிக்கையில்லா பிரேரணையை விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளலாம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை, 20-வது திருத்தச் சட்டத்தை நிறைவேற்றுவதற்கு முன்பாக பிரதமருக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையை விவாதத்துக்கு எடுத்துக் கொள்ள வேண்டும் என வலியுறுத்தும் பிரிவினர், நம்பிக்கையில்லா பிரேரணையின் மூலம் பிரதமரை பதவிநீக்கம் செய்து ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி அரசாங்கம் ஒன்றை அமைத்த பன்னர் 20-வது திருத்தச் சட்டத்தை நிறைவேற்றிக் கொள்ள வேண்டும் எனவும் வலியுறுத்தி வருவதாக தெரிவிக்கப்படுகின்றது. (எ-1)

## மாணவி வித்...

விரிவான அறிக்கைகளை...
பிப்பர் என கூறப்பட்டுள்ள...

இதேவேளை கடந்த ...
திகதி நடைபெற்ற முதலாம்...
விசாரணைகளின் போது ...
நபர்கள் 9 பேரும் ஊர்காவ...
நீதிமன்றில் ஆஜர்படுத்த...
விசாரணைகள் இடம்பெற்ற...

இவ்வழக்கினை விசா...
செய்த ஊர்காவற்றுறை நீதி...
நீதவான் செ.லெனின்குமார் ...
வரை வழக்கை ஒத்தி ...
துடன் சந்தேக நபர்கள் சார்...
டத்தரணி ஒருவரையும் நிய...
மாறும் பணிப்புரை விடுத்...
தார்.

வித்தியாவின் பெற்றோ...
பாக சிரேஷ்ட மனிதவுரி...
சட்டத்தரணி கே.வி.தவரா...
ராகின்றமை குறிப்பிடத்தக்...

## மனைவி மீதா...

வனவு செய்ததாகவும் குற்...
முன்வைக்கப்பட்டுள்ளது...

இது தொடர்பில் மகிந்த ...
அறிக்கை ஒன்றை வெ...
ளார்.

அதில், முன்ன...
சந்திரிகா குமாரதுங்க ...
இந்தக் குற்றச்சாட்டு ...
என்று குறிப்பிட்டுள்ளார்...

ஷிராந்தி ராஜபக்ஷ ...
டொரிங்டன் அவன்யூ...
ஒன்றை கொள்வனவு செ...
தொடர்பில் தகவல் வழங்...
அவர், ஷிராந்தியின் ம...
தில்சான் விக்கிரமசிங்...
வர்த்தகர், அவரே 35 லட்ச...
கடன் பெற்றுக் கொடுத்து ...
கொள்வனவு செய்து கொ...
என்று குறிப்...
ளார்.

இதேவே...
காலையில்அ...
யில் விபத்...
ளான வாக...
முடையது...
வெளியா...
வலையும்...
ராஜபக்ஷ கு...
டுள்ளார்.

இது உல...
வுத்திட்டத்தி...
சிரிலிய சவி...
யத்துக்கு அ...
பாக வழங்கப்...
என்றும் ...
வித்துள்...

## கஞ்சா...

கஞ்சா விற்...
பொதுமக்க...
வழங்கப்பட்...
வலை அடுத்தே...
ஸார் திடீரென...
பகுதியில் ...
கொண்ட தேடு...
போது இருவ...
கஞ்சா பொதி...
கைது செய்ய...
டுள்ளனர்.

இது தொடர்...
மேலதிக விசார...
களை பொலி...
மேற்கொண்டு...
கின்றனர். ...


### BRITISH COLLEGE OF HIGHER STUDIES

BCHS

சர்வதேச பாடத்திட்டத்தின் தராதரத்திற்கு அமைய
நவீன தொழில் நுட்பத்துடன் வழங்கும் கற்கை நெறிகள்

**Spoken English with Grammar - Quick Learning Course** 1½ Months

ஆங்கிலத்தில் சரளமாகக் கதைக்க விரும்புவர்களுக்காகவே நடாத்தப்படுகிறது. நீங்கள் ஆங்கிலத்தில் உரையாட 100% உத்தரவாதம் தரப்படும். மாணவர்களின் நலன் கருதி Dictionary, CD/DVD, Tutes போன்றவை இலவசமாக வழங்கப்படும்.

இக் கற்கை நெறிகள் பரீட்சை எழுதிய மாணவர்கள், தொழில் தேடுவோர், தொழில் புரிவோர் மற்றும் ஆங்கிலம் கற்க விரும்பும் அனைவருக்கும் ஏற்றது.

**Diploma In English** 2 Months

ஒரு தொழில் தேடுவதாயினும் சரி, உயர் கல்வியினைத் தொடருவதாயினும் சரி ஆங்கிலத்தின் தேவையும், அதிலே உங்களின் புலமையும் இன்றியமையாதது. இவை யாவையும் கருத்திலே கொண்டு இக் கற்கைநெறி வடிவமைக்கப்பட்டுள்ளது. Spoken English course முடித்த அனைவரும் பயில வேண்டிய பாட நெறி.

★ வகுப்புகள் யாவும் புதிய தொழில் நுட்பத்திற்கமைவாக(Audio & Video visuals) கூடுதல் பயிற்சிகளுடன் நடாத்தப்படும்
★ எமது கற்கை நெறிகள் Reading,Writing, Speaking, Listening என வகைப்படுத்தப்பட்டு ஒவ்வொரு பிரிவும் மிகச் சிறந்த ஆசிரியர்களினால் கற்பிக்கப்படுகின்றது
★ Excellent Teacher's Panel & Individual Attention
★ கிழமை, வார இறுதி நாட்களில் காலை, மாலை நேர வகுப்புகள் உண்டு. குழுக்களாக அல்லது நிறுவனங்களைச் சேர்ந்தோர் குழவாக வரின் அவர்களுக்கு விசேட வகுப்புகள் ஆரம்பிக்கப்படும்.

(C-1276)

உத்தியோகத்தர்கட்கு, மாணவர்கட்கு சனி, ஞாயிறு வகுப்புகள்
20.06.2015 காலை 10.00, மாலை 2.30 ஆரம்பமாகின்றது

**Batches Starts On**

| | | |
|---|---|---|
| 17.06.2015@10.00am | | 22.06.2015@ 9.00am |
| 19.06.2015@ 9.00am | 20.06.2015@ 9.00am | 27.06.2015@ 9.00am |

British College of Higher Studies
No.15, Sirambiyady Lane (Off Stanley Road), Above Sathosa SM, Jaffna. Tel :021-2224550
HotLine(S) 0777585913, 0777222422, 0714299935



### FALC FRENCH LANGUAGE CENTRE
REGISTERED FRENCH CENTRE.

### FRENCH CLASSES

(C-1278)

Embassy ஆல் அங்கிகரிக்கப்பட்ட International Diploma in French
FRANCE, CANADA, SWISS, BELGIUM செல்வோர் கற்கிறார்கள்.

விரிவுரையாளர் : MR. V. JEGAN (Trained teacher in France - 2007, University இல் French விரிவுரைகளை மேற் கொண்டவரும்)

கடந்த March மாத DELF A1, A2 Exam இல் 100 % சித்தியடைந்துள்ளனர்...
938 மாணவர்கள் இதுவரை French கற்றுள்ளனர்..

Register now : 0779 789 456 / 021 221 7781

| | | |
|---|---|---|
| No. 40, Palaly Road, Jaffna.(ஆரியகுளம்) | No.181, 1st Floor, பிரதான வீதி, நெல்லியடி. 021 320 2973. | கண்டி வீதி, அரசடி, சாவகச்சேரி |



### VACANCIES ஆண்/பெண் (Study & Work) Management

யாழ்ப்பாணத்தில் இயங்கிவரும் சர்வதேச நீதியில் செயல்படும் நிறுவனத்திற்கு முகாமைத்துவ பயிற்சிக்கு ஆட்கள் தேவை.

- O/L, A/L சித்தியடைந்த ஆண் / பெண் இருபாலாரும் தொடர்பு கொளளலாம் (வயதெல்லை 18-28)
- ஆரம்ப கொடுப்பனவு 12,000 / இல் இருந்து
- பயிற்சியின் பின்னர் EPF / ETF அடங்கலாக ரூ.50,000/- மேல் பெறலாம் (தொழில் நிரந்தரமாக்கப்படும்)
- கிளிநொச்சி / முல்லைத்தீவு / வவுனியா / மன்னார் மாவட்டங்களிலிருந்து தெரிவு செய்யப்படுபவர்களுக்கு உணவு / தங்குமிடவசதி செய்து கொடுக்கப்படும்.
- ஞாயிறு / போயா விடுமுறை நாட்கள். (751)

தொடர்புகளுக்கு : 077 44 58 134 / 021 49 93 166



### பதவி வெற்றிடங்கள்

நீங்கள் தொழில் தேடுபவரா?

விஸ்தரிக்கப்பட்டு 32 வருடகாலமாக இலங்கையில் இயங்கி வரும் எமது நிறுவனத்திற்கு O/L படித்த துடிப்பான இளைஞர், யுவதிகள் தேவை.

- வட மாகாணத்தில் (முல்லைத்தீவு, கிளிநொச்சி, மன்னார், வவுனியா, யாழ்ப்பாணம்) ஆகிய பிரதேசத்தில் உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
- தங்குமிடம் & உணவு வசதிகள் இலவசம்
- சம்பளம் பயிற்சியின் போது 15,000/- பின் 45, 000 /-
- அனுபவம் அவசியமற்றது (C-1280)

தொடர்புகளுக்கு : 0777 981 471, 077 13 63 797
(அனுமதிகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளன இன்றே அழையுங்கள்)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 15.06.2015 இல் அச்சிட்டு வெளியிடப்பட்...